# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 கார்த்திகை 02 புதன்கிழமை (17~11~2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:358


## நீதிமன்றுக்குக் கொண்டுசெல்லப்பட்ட இரண்டு முக்கிய கைதிகள் தப்பினர்!

### பருத்தித்துறையில் நேற்றுச் சம்பவம்

கரவெட்டி, நவ.17

விசாரணைக்காகக் கொண்டுசெல்லப்பட்ட கைதிகள் இருவர் பொலீஸாருக்கு 'டிமிக்கி' கொடுத்துவிட்டுத் தப்பிவிட்டனர்.

பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றத்துக்கு முன்பாக நேற்று மாலை 4.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

கப்பூது பகுதியில் இடம்பெற்ற பெரும் கொள்ளைச் சம்பவம் உட்படப் பல கொள்ளைகள் மற்றும் மணல்கடத்தல் ஆகிய குற்றச் செயல்களுடன் தொடர்புபட்டிருந்த சந்தேகநபர்கள் இருவரே இவ்வாறு தப்பியிருக்கின்றனர்.

யாழ். சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இவர்கள் இருவரையும் நேற்று வழக்கு விசாரணைக்காகப் பொலீஸார் பருத்தித்துறை நீதிமன்றத்துக்குக் கொண்டு சென்றிருந்தனர். விசாரணைகள் முடிந்த பின்னர்

(16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.வந்த ஹை-ஏஸ் வான் மீது பொலீஸார் சுட்டதில் வயோதிபர் பலி!

### அநுராதபுரத்தில் நேற்று அதிகாலை சம்பவம்

வலி.கிழக்கு,நவ.17

கொழும்பில் இருநது யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த பயணிகள் வான் ஒன்றின் மீது அநுராதபுரம் - யாழ்ப்பாணம் சந்தியில் நேற்று அதிகாலை நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பயணி ஒருவர் உயிரிழந்தார். பொலீஸாரே இத்துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டனர் என்று கூறப்படுகிறது.

உயிரிழந்தவர் யாழ்ப்பாணம் கோண்டாவிலைச் சேர்ந்த ராமலிங்கம் சுப்பிரமணியம் (கோண்டாவில் மணியம் - வயது 60) எனத் தெரிவிக்கப்படுகின்றது.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கான வாகனம் அந்த இடத்தில் நிறுத்தப்படாமல் நேரடியாக வவுனியா பொலீஸ்நிலையம் சென்றடைந்து அங்கு பொலீஸில் முறைப்பாடு செய்யப்பட்டது.

(16ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சு முயற்சியில் ஜனாதிபதியுடன் இணங்கிப்போக ரணில் தயாராம்!

## ஆனால் ஜே.வி.பியை வழிக்குக் கொண்டுவருவது அரசின் பொறுப்பு என ஐ.தே.கட்சி அறிவிப்பு

கொழும்பு,நவம்பர்17

**விடுதலைப் புலிகளுடன் அமைதிப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கு வசதியாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடன் பொது இணக்கப்பாடு ஒன்றை ஏற்படுத்திக்கொள்ள எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தயார். இது விடயத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுடன் நேரடியாகப் பேசி அவரது கரத்தைப் பலப்படுத்துவதற்கு ரணில் விக்கிரமசிங்க முடிவு செய்துள்ளார். அதேவேளை, இவ்விடயத்தில் தனது பிரதான பங்காளிக்கட்சியான ஜே.வி.பியுடன் பேசி, அதை வழிக்குக் கொண்டுவரவேண்டியது அரசுத் தரப்பின் முக்கிய பொறுப்பாகும்.**

**- இப்படி அறிவித்திருக்கின்றது ஐக்கிய தேசியக் கட்சி.**

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த முன்னாள் அமைச்சரும், ஐதேகட்சிப் பேச்சாளருமான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

பேச்சுக்கள் நேர்மையாக நடக்கவேண்டும். உள்ளொன்றுவைத்துப் புறமொன்று பேசுவதை நாம் விரும்பவில்லை. பிரதான கட்சிகளின் இருதலைவர்களும் நேரடியாகப் பேசுவதன் மூலம் முக்கிய முடிவுகளை எடுக்கமுடியும்.

ஜனாதிபதி குமாரதுங்க இந்தியாவுக்குச் செல்வதற்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்கவை அழைத்துப் பேசினார். அதுவோர் ஆரோக்கியமான விடயம்.

கண்டியில் மல்வத்தை மகாநாயக்க தேரரை நானும், ஐ.தே.க.தலைவரும் மலிக் சமரவிக்கிரமவும் நேரடியாகச் சந்தித்து உரையாடிய போது, அவர் பிரதான கட்சிகள் இரண்டையும் ஒரு பொது இணக்கப்பாட்டுக்கு வருமாறு வலியுறுத்தினார்.

அவரின் அக்கூற்றை நாம் முழுமையாக ஏற்றுக்கொண்டோம். அதன் அடிப்படையிலேயே ஐ.தே.கவும் இந்த முடிவை எடுத்துள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## கொரியாவில் சட்டவிரோதமாகத் தங்கியுள்ள இலங்கையர் வெளியேற்றம்

கொழும்பு,நவ.17

கொரியாவில் சட்டவிரோதமாகத் தங்கியிருந்து தொழில்புரியும் இலங்கையர்கள் உடனடியாகக் கொரியாவைவிட்டு வெளியேற வேண்டும்.

-இவ்வாறு கொரியாவின் குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் உத்தரவிட்டுள்ளதாக இலங்கை வேலைவாய்ப்புப் பணியகம் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கொரியாவில் சட்டவிரோதமான முறையில் தங்கியிருந்து தொழில்புரியும் இலங்கையர்கள் உட்பட அனைத்து வெளிநாட்டவர்களும் தங்களின் தொழிலை விட்டுவிட்டு உடனடியாக நாட்டைவிட்டு வெளியேறவேண்டும். இதற்கான பொதுமன்னிப்புக் காலம் மேலும் நீடிக்கப்படமாட்டாது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை அலுவலகம் திருமலையில்

கிளிநொச்சி,நவ.17

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கு மாவட்டங்கள் தோறும் அலுவலகங்கள் திறக்கப்படவுள்ளன. அதன் தலைமையகம் திருகோணமலையில் அமைக்கப்படும்.

தலைமையலுவலகம் அமைக்கும் வேலைகளுகென ஒரு குழுவும் நியமிக்கப்பட்டுள்ளது. இந்தக் குழுவுக்குத் திருமலை மாவட்ட எம்.பி. துரை ரட்ணசிங்கம் தலைமை வகிப்பார். மட்டக்களப்பு மாவட்ட எம்.பி.ஜெயானந்த மூர்த்தி மற்றும் வன்னி மாவட்ட எம்.பி.சிவநாதன் கிஷோர் ஆகியோரும் அவருக்கு உதவியாக இருப்பார்கள். புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் இவர்களுக்கு அனுசரணையாகச் செயற்படுவார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுக்குப் புலிகள் வருகின்றார்களா? இல்லையா? திடமாக அறிவிக்க ஜனாதிபதி சந்திரிகா காலக்கெடு!

### அரச தொலைக்காட்சிப் பேட்டியில் காட்டம்

சமாதானப் பேச்சுக்கு விடுதலைப் புலிகள் வருகிறார்களா? இல்லையா? என்பதை அவர்கள் இந்த மாதத்துக்குள் அறிவித்தாக வேண்டும். அரசு எப்போதும் பேச்சுக்குத் தயாராகவே இருக்கிறது. புலிகள்தான் வெவ்வேறு காரணங்களைச் சொல்லிக்கொண்டு பேச்சுக்கு வராதிருக்கிறார்கள்.

- இவ்வாறு குற்றஞ்சாட்டுகிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா.

நேற்றிரவு அரச தொலைக்காட்சியான 'ரூபவாஹினி'யில் நடந்த நேர்காணல் நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இரவு 9.45 மணியளவில் இருந்து ஒன்றரை மணித்தியாலங்களுக்கு ஜனாதிபதியின் இந்த நேர்காணல் இடம்பெற்றது. தனிச் சிங்களத்தில் அவர் பேட்டியளித்தார்.

புலிகள் அவ்வப்போது வெவ்வேறு காரணங்கள் சொல்லிப் பேச்சுக்கு வராதிருக்கிறார்கள். இவற்றை விடுத்துப் பேச்சில் விருப்பமா? இல்லையா? என்று அவர்கள் திடமாக அறிவிக்கவேண்டும்.

பேச்சை மீள ஆரம்பிக்க அரசு தயார். இதறகான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டுதான் உள்ளது. பேச்சு மேசைக்கு வரவேண்டிய பொறுப்பு புலிகளைச் சார்ந்தது.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு வேண்டும். இதற்குத் தெற்கின் இரு பிரதான கட்சிகளும் தயார். நாட்டில் இந்த இணக்கம் முதல் தடவையாக ஏற்பட்டுள்ளது.



நான் தலைமை தாங்கும் கூட்டுக்குள் குழப்பம் ஏதுமில்லை. பிரச்சினை இருப்பதாகப் புலிகள்தான் பிரசாரப்படுத்துகிறார்கள். உண்மையில் அப்படியில்லை.

ஜே.வி.பியினர்கூட பேச்சை ஆரம்பிக்கச் சொல்லியிருக்கின்றார்கள். சமாதானப் பேச்சு விடயத்தில் ஜே.வி.பி. முரண்பட்டு நிற்கிறது என்பது பொய். புலிகள் தான் பேச்சை ஆரம்பிப்பதற்கான அவர்களின் விருப்பை அறிவிக்கவேண்டும்.

(16ஆம் பக்கம் பார்க்க)


அதிகரிக்கும் வட்டி

தேசிய சேமிப்பு வங்கியில் புதிய நிலையான வைப்பு வட்டிக்களின் தொகை அதிகரித்து வருகின்றதை அவதானியுங்கள். இன்று வழங்கப்படும் வட்டி விகிதங்களில் இவையே மிகவும் கவர்ச்சிகரமானவை என்பதை நீங்கள் அறிவீர்கள்.

| தவணை வைப்புக்கள் | | வருடாந்த வட்டிவிகிதம் | சராசரி நிறைவேற்றுவிகிதம் |
|---|---|---|---|
| *கௌரவ | | 9.75% | 10.20% |
| நஷனல் சேமிப்பு சான்றிதழ் (3-48 மாதங்களுக்கு) | | 7.75%-9.0% | 8.0% |
| நிலையான வைப்பு | *12 மாதங்கள் (மாதாந்தம்) | | |
| | ஓய்வூதியக்காரருக்கு | 8.25% | 8.57% |
| | 12 மாதங்கள் (மாதாந்தம்) | 7.75% | 8.03% |
| | 24 மாதங்கள் | 8.4% | 8.07% |
| | 12 மாதங்கள் | 8.0% | 8.0% |
| | 6 மாதங்கள் | 7.8% | 7.95% |
| | 3 மாதங்கள் | 7.7% | 7 92% |

*நிபந்தனைக்குட்பட்டது.

NSB

# சிறுவனை ஏமாற்றிக் கடத்தி சங்கிலியை அபகரித்த நபர்

## தாயுடன் ஆஸ்பத்திரிக்கு வந்த சமயம் சம்பவம்

யாழ்ப்பாணம்,நவ.17

யாழ். போதனா வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவில் மருந்து எடுப்பதற்காகத் தாயாருடன் வந்திருந்த சிறுவனை, வெகு சாதுரியமாகக் கடத்திச்சென்ற நபர் ஒருவர் ஐந்து சந்தி வண்ணார்பண்ணைப் பகுதியில் வைத்து தங்கச்சங்கிலியை அபகரித்துவிட்டு, சிறுவனைத் தெருவில் அநாதரவாக விட்டுச் சென்றுள்ளார்.

நேற்றுக் காலை 10 மணியளவில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த இராயப்பு தனுசியன் என்ற நான்கு வயதுச் சிறுவனே தனது முக்கால் பவுண் பெறுமதியான தங்கச்சங்கிலியை இழந்தவனாவான்.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது:-


தாயாருடன் நின்ற சிறுவனை மெதுவாக அழைத்த நபர் ஒருவர், 'அம்மா உன்னைக் கடைக்குக் கூட்டிச் செல்லச் சொன்னா' எனக் கூறி ஆஸ்பத்திரி வீதியில் தயாராக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சைக்கிளில் ஏற்றி, ஐந்து சந்தி, வண்ணார்பண்ணைப் பகுதியில் உள்ள மகப்பேற்று நிலையத்தின் முன்னால் இறக்கி விட்டுச் சென்றுள்ளார். அப்போது அந்த நபர் சிறுவனின் சட்டைப்பையினுள் இரண்டு 5 ரூபா நாணயங்களைப் போட்டுவிட்டு, 'சங்கிலியும் இதற்குள் உள்ளது' எனக் கூறிவிட்டுத் தப்பிச் சென்றுள்ளார்.

சிறுவனின் அலறல் சத்தம் கேட்டு அங்கு வந்த மகப்பேற்று நிலைய உத்தியோகத்தர்கள், சிறுவனின் நிலையை அறிந்து உடனடியாக யாழ். பொலீஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றுள்ளனர்.

இதேவேளை -

சிறுவனைக் காணாது தேடி அலைந்த சிறுவனின் தாயார் யாழ். பொலீஸ் நிலையத்தில் முறையிடுவதற்குச் சென்றுள்ளார். அங்கு வைத்துச் சிறுவன் தாயிடம் ஒப்படைக்கப் பட்டான்.

இச் சம்பவம் தொடர்பாக யாழ். பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது. சிறுவன் மிகவும் பயந்த நிலையில் காணப்படுகின்றான். (ஐ-12-15)







தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேச்சு நடத்தியபோது எடுக்கப்பட்ட படங்கள். *(படங்கள்: அலுவலகப்படப்பிடிப்பாளர்)*

# லஞ்சத் தடுப்பு ஆணைக்குழுவுக்கு புதிய ஆணையாளர்கள் நியமனமாவர்

## அரசமைப்புக் கவுன்ஸில் திங்களன்று கூடுகிறது

கொழும்பு,நவ.17

லஞ்ச ஊழலுக்கு எதிரான ஆணைக்குழுவிற்குப் புதிய ஆணையாளர்கள் நியமிக்கப் படவுள்ளனர்.

இதற்காக எதிர்வரும் 22ஆம் திகதி அரசமைப்புக் கவுன்ஸில் கூடவுள்ளது. தற்சமயம் லஞ்ச ஊழலுக்கு எதிரான ஆணைக்குழுவில் அங்கம் பெற்றுள்ள உறுப்பினர்களின் பதவிக்காலம் எதிர்வரும் டிசெம்பர் 14ஆம் திகதியுடன் முடிவடைகிறது.

இந்நிலையில், புதியவர்கள் மூவர் எதிர்வரும் 22ஆம் திகதி நியமிக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

லஞ்ச ஊழலுக்கு எதிரான ஆணைக்குழுவில் நியமிக்கப்படும் இருவர் ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர்களாகவோ அல்லது மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களாகவோ இருக்கவேண்டும் என்பது விதிமுறையாகும்.

இந்த ஆணைக்குழுவானது உயர்நீதிமன்றத்துக்கு நிகரான அதிகாரத்தைக் கொண்டிருப்பதன் காரணமாகவே அதற்கு ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதியரசர்கள் நியமிக்கப்படுகின்றனர் எனக் கூறப்பட்டது. (ஐ-க)

## ஆக்கத்திறன் கண்காட்சி

யாழ்ப்பாணம்,நவ.17

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழக முன்பள்ளி, கொக்குவில் இந்து முன்பள்ளி, கொக்குவில் சரஸ்வதி முன்பள்ளி, கொக்குவில் சி.சி.த.க. பாடசாலை ஆகியன இணைந்து நடத்தும் ஆக்கத்திறன் பொருள் காட்சி இன்று நடைபெறவுள்ளது.

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தில் காலை 9மணிமுதல் பிற்பகல் 4.30 மணிவரை கண்காட்சி இடம்பெறும். (ஐ)

# தேசிய அடையாள அட்டைகள் உயர்தரத்தில் வழங்கப்படுமாம்!

## ஆணையாளர் வெளியிடும் தகவல்

கொழும்பு,நவ.17

தேசிய அடையாள அட்டைகளை உயர்ந்த தரத்தில் வழங்க ஆட்பதிவுத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று கூறப்படுகின்றது.

தேர்தலில் வாக்களிக்கும் ஒருவர் அதற்கு அடையாள அட்டையைக் கட்டாயமாகச் சமர்ப்பிக்கவேண்டும் என வலியுறுத்தும் சட்டம் நடைமுறைக்கு வரும் சமயத்தில் இலங்கையின் அனைத்துப் பிரஜைகளும் தேசிய அடையாள அட்டையை வைத்திருப்பதைத் தாம் உறுதிப்படுத்தப்போகிறார் என ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் கே.பி. அபயரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கையில் 28 லட்சம் பேர்வரை அடையாள அட்டையின்றி உள்ளனர். அவர்களுக்கு உரியமுறையில் அடையாள அட்டைகளை வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கென 40 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பணத்தைப் பயன்படுத்தி, கணனி மூலம் தயாரிக்கப்பட்ட தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## 'வெளிச்சம்' வெளிவந்தது

கிளிநொச்சி,நவ.17

கலை பண்பாட்டுக் கழகத்தின் கலை இலக்கிய சமூக இதழான 'வெளிச்சம்' நேற்று வெளியாகியது.

இந்த இதழில் தமிழீழத் தேசியத் தலைவரின் பிறந்த தினத்தையொட்டிய சிறப்புக் கவிதை உட்பட பல்வேறு விடயங்களும் உள்ளடக்கப்பட்டு 88ஆவது இதழாக இது வெளிவந்துள்ளது. (3-12)

## சூரன்போர் இன்று

யாழ்ப்பாணம்,நவ.17

இந்து ஆலயங்கள் பலவற்றில் இன்று சூரசங்காரத் திருவிழா இடம்பெறவிருக்கின்றது.

கடந்த ஐந்து தினங்களாக அனுஷ்டிக்கப்பட்டுவந்த கந்தசஷ்டி விரதத்தின் இறுதி நாளான இன்று சூரசங்காரம் இடம்பெறவுள்ளது.

சூரன் போர் உற்சவம் முருகன் ஆலயங்களில் வெகு சிறப்பாக இடம்பெறும்.

நல்லூர் கந்தசுவாமி கோயிலில் இன்று மாலை சூரன்போர் இடம்பெறும். மாலை 4.30 மணிக்கு வசந்த மண்டபப் பூஜையை அடுத்து 4.45 மணிக்கு சுவாமி வீதி வலம்வந்து சூரனை சங்காரம் செய்வார். [illegible]

## சாயிசமித்தியில் மகளிர் தின நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம்,நவ.17

திருநெல்வேலியில் உள்ள யாழ். பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமையும் ஞாயிற்றுக் கிழமையும் மகளிர் தின நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

வெள்ளிக்கிழமை காலை ஆரம்பமாகும் நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறையைச் சேர்ந்த வைத்திய கலாநிதி எஸ். சிவபாலன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

மகளிர்தின விழா நிகழ்வுகள் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் அங்கு இடம்பெறவுள்ளன.

அன்றையதினம் 'வன்முறையற்ற தொடர் பாடல்' என்னும் தலைப்பில் யாழ். மருத்துவ பீட உளவளத் துணையாளர் திருமதி சாவித்திரி [illegible]ச்சந்திரன் உரையாற்றுவார். (ஐ)

# சிரானில் முஸ்லிம் பிரதிநிதித்துவம் திட்டமிட்டுக் குறைக்கப்பட்டது

## ஹக்கீம் குற்றச்சாட்டு

கொழும்பு,நவ.17

வடக்கு - கிழக்கில் புனர்வாழ்வுப் பணிகளுக்குப் பொறுப்பான 'சிரான்' அமைப்பில் முஸ்லிம்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் இல்லை. விடுதலைப் புலிகள் திட்டமிட்டு முஸ்லிம்களின் பிரதிநிதித்துவத்தைக் குறைத்து விட்டார்கள்.

- இப்படிக் கூறு[illegible]றார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம்.

யாழ். முஸ்லிம் இளைஞர் சமூகம் கொழும்பு குணசிங்கபுர பிரதீபா மண்டபத்தில் நடத்திய நிகழ்வு ஒன்றில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

சமாதானப் பேச்சுக்கள் மீள ஆரம்பிக்கப்படும்போது, 'சிரான்' அமைப்பும் மீளச் செயற்பட ஆரம்பிக்கும். ஆனால், எமது குரல் ஓங்கி ஒலிப்பதற்குரிய போதிய பிரதிநிதித்துவம் அங்கே இல்லை.

வேண்டுமென்றே எமது பிரதிநிதித்துவத்தைக் குறைக்க விடுதலைப் புலிகள் கட்டம் கட்டமாகத் தமது பிரதிநிதிகளின் எண்ணிக்கையைக் கூட்டினர். ஏழுக்கு ஏழு என்ற வீதத்தில் அவர்கள் உள்ளனர். இதில் முஸ்லிம் பிரதிநிதிகள் இருவரே இருக்கின்றனர் - என்றார் ஹக்கீம். (ஐ-3)

# ஆயுத ஒப்படைப்புக்கான மன்னிப்புக் காலம் நீடிப்பு

கொழும்பு,நவ.17

சட்டவிரோத ஆயுதங்களை அரசிடம் ஒப்படைப்பதற்காக வழக்கப்பட்ட பொதுமன்னிப்புக்காலம் மேலும் ஒரு மாதத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 30ஆம் திகதி முடிவடைய இருந்த இந்தப் பொது மன்னிப்புக்காலம் அடுத்த மாதம் 31ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதாக மக்கள் பாதுகாப்பு மற்றும் சட்டம், ஒழுங்கு தொடர்பான அமைச்சு அறிவித்துள்ளது.

நாட்டில் 50 ஆயிரம் முதல் 60 ஆயிரம் வரையான சட்டவிரோத ஆயுதங்கள் உள்ளன. எனினும், இதுவரையான - தற்போதைய - மன்னிப்புக் காலப்பகுதியில் - 1337 ஆயுதங்கள் மட்டுமே ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இக்காலப்பகுதியில் ஆயுதங்களை ஒப்படைக்கும் நபரிடம் எந்தக் கேள்வியும் கேட்க வேண்டாம் எனவும், அவர்களுக்கு எதிராக விசாரணைகளை நடத்த வேண்டாம் எனவும் பொலீஸாரை அமைச்சுக் கோரியுள்ளது.

இக்காலப்பகுதியில் ஒப்படைக்கப்படும் ஆயுதங்களுக்குச் சன்மானம் வழங்குமாறும் பணிக்கப்பட்டுள்ளது. இதற்காக 10 லட்சம் ரூபா வரை நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என அமைச்சின் செயலாளர் சந்திரா ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

இச் சட்டவிரோத ஆயுதங்களால் ஏற்படும் சமூகவிரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ஐ-க)

## மாவீரர் நாள் - 27

"எமக்கு ஒரு நாடு வேண்டும் - எமது மக்களுக்கு விடுதலை வேண்டும். எமது இனம் சுதந்திரமாக வாழ வேண்டும் - என்ற ஆக்ரோசமான இலட்சிய வேட்கையுடனேயே மாவீரர்கள் களத்தில் வீழுகின்றார்கள்; எனவே எமது வீரர்கள் ஒவ்வொருவரது சாவும் எமது நாட்டின் விடுதலையை முரசறையும் வீர சுதந்திரப் பிரகடனமாகவே சம்பவிக்கின்றது.

வே.பிரபாகரன் - தமிழீழத் தேசியத் தலைவர்.

# அமெ. வெளிவிவகார செயலராக கொண்டலிஸா ரைஸ் நியமனம்!

## கொலின் பவலின் இராஜினாமாவை அடுத்து புஷ்ஷின் புதிய தெரிவு




நியூயோர்க்,நவ.17

அமெரிக்காவின் புதிய வெளிவிவகார செயலராக (அமைச்சராக) கொண்டலிஸா ரைஸை அதிபர் புஷ் நியமித்துள்ளார். இவர் இது நாள் வரை அதிபரின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராகப் பதவி வகித்தவர்.

வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் தனது பதவியை இராஜினாமாச் செய்ததை அடுத்து அவரது இடத்துக்கு கொண்டலிஸா ரைஸ் நியமிக்கப்பட்டார் என்று வெள்ளை மாளிகை அதிகாரிகள் தெரிவித்தனர். 50 வயதான ரைஸ், புஷ்ஷின் மிக நெருங்கிய நபர்களில் ஒருவர்.

அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக நிமிக்கப்பட்ட முதலாவது கறுப்பினப் பெண்மணியும் அவரே. சர்ச்சைக்குரிய ஈராக் போரை ஆரம்பிப்பதற்கு அதிபருக்கு ஆலோசனை கொடுத்தவர்களுள் முக்கியமான நபராகவும் இவர் இருக்கிறார்.

புஷ்ஷின் 15 உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சரவையில் இருந்து 6 அமைச்சர்கள் அதிபர் தேர்தலின் பின்னர் விலகுவார்கள் என்று முன்னரே செய்திகள் வெளியாகி இருந்தன. அவர்களில் கொலின் பவல் உட்பட மூவர் தமது இராஜினாமாக் கடிதங்களை அதிபர் புஷ்ஷிடம் கையளித்துள்ளனர்.

தனது இராஜினாமாவுக்கான காரணம் குறித்து பவல் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை. "அதிபர் தேர்தல் முடியும் வரை காத்திருந்தேன். சரியான நேரம் வந்ததும் பதவியை இராஜினாமாச் செய்தேன்" - என்றார் அவர். கடந்த வெள்ளிக்கிழமையே அவர் தனது இராஜினாமா பற்றி அதிபர் புஷ்ஷுக்கு அறிவித்துவிட்டார். எனினும், நேற்றுமுன்தினம் திங்கட்கிழமையே அவர் தனது ஊழியர்களுக்கு அதனைப் பகிரங்கமாக அறிவித்தார்.

"எங்களது காலத்தில் கொலின் பவல் மிகச் சிறந்த மக்கள் சேவையாளராகத் திகழ்ந்தவர்" - என்று அவரது இராஜினாமாத் தொடர்பாக வெளியிட்ட அறிக்கையில் அதிபர் புஷ் தெரிவித்துள்ளார். "அவர் ஒரு போராளி, சிறந்த இராஜதந்திரி, ஒரு பொதுத் தலைவர், நல்ல மனிதன், சிறந்த நாட்டுப்பற்றாளர்" - என்று அந்த அறிக்கையில் புஷ் மேலும் தெரிவித்துள்ளார்.

ஈராக்கியப் போர் தொடர்பான விவகாரத்தில் கடுமையாக விமர்ச்சிக்கப்பட்டவர் இவர்.



அத்துடன், இறுதிக் காலத்தில் அதிபர் புஷ்ஷுடன் அவருக்குக் கருத்து வேறுபாடுகளும இருந்தன என்று தெரிவிக்கப்படுகின்றது. பாதுகாப்பு அமைச்சர் ரம்ஸ்பீல்ட்டும் விரைவில் தனது பதவியை இராஜினாமாச் செய்வார் என்று எதிர் பார்க்கப்படுகின்றது.

பவலின் இடத்துக்கு ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் ஜோன் டன்போர்த் நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்பட்டது. எனினும், அவரைத் தாண்டி ரைஸ் அந்தப் பதவியைப் பெற்றுக்கொண்டுள்ளார். தனக்கு கிடைத்த பதவியை ரைஸ் ஏற்றுக்கொண்டுள்ளார் என்றே தெரிகிறது.

புஷ்ஷின் இந்த நியமனம், அவர் இந்த உலகை எப்படி அணுகப்போகிறார் என்பதைக் கோடி காட்டுகின்றது என்கிறார்கள் அவதானிகள். எதிர்வரும் ஜனவரி 20 ஆம் திகதி புஷ் தனது இரண்டாவது பதவிக் காலத்தை ஆரம்பிக்க இருக்கிறார். இந்தக் காலப்பகுதியில் அமெரிக்க வெளியுறவுக் கொள்கை எப்படியானதாக இருக்கும் என்பதை ரைஸின் நியமனம் கோடி காட்டுகின்றனது என்று அவர்கள் கூறுகின்றனர். (க-8)

## 'மிக்கி மவுஸ்' உருவத்துக்கு 76 வயது பூர்த்தி

டோக்கியோ,நவ.17

காட்டூன் படங்களிலும், டிஸ்னி லாண்ட் கேளிக்கை பூங்காக்களிலும் காணப்படும் 'மிக்கி மவுஸ்' பொம்மைகள் உருவாக்கப்பட்டு 76 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன.

இதனையொட்டி ஜப்பானில் உள்ள ஒரு பொம்மை தயாரிப்பு நிறுவனம் வித்தியாசமான முறையில் தயாரித்து இருக்கிறது. நிக்கல் முலாம் பூசப்பட்ட மிக்கி மவுஸ் ரோபோ ஒன்றை அந்த நிறுவனம் உருவாக்கியுள்ளது.

2.75 கிலோ நிறை உள்ள இந்த மிக்கி மவுஸின் விலை 440 அமெரிக்க டொலர். இன்னும் 2 நாள்களில் இது ஜப்பானில் விற்பனைக்கு வர இருக்கிறது. (க-8)

## ஆஸ்திரேலியாவில் ரயில் விபத்து!

சிட்னி,நவ.17

ஆஸ்திரேலியாவின் வடக்குப் பகுதியில் இடம்பெற்ற ரயில் விபத்தில் டசின் கணக்கானவர்கள் காயமடைந்துள்ளனர்.

பிரிஸ்பேர்னில் இருந்து சுற்றுலாத் தலமான கெய்ன் கடற்கரையோர நகருக்குச் சென்று கொண்டிருந்த அதிவேக ரயில், அதன பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளானது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்களில் ரயில் சாரதிகள் இருவர் உட்பட ஐவரின் நிலை கவலைக்கிடமாக இருக்கின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது. ரயிலின் 9 பெட்டிகளில் 7 பெட்டிகள் பாதையை விட்டு விலகித் தடம்புரண்டுள்ளன.

ரயில் தண்டவாளங்கள் நல்ல நிலையிலேயே இருந்தன என்றும் விபத்து எப்படி ஏற்பட்டது என்று ஆராய்ந்து வருகின்றனர் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். திங்கட்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

## சந்திரனுக்கு ஆளில்லாத ரொக்கட் அனுப்புவதற்கு இந்தியா திட்டம்!

பெங்களூர்,நவ.17

2006 - 2007 ஆம் ஆண்டில் இந்தியா சந்திரனுக்கு ஆள் இல்லாத ரொக்கெட் ஒன்றை அனுப்பும் திட்டத்தைச் செயற்படுத்தும் என்று இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையம் (இஸ்ரோ) தொிவித்துள்ளது.

இது தொடர்பாக இஸ்ரோ அதிகாரி ஒருவர் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:-

சந்திரனுக்கு ஆளில்லாத ரொக்கெட் அனுப்பும் திட்டம் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் சவாலான திட்டங்களில் ஒன்று, விண்வெளித்துறையின் முன்னணியில் உள்ள நாடுகளின் தொழில்நுட்ப ஆலோசனையைப் பெற்று இத்திட்டத்தை இஸ்ரோ செயல்படுத்தவுள்ளது.

இதற்காகப் பல்வேறு நாடுகளை இஸ்ரோ பரிசீலித்தது. இப்போது அமெரிக்கா, பிரிட்டன், சுவீடன், பல்கேரியா, ஜேர்மனி ஆகிய நாடுகளை இதற்கான பட்டியலில் தேர்ந்தெடுத்துள்ளது. இந்த 5 நாடுகளிலிருந்து ஒரு நாட்டை இறுதியாகத் தேர்ந்தெடுக்கும்.

இதைத் தொடர்ந்து விண்வெளிக்கு ஆள் இல்லாத ரொக்கெட்டை அனுப்பும் திட்டம் 2006 - 2007 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கும். இத்திட்டம் தொடர்பாக விஞ்ஞானிகளுடன் இறுதிச் சுற்றுப பேச்சு நடக்கவுள்ளது.

சந்திரனுக்கு ரொக்கெட் அனுப்புவது தொடர்பான விவாத மாநாடு உதயப்பூரில் நவம்பர் 21 முதல் நவம்பா 25 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் இத்திட்டம் குறித்து விரிவாக விவாதிக்கப்படும் என்று அந்த அதிகாரி கூறினார். (க-8)

# ஐவரிகோஸ்ட் மீது ஐ.நா. ஆயுதத்தடை விதித்தது

அபிஜான்,நவ.17

ஐவரிக்கோஸ்டில் அண்மைய நாள்களாக வன்முறைகள் அதிகரித்துள்ளதை அடுத்து அந்த நாட்டின் மீது ஐ.நா. பாதுகாப்புச்சபை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் ஆயுதத்தடை விதித்துள்ளது.

பாதுகாப்புச் சபையில் பிரான்ஸ் கொண்டு வந்த பிரேரணை மீது அனைத்து நாடுகளும் ஏகமனதாக ஆதரவு தெரிவித்தன. இந்தத் தீர்மானத்தின்படி இனிவரும் 13 மாதங்களுக்கு இந்தத் தடை நீடிக்கும்.

ஐவரிக்கோஸ்டில் அரசுப் படையினருக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் சண்டைகள் இடம்பெற்று வருகின்றன. தலைநகர் அபிஜானில் ஒரு பகுதி கிளர்ச்சிப் படைகள் வசமும் மற்றொரு பகுதி அரச படைகள் வசமும் இருக்கின்றன. இரு தரப்பினரும் இந்த வருட ஆரம்பத்தில் கடுமையாக மோதிக்கொண்டதில் பெருமளவு உயிர்ச்சேதங்களும் உடைமை இழப்புகளும் ஏற்பட்டன.

இதனால், இந்த விவகாரத்தில் ஐ.நா. தலையிட்டு ஒரு சமாதான உடன்படிக்கையை ஏற்படுத்தியது. உடன்படிக்கையை நடைமுறைப் படுத்தும் நோக்கில் இரு தரப்பினருக்கும் இடையிலான பகுதியில் பிரான்ஸ் படைகள் நிலைநிறுத்தப்பட்டன. 10 நாள்களின் முன்னர் அரச படைகள் உடன்படிக்கையை முறித்துக் கொண்டு கிளர்ச்சியாளர்களின் நிலைகள் மீது தாக்குதல் நடத்தின.

இந்தத் தாக்குதலின் போது பிரெஞ்சுப் படையினர் மீதும் அரச விமானங்கள் தாக்குதல் நடத்தின. இதனால், பிரான்ஸ் படையினருக்கு இழப்பு ஏற்பட்டது. இதனால் ஆத்திரமடைந்த பிரான்ஸ் படையினர், அபிஜானில் உள்ள அரச விமான நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த அரசுக்குச் சொந்தமான விமானங்களைத் தாக்கிய அழித்தது. இதனையடுத்து அங்குநிலைமை மோசமாகியது.

பிரான்ஸ் படையினருக்கு எதிராகவும் அங்குள்ள பிரான்ஸ் நாட்டவர்களுக்கு எதிராகவும் வன்முறைகள் வெடித்துள்ளன. இதனால் ஆயிரக்கணக்கான ஐரோப்பியர்கள் அபிஜானை விட்டுவெளியேறி விட்டனர். இப்போதும் வெளியேறி வருகின்றனர். (க-8)

## கணவனின் கழுத்தை அறுத்த மனைவி மாடியிலிருந்து வீழ்ந்து தற்கொலை!

பக்கவாத நோயால் படுத்த பக்கையாகக் கிடந்த கணவனைக் கொலை செய்வதற்காக அவரது கழுத்தை அறுத்த மனைவி மாடியில் இருந்து கீழே குதித்துத் தற்கொலை செய்துகொண்டார்.

இந்தச் சம்பவம் ஹொங்கொங்கில் நடந்தது. பக்கவாத நோயா[illegible] பாதிக்கப்பட்ட கணவனை அவர்தான் பராமரிதது வந்தார். இந்த நிலையில் அவருக்கும் உடல்நிலை பாதிக்கப்பட்டது. இதனால் வாழ்க்கையில் வெறுப்படைந்த அவர், தனது கணவனைக் கொலைசெய்யும் நோக்கில் அவரது கழுத்தை அறுத்துவிட்டு தான் மாடியில் இருந்து கீழே வீழ்ந்து தன்னை மாய்த்துக்கொண்டார்.


தற்கொலை செய்வதற்கு முன்னர் அவர் எழுதி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளதாவது - "நான் தற்கொலை செய்து கொள்வது என்று முடிவுசெய்துவிட்டேன். நான் இறந்துவிட்டால் என் கணவரைக் கவனித்துக் கொள்ள யாரும் இல்லை என்பதால் அவரை வெட்டிக்கொன்றேன்" என்று எழுதியிருந்தார்.

ஆனால், அந்தப் பெண் எதிர்பார்த்தபடி அவரது கணவர் சாகவில்லை. காயத்துடன் உயிர்பிழைத்துக் கொண்டார். அவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு இருக்கிறார். (க-8)

## நமீபியாவில் அதிபர் தேர்தல்

நமீபியாவில் நேற்றுமுன்தினம் அதிபர் தேர்தலில் வாக்குப்பதிவு ஆரம்பித்தது. நேற்று 16 ஆம் திகதி 2 ஆவது நாளாக இந்த வாக்குப் பதிவு நடந்தது. இப்போது அதிபராக இருக்கும் நுஜோம் இதில் போட்டியிடவில்லை. தனது ஆதரவாளரான ஹிபிசி பொகாம்பாவை அவர் அதிபர் வேட்பாளராக நிறுத்தியிருந்தார்.

இந்தத் தேர்தலில் ஆளும் கட்சியே அமோக வெற்றி பெறும் என்று கருத்துக்கணிப்புகள் கூறுகின்றன. உடல் ஊனமுற்ற ஒருவர் சக்கர நாற்காலியில் வந்து வாக்குப்பதிவு செய்த காட்சி இது. (க-8)



## சங்கராச்சாரியாரை நாளை மன்றில் ஆஜர்படுத்த உத்தரவு

காஞ்சி,நவ.17

காஞ்சி மடத்தின் சங்கராச்சாரியார் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகளைக் கைதுசெய்த விவகாரத்தில் பொலீஸார் நடந்துகொண்ட விதம் வேதனையளிக்கிறது என்று மடத்தின் இளையவர் விஜேந்திரர் தெரிவித்துள்ளார்.

ஆந்திர மாநிலம் மெகபூப் நகரில் இருந்து நேற்றுக்காலை அவர் காஞ்சியை வந்தடைந்தார். சங்கராச்சாரியார் கைது குறித்து தொடர்ந்து மௌனம் காத்து வந்த விஜயேந்திரர், காஞ்சிக்குப் புறப்படும் முன்னர் தனது மௌனம் கலைத்து செய்தியாளர்களிடம் பேசினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அவரது (சங்கராச்சாரியார்) கைது மனவேதனையை அளிக்கிறது. அவரைக் கைது செய்யும் விடயத்தில் பொலீஸார் நடந்துகெண்ட விதம் மேலும் வேதனை அளிக்கிறது.

ஆதீனத்தை அனைவருக்கும் கொடுக்க வேண்டும். அதற்கான வாய்ப்புக்களை உருவாக்கிக் கொடுக்கவேண்டும். அனுக்கிரகத்தை அனைவருக்கும் கொடுக்கவேண்டும் என்பதுதான் அவரது தத்துவம். உத்தவ தத்துவத்தை கிராம அளவில் கொண்டுசெல்ல அவர் பாடுபட்டார்.

இப்போ அவர் விடயத்தில் நடக்கக் கூடாதது நடந்துவிட்டது. இது மனவேதனை தரும் விடயம் என்றார் - இளையவர்.

இதேவேளை, சங்கராச்சாரியார் ஜெயேந்திரரை நாளை நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

காஞ்சி பெருமாள் கோயில் நிர்வாகி சங்கரராமன் கொலை வழக்கில் சங்கராச்சாரியார் ஜெயேந்திரரை பொலீஸ் காவலில் வைத்து விசாரிக்க அனுமதிக்க வேண்டும் என்று காஞ்சி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணை நேற்று இடம்பெற்றது. சங்கராச்சாரியாரை பொலீஸ் காவலில் வைத்து விசாரிப்பதற்கு அவரது சட்டத்தரணிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதனையடுத்து, நாளை வியாழக்கிழமை ஜெயேந்திரரை வழமைபோன்று நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறு நீதிபதி உத்தரவிட்டார். (க-8)



## ஒலிபெருக்கி சாதனங்கள் திருட்டு

சாவகச்சேரி,நவ.17

மடடுவில் தெற்கு வேரற்கேணி கந்தசுவாமி கோயிலில் ரூபா 13 ஆயிரம் பெறுமதியான ஒலிபெருக்கிச் சாதனங்கள் திருடப்பட்டுள்ளன.

அண்மையில் இடம்பெற்ற இத்திருட்டுத் தொடர்பாக சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது.

(8-204-31)

## சூரசம்ஹாரப் பெருவிழா

வல்வை சிவபுரம் ஸ்ரீவாலாம்பிகா சமேத வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தானத்தில் இன்று (17.11.2004) புதன்கிழமை மாலை 5.30 மணியளவில் சூரசம்ஹாரப் பெருவிழா சிறப்பாக நடைபெறும்.

சிறப்பு நிகழ்வாக, சூரபன்மன் சக்கரவாகப் பட்சியாக மாறி தமது இறகுகளை அசைத்தவண்ணம் போர் செய்யும் காட்சியும் இடம்பெறும்.

அடியார்கள் வருக! திருவருள் பெறுக!!

(38695) (24-16-17-34) - ஆதீனகர்த்தா.

# வருடாந்தம் 50 பேர் வரையில் இடிமின்னலால் பலியாகின்றனர்

## வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு,நவ.17

இலங்கையில் வருடாந்தம் இடிமின்னலினால் தாக்கப்பட்டு 50 பேர் வரையில் பலியாகி வருவதாக வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது பருவமழை காலமாதலால் நாட்டில் பரவலாக மின்னலடிக்கும் சாத்தியமுள்ளது. எனவே, மின்னலால் ஏற்படும் விபத்துகள் குறித்துப் பொதுமக்கள் மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும் எனவும், டிசெம்பர் மாதம் முதலிரு வாரங்களிலும் நாட்டில் கூடுதலான மின்னலடிக்கும் சாத்தியக்கூறுகள் தென்படுவதாகவும் வளிமண்டலவியல் திணைக்கள பிரதிப்பணிப்பாளர் ஜி.பி.சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இடிமுழககம், மின்னல் ஆகியவற்றின்போது பொதுமக்கள் முன்னெச்சரிக்கையுடன் நடந்து கொண்டால் உயிரிழப்புகளைத் தடுக்கமுடியுமென அவர் மேலும் தெரிவித்தார். (10-203)



17 11 2004

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

## செல்வி நிதர்சனா

ஆனைக்கோட்டை, சோமசுந்தரம் வீதியைச் சேர்ந்த
ஜெயரூபன் - யாழினி தம்பதிகளின்
செல்வப் புதல்வி
செல்வி நிதர்சனா

தனது முதலாவது பிறந்தநாளை இன்று (17.11.2004) புதன்கிழமை தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார். அன்பு அப்பா, அம்மா, அண்ணா நிதர்சன், தாத்தா, அப்பம்மா, அம்மம்மா, பவளம் பெரியம்மா, குமார் பெரியப்பா குடும்பம், ராசன் மாமா, மாமி குடும்பம், தேவன் மாமா மாமி குடும்பம், கலா அத்தை, ராசா மாமா குடும்பம் (தர்சன் எரிபொருள் நிலையம்), ஜெயந்தி அத்தை, சிவம் மாமா குடும்பம் (சதுர்சிகா மரக்காலை), சுரேஸ் பெரியப்பா, விஜயமலர் அத்தை, சுஜானா மச்சாள், விதுசன் மச்சான் குடும்பம் (ஜேர்மனி), சதீஸ் பெரியப்பா, அருட்சோதி பெரியமமா, தங்கை மதுசனா குடும்பம் (நோர்வே), ரூபன் பெரியப்பா, லோஜி பெரியம்மா குடும்பம் (இத்தாலி), நஞ்சன் சித்தப்பா (லண்டன்), பாபு சித்தப்பா (கோப்பாய் கல்வியியற் கல்லூரி), மோகன் சித்தப்பா (இத்தாலி), மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் பல்கலைகளும் கற்று சகல சௌபாக்கியங்களுடன் பல்லாண்டு காலம் வாழ்க வாழ்க என நிதர்சனாவை அன்போடு வாழ்த்துகிறார்கள்.

"தங்கஜோதி",
சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை.

அப்பப்பா
க.தங்கவேலாயுதம்
ஆனைக்கோட்டை.

(38685)(34-13-17)

## தபாலகத்துக்கு நிரந்தரக் கட்டடம் இல்லை

கரவெட்டி பிரதான தபாலகம் 50 வருடங்களாக நிரந்தரக் கட்டடம் இன்றி தனியார் வீடொன்றிலேயே இயங்கிவருகிறது.

இத்தபாலகத்திற்கு நிரந்தரக் கட்டடம் அமைத்துத் தருமாறு பல்வேறு தரப்பினரிடமும் முறையிட்ட போதும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

வீட்டு உரிமையாளர் தமது வீட்டை விடும்படி கேட்டுள்ளதால, தற்போது தபாலகம் வேறு இடத்திற்கு இடம்மாறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தடுத்து நிறுத்தி நிரந்தரக் கட்டடத்தில் இந்தத் தபாலகம் இயங்க நடவடிக்கை எடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துளளனர். (8-204-70

## ஒலிபெருக்கி சாதனங்கள் அன்பளிப்பு

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலைக்கு 50ஆயிரம் ரூபா பெறுமதியான ஒலிபெருக்கிச் சாதனங்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

இதனை மேற்படி பாடசாலையின் பழைய மாணவியரான கனடாவில் வசிக்கும் திருமதி ஜோ.முகுந்தன் வழங்கியுள்ளார்.

(8-204-78)

## பதிவுகள் பேணும் பயிற்சி

வலி.தெற்கு,நவ.17

பாடசாலை அபிவிருத்திச் சங்கம், வசதிகள் சேவைகள் கட்டணம், பாடசாலையைத் தர உள்ளீடு போன்ற விடயங்களில் உரிய கணக்குப் பதிவுகளைப் பேணவும் அவற்றை எழுதவும் வேண்டிய பயிற்சிகள் தேவைப்படுவோருக்கு அவற்றை வழங்குவதற்கேற்ற ஒழுங்குகளை உடுவில் கல்விக் கோட்டப் பணிப்பாளர் செ.குபேரநாதன் மேற்கொண்டுவருகிறார்.

மேற்படி விடயங்களில் கணக்கு வைக்கும் முறைகளில் போதிய பயிற்சி இல்லமையால்பல தவறுகள் நேரிடுவதாகவும் இதுதொடர்பாக பயிற்சிகள் தேவைப்படும் அதிபர்கள், ஆசிரியர்களின் விவரங்கள் கோரப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(10-152)


Jayoda ஜயோதா

## உத்தியோகபூர்வ முடிவுகள்

டிக்கட் தொடர் இல. 6522179 முதல் 6534704 வரை
சீட்டிழுப்பு இல. 85 திகதி 15-11-2004

வெற்றி எண்கள் 0 2 4 5 1 7 சுப்பர் எண் 22

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,15,30,950/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,15,30,950/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 01 | 10,00,000/- | 10,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 50,000/- | 5,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 110 | 5,000/- | 5,50,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,094 | 500/- | 5,47,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,913 | 50/- | 5,45,650/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,08,171 | 10/- | 10,81,710/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 11 | 5,000/- | 55,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 110 | 1,000/- | 1,10,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,096 | 100/- | 1,09,600/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,824 | 20/- | 2,16,480/- |
| மொத்தம் | 1,32,349 | | 53,68,040 /- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 53,68,040/-

இந்த வியாழக்கிழமைக்கான சுப்பர் ஜக்பொட்
ரூ. 1,18,34,450/-

தொடர் இல. 7488425 க்கு மேற்பட்ட செம்மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 நொவம்பர் 18 ஆம் திகதி வியாழக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, சென் மைக்கல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ரூபா 75,325/- பெறுமதியான எட்டு மோட்டார் சைக்கிள்களை வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்

6524458-1-19
6534656-1-17
6533873-5-96
6533798-6-62
6523773-1-42
6530378-6-33
6528054-0-82
6531941-0-52


# இதய அஞ்சலி



எமது மகா வித்தியாலய ஆசிரியையான
திருமதி கௌரி திருவரங்கன் அவர்களின்
அன்புத் தந்தையார் சின்னத்தம்பி நாராயணசாமி

அவர்கள் 12.11.2004 இல் காலமானதையிட்டு நாம் மிகவும் மனம் வருந்துகின்றோம். அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து அன்னாருக்கு இதய அஞ்சலியைச் சமர்ப்பிக்கின்றோம்

(38696)(24-34-16-17)

- அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்,
யா/நவாலி மகா வித்தியாலயம்.

# மரண அறிவித்தல்கள்

## சிதம்பரப்பிள்ளை சின்னத்தம்பி



கொடிகாமம், பாலாவி தெற்கைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை சின்னத்தம்பி அவர்கள் 15.11.2004 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மகனும் பொன்னம்மாவின் அருமைக் கணவரும் சிந்தாமணி, பரமேஸ்வரி, அமரசிங்கம் (லண்டன்), கனகசிங்கம், ஜெகராசசிங்கம், இராசசிங்கம், குணசிங்கம், கைலாயபிள்ளை (டோகா), விஜயா ஆகியோரின் அன்புத் தந்தையாரும் தியாகராஜா, முத்து, சிவபாக்கியம், வள்ளிப்பிள்ளை, ஜெகதீஸ்வரி, விஜயராணி, சுதர்சினி, ஜெயமாலா, பரமசிங்கம் (டோகா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ரவிச்சந்திரன் (லண்டன்), வசந்தகுமாரி, சிவகுமார், சசிக்குமார், சுஜாத்தா (லண்டன்), திருச்செல்வம் (லண்டன்), பேரின்பமோகன், நந்தகுமார், மதனா, கிருசிகா, கபிதாசன், டினேசன், புவிந்தன், பிரவீன், ஜேலக்சன், சிந்துஜன், சிந்துசா, துசிதா, வினோதினி ஆகியோரின் அருமைப் பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.11.2004 திங்கட்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாலாவி தெற்கு,
கொடிகாமம். (38689) (24-34-19-17)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## சின்னக்குட்டி காராளசிங்கம்

தும்பளை, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் நீண்டகாலம் மலேசியாவில் தொழில்புரிந்து இளைப்பாறியவருமாகிய சின்னக்குட்டி காராளசிங்கம் அவர்கள் நேற்று (16.11.2004) செவ்வாய்க்கிழமை தனது 98 ஆவது வயதில் தும்பளையில் அமரத்துவம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னக்குட்டி - தெய்வானைப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் திருமதி நாகரத்தினம் குமாரசாமி (பாக்கியம்), காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை, நாகலிங்கம் மற்றும் இராசரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற லில்லி ஞானரட்ணத்தின் அன்புக் கணவரும் அருந்தவராணி, செல்வசிங்கம், செல்வராணி ஆகியோரின் பாசமிகு தந்தையும் தாரணி, நிரஞ்சன், வானதி, மகிந்தன், ரஜீவன், ரமோனா, றோமேன், துஷ்யந்தன், சுமித்திரா ஆகியோரின் பேரனும் சத்தியன், கேசினி, அனுஷி, மதுஷி ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தும்பளையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று (17.11.2004) புதன்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கோரியடி மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தும்பளை,
பருத்தித்துறை. (38690) (24-34-17-19)

தகவல்:
கலாநிதி நாகலிங்கம் சிவயோகன்
(பெறாமகன்)

## திருமதி கிருஷ்ணபிள்ளை வசந்தாதேவி



கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிருஷ்ணபிள்ளை வசந்தாதேவி அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடேசு - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும் சிற்றம்பலம் கிருஷ்ணபிள்ளை (போமன்) அவர்களின் அன்பு மனைவியும் மனோரஞ்சிதம் (லண்டன்), மனோரஞ்சனி, சதீஸ்குமார் (கனடா), மனோகலா (சுவிஸ்), மனோஜயா, லதாயினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெயபாலன் (லண்டன்), நவராஜா (வடிசாலை, திக்கம்), ததீஸ்குமார் (சுவிஸ்), ராஜகர்ணன் (வர்த்தகர், நெல்லியடி) ஆகியோரின் அன்பு மாமியாரும் கவிராஜ், பிரசன்னா, திவ்யராஜ், சஞ்ஜீவன், திவ்யா, திவ்யரசன், ஆர்த்தி, அஞ்சனா, அபினா, கிரிசாந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் வள்ளிப்பிள்ளை, பூரணம், கனகம்மா, செல்வமலர் ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.11.2004) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சோனப்பு மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கவுந்தில்,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.
(38688) (24--34-19-17)

தகவல்:
சி.கிருஷ்ணபிள்ளை (போமன்)
(கணவர்).

## நடராசா சண்முகராசா

அராலி மத்தியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நடராசா சண்முகராசா அவர்கள் நேற்று (16.11.2004) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சிவலட்சுமியின் அன்புக் கணவரும் சசிகரன், கருணாகரன் (மாணவர்கள் - யாழ்ப்பாணக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2004) புதன்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பூனாவடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி மத்தி,
வட்டுக்கோட்டை (38687) (24-34-19-17)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## உதயன்

# குடும்பக் கறையை தொடரும் அக்கறை!

"சமாதானம் என்றால் சமாதானம்; யுத்தம் என்றால் யுத்தம்." - இந்த வாசகங்கள் இப்போது மீண்டும் கிளம்பத் தொடங்கியிருக்கின்றன.

இவ்வாரத்தில் இரண்டு இடங்களில் இது பற்றிப் பகிரங்கமாகப் பிரஸ்தாபிக்கப்பட்டது.

ஒன்று - சகவாழ்வு நிலையத்துக்கான பணிப்பாளர் குமார் ரூபசிங்க கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நடந்த நிகழவில் உரையாற்றுகையில் இது பற்றிக் குறிப்பிட்டிருந்தார்.

மற்றையது - பொலன்னறுவை மாவட்டம் மன்னம்பிட்டியவில் பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு அமைச்சர் அநுரா பண்டாரநாயக்கா உரையாற்றுகையில் குறிப்பிட்டமை.

கலாநிதி குமார் ரூபசிங்க, 1983இல் அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா குறிப்பிட்ட ஒரு விவகாரத்தைச் சுட்டிக் காட்டியிருந்தார்.

"அப்போது எதிர்க்கட்சித் தலைவராக இருந்த அமிர்தலிங்கத்தைப் பார்த்து யுத்தம் என்றால் யுத்தம்; சமாதானம் என்றால் சமாதானம் என்று சூளுரைத்தார் ஜனாதிபதி ஜெயவர்த்தனா. அதன் விளைவு இன்று எப்படியாகியுள்ளது?

"தமிழர் தரப்பைப் பார்த்து, ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா 'யுத்தம் என்றால் யுத்தம்; சமாதானம் என்றால் சமாதானம்' என்று சூளுரைத்ததை சிங்கள வானொலியில் ஒரு மணித்தியாலத்துக்கு ஒரு தடவை ஒலிபரப்பினர். இதைக் கேட்டு கிளர்ந்தெழுந்த சிங்களவர்கள் பல்வேறு பகுதிகளில் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தினர்" - என்று பழைய தகவல்களை நினைவுபடுத்தினார் கலாநிதி ரூபசிங்க.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தூண்டிவிட்ட - ஊதி விட்ட - இனவாதப் பொறி பெரும் கலவரமாக வெடித்து, தமிழர்களுக்கு எதிரான இன வன்முறையாகக் கொழுந்து விட்டெரிந்தது. அதன் விளைவு என்ன?

ஈழத் தமிழரின் உரிமைக்கான ஆயுதப் போராட்டம் முனைப்புப் பெற்றதும், முழு வீச்சில் முகிழ்ந்து பேரெழுச்சி பெற்றதும் இந்த ஆடிக்கலவரக் கொடுமைகளின் விளைவுதான்.

சிங்களவர்களைத் தாம் தூண்டி விடுகிறார் என நினைத்துக்கொண்டு மமதையோடு ஜே.ஆர்.எழுப்பிய குரல், ஈழத் தமிழரின் உரிமைப் போராட்டத்தின் ஆன்மாவையே தட்டியெழுப்பி பெரும் பூகம்பமாய் வெடித்து, இந்தத் தீவையே இன்றுவரை அதிர வைத்துக்கொண்டிருக்கின்றது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தனா அன்று முழங்கிய அதே கோஷத்தை - அன்று ஜெயவர்த்தனாவின் போக்கால் ஏற்பட்ட விளைவுகளை அனுபவபூர்வமாகக் கண்டும் கூட அதிலிருந்து உரிய படிப்பினையைக் கற்றுக்கொள்ள மறந்து, மறுத்து - இப்போது அநுராபண்டாரநாயக்கா தூக்கியிருக்கின்றார்.

ஈழத் தமிழர்தரப்பு இன்று ஆயுதப் போராட்டத்தை நிறுத்தி, அமைதி முயற்சிகளில் இதயசுத்தியுடன் ஈடுபடுவதற்குத் தயாராகக் காத்து நிற்கின்றது.

இதற்குக் காரணம் ஆயுதப்போராட்டத்தில் தமிழர் தரப்பு வலுவிழந்துவிட்ட காரணத்தினால் அல்ல; அதில் பலவீனப்பட்டு போய்விட்டதனால் அல்ல. மாறாக, சமாதான வழியில் - அமைதி முறையில் - நல்லிணக்கத்தின் அடிப்படையில் - இந்த இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் நேர்மையும், நெஞ்சுரமும், தாராளமும், விட்டுக்கொடுப்பும் தங்களுக்கு உள்ளன என்ற உண்மையை - யதார்த்தத்தை - உலகத்துக்கு எடுத்தியம்புவதற்கே.

அதைப் புரிந்துகொள்ளாமல் தமிழர் தரப்பைப் பார்த்து 'யுத்தத்துக்கும் தயார்; சமாதானத்துக்கும் தயார்' என்று கிண்டல் பாணியில் முழங்குகின்றார் அநுரா பண்டாரநாயக்கா.

ஒரு சில டசின் கணக்கானவர்களோடு ஓரிரு ஆயுதங்களோடு தமிழர் போராளி அமைப்புகள் இருந்த காலத்தில் இதேபோன்று ஜே.ஆர்.ஜெயவர்த்தனா சூளுரைத்ததன் விளைவைத்தான் இந்த நாடும், அரசும், தென்னிலங்கையர் உட்பட இலங்கைத் தீவு மக்கள் அனைவரும் அனுபவித்துக்கொண்டிருக்கின்றனர்.


அதை மனதில் நிறுத்திப் பார்க்காமல், அதே பாணியில் மீண்டும் சூளுரைக்க நினைக்கிறார் அநுரா பண்டாரநாயக்கா. அதுவும் தமிழர் தரப்பு ஒரு மரபுவழி இராணுவத்தைத் தனக்கென்ப் பேணி மிகுந்த பலத்தோடு இருக்கும் போது ஜே.ஆர்.பாணி கிண்டலைத் தானும் விட முயற்சிக்கிறார் அநுரா. அவரைப் பார்க்கப் பரிதாபமாக இருக்கின்றது.

அவர் இந்த நாட்டுக்குத் தலைமை வகித்த இரண்டு பிரதமர்களின் மகன். நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் சகோதரர், இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவராகவும், சபாநாயகராகவும் பணியாற்றிய அவர் இப்போது ஓர் அமைச்சர். தென்னிலங்கை அரசியலின் தலைமைத்துவத்துக்கும் கண் வைத்துச் செயற்படுபவர்.

அவர் யதார்த்தங்களைப் புரிந்துகொள்ளாமல் பேசும் வெறும் அரசியல்வாதியாக இருக்கலாம். பேரினவாதிகளின் ஆதரவை எப்படியாவது திரட்டி அதன் மூலம் தனது அரசியல் இலக்குகளை எட்டும் குள்ளநரித்திட்டம் மனதில் இருப்பதால், அதை நிறைவேற்றும் வகையில் அவர் தென்னிலங்கைப் பொதுக்கூட்டங்களில் முழங்கலாம்.

ஆனால், அவர் ஒரு விடயத்தை மறந்து விடக்கூடாது. இலங்கைத்தீவை படுமோசமான அரசியல் சிக்கலிலும் இனப்பிரச்சினையிலும் ஆழ்த்திய பெருமை பண்டாரநாயக்கா குடும்பத்தையே சார்ந்தது. இந்த உண்மையை - குடும்பக் கறையைக் - களையும் நேர்மையான அக்கறை அவருக்கு இருக்குமானால் குறுகிய அரசியல் சுயலாபப் போக்கிலிருந்து அவர் விடுபட்டு இலங்கைத்தீவின் எதிர்கால நலனை முன்னிறுத்தி சிந்திக்கவும், செயற்படவும் அவர் தயாராக வேண்டும்.

ஈழத்தமிழர் தரப்பும் யுத்தத்துக்கும் தயார்; சமாதானத்துக்கும் தயார் என்ற பலமான நிலைப்பாட்டிலிருந்துதான் அமைதி முயற்சிகளில் ஈடுபடுவதற்கு வாய்ப்பளித்து அமைதி காக்கின்றது என்பதை அவர் உணர்ந்து கொள்ள வேண்டும்.



வல்வெட்டித்துறை ஆலடியில் அமைந்துள்ள தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் இல்லம்தான் இது. அதன் முன்புறத் தோற்றத்தையே படத்தில் காண்கிறீர்கள்.

தேசியத்தலைவரின் இல்லத்தைப் பார்வையிடுவதற்கென நாள்தோறும் பெரும் எண்ணிக்கையானோர் அங்கு வந்து செல்கின்றார்கள். இவர்களில் தென்னிலங்கையில் இருந்து யாழ்.வரும் பெரும்பான்மையின மக்களும், வெளிநாடுகளிலிருந்து விடுமுறையில் யாழ்ப்பாணம் வரும் தமிழ் மக்களும் அடங்குகின்றனர். (படம்:சி.சுந்தரலிங்கம்)

# இராணுவ வாகன விபத்துக்கள் தொடர்ந்தால் போராட்டம்!

## பொது அமைப்புகளின் ஒன்றியம் எச்சரிக்கை!!

யாழ்ப்பாணம்,நவ.17

கொடிகாமம் பகுதியில் இராணுவ பவுஸர் பொதுமகன் ஒருவரை மோதிப் பலியெடுத்தது போன்ற சம்பவங்கள் தொடருமாயின் பெரும் போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதுதொடர்பாக அந்த அமைப்பு விடுத்துள்ள அறிக்கையிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

யாழ்ப்பாண குடாநாட்டில் இராணுவ வாகனங்கள் போக்குவரத்து விதிகளை மீறியும் வேகக் கட்டுப்பாட்டை மீறியும் ஓடுவதால் அப்பாவி மக்களின் உயிர்கள் அநியாயமாகப் பறிக்கப்படுகின்றன. இது தொடர்பாகப் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களைச் சந்திக்க நேரிடுகிறது.

இராணுவ டிரக் வண்டிகள் மக்களை பலி கொள்ளும் போது அவ்விடத்தில் மகக்கள் கொந்தளிப்பதும், எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் தொடர்கிறது. இதனால் எதிர்காலத்தில் இராணுவ வாகனங்கள் வீதியில் ஓடமுடியாத நிலை ஏற்படும். இராணுவத்தினரின் மோதல் சம்பவங்களை உடனடியாக நிறுத்தவேண்டும்.

இராணுவத்தினரின் பொறுப்பற்ற இச்செயலுக்கு பொலீஸாரும் துணை போகின்றனர். இராணுவ வாகனம் இளைஞனைக் கொன்றதால் ஆத்திரமடைந்த மக்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர். அம்மக்கள்மீது கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தியுள்ளனர். செய்தி சேகரிக்கச் சென்ற பத்திகையாளர் தாக்கப்பட்டு அவர்களின் புகைப்படக் கருவிகள் பறிக்கப்பட்டது சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய பொலீஸாரே குற்றத்திற்கு துணை நின்றுள்ளனர்.

ஸ்ரீலங்கா பொலீஸார் மீது மக்கள் நம்பிக்கைகொள்ளத் தயார் இல்லை என்பதை இச்செயல் எடுத்துக் காட்டுகின்றது. இது போன்ற சம்பவங்கள் எதிர்காலத்தில் நிகழுமானால் மக்கள் வெறுமனே பார்த்துக் கொண்டிருக்கமாட்டார்கள் என்பதை தெரிவிப்பதோடு, யாழ்ப்பாண மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியம் பெரும் போராட்டங்களை எடுக்கும் என்பதைத் இவ்வறிக்கை மூலம் தெரிவித்துக்கொள்கின்றோம். அதேவேளை இராணுவ பவுஸரில் மோதி பலியான வ.ஹரிஹரசர்மாவுக்கு எமது அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம் - என்றுள்ளது. (ஐ-3)

# நாட்டின் உண்மையான சொந்தக்காரர் சிங்களவரே

## எல்லாவல மேதானந்த தேரர் எம்.பி.

கொழும்பு,நவ.17

"இந்த நாட்டின் உண்மையான சொந்தக்காரர்கள் சிங்களவரே. ஏதாவது ஒரு நாட்டில் முதன்முறை புதிய கலாசாரம் ஒன்றைத் தோற்றுவித்தவர்களுக்கே அந்த நாடு சொந்தம் என யுனெஸ்கோ அமைப்புத் தெளிவுபடுத்தியுள்ளது. ஆனால் இன்று நமது நாட்டுக்கு ஏற்பட்டுள்ள நிலையைப் பாருங்கள். பிரதான நகர்களின் காணிகள் அந்நிய இனத்தவர் கைகளுக்கு உரிமையாகி வருகின்றன என தேசிய ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வண. எல்லாவல மேதானந்த தேரர் தெரிவித்தார்.

கண்டி வட்டபுலுவ என்னும் இடத்தில் உள்ள புராண போமலுவ விகாரையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பௌத்த அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கவும் ஹெல உறுமய எம்.பிக்களை வரவேற்கவும் இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

உடவத்த நந்ததேரர் எம்.பி. இந்த வைபவத்தை ஏற்பாடு செய்திருந்தார். அங்கு அவர் தொடர்ந்தும் பேசுகையில் கூறியதாவது:-

பௌத்த சமயம் சிறந்த பண்புகளால் போஷிக்கப்பட்டதாகும். இதற்கென புதிய கலாசாரம் உண்டு. எமது மூதாதையர் இந்த அருமை பெருமையான கலாசார பண்பாடுகளை எல்லாம் பாதுகாத்து வந்தனர். இவ்வுலகிற்கு அளிக்கப்பட்ட பௌத்த கலாசாரம் மேன்மையுடையதாகும். ஆங்காங்கே அகழ்ந்தெடுக்கப்படும் புதை பொருள்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன.

இவ்வகையில் இந்த நாடு சிங்களவருக்கே சொந்தமானதென்பதை புதை பொருள்கள் நன்கு உணர்த்துகின்றன. அன்று இந்த நாட்டைப் பலர் பாதுகாத்து வந்தனர். இதை விட எமக்கு வேறு தேசம் இல்லை. எனவேதான் இந்த நாட்டை நாம் பாதுகாக்க வேண்டுமெனக் கோருகிறோம்.

பௌத்த குருமார்கள் தமது கடமையை துணிவுடன் புரிவார்களேயானால் நம்மால் சாதிக்க வேண்டியவை பல இருக்கின்றன. இன்று எம்மை நோக்கி பல பாதிப்புக்கள் ஏற்பட்டு வருகின்றன. வரலாற்றைப் பலர் திரிவுபடுத்தி எழுதுகின்றனர். வரலாறு இல்லாத இனம் விரைவில் அருகிவிடும். இந்த வரலாற்றைப் பேணுவது எமது பணியாகும்.

இன்று கண்டி தலதா மாளிகையைச் சூழவுள்ள புனித பிரதேசங்களில் இந்து, இஸ்லாமிய வணக்க ஸ்தலங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. நகரின் காணிகள் பல அந்நிய இனத்தவர்களிடம் சென்று கொண்டிருக்கின்றன. இவ்வாறு இடம்பெற்றால் சிங்களவரின் நிலைமை என்னவாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

வண.உடவத்தை நந்த தேரர் எம்.பி. பேசுகையில் கூறியதாவது:-

வட்டப்புலுவைப் பிரதேசத்தில் கூட காணிகளை முஸ்லிம்கள் விலை கொடுத்து வாங்குகின்றனர். அப்பிரதேசத்தில் முஸ்லிம் பள்ளி வாசல் ஒன்றை நிர்மாணிக்க எடுத்த முயற்சியை நான் முறியடித்தேன். இதற்காக நாம் அஞ்சவேண்டியதில்லை. எமது உரிமையை நாமே பேண வேண்டும் என அவர் மேலும் சொன்னார். இந்த வைபவத்தில் கண்டி மேயர் கேஸர சேனநாயக்கவும் உரையாற்றினார். (8)

## சமாதான கிராம நிகழ்ச்சித்திட்ட அங்குரார்ப்பணம்

அரசமைப்பு விவகார தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சு சமாதான கிராம நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கப்பூது, பல்லசுட்டி, தோறாந்தோட்டம் போன்ற கிராமங்களில் ஆரம்பித்துள்ள சமாதான கிராம நிகழ்ச்சித் திட்டத்திற்கான அங்குரார்ப்பண நிகழ்வுகள் இருநாள்கள் இடம்பெறவுள்ளன.

நாளை வியாழக்கிழமை கப்பூது அரசினர் தமிழ்கலவன் பாடசாலையிலும், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை சங்கானைப் பிரதேச செயலக அரங்கிலும் இந்நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இந்நிகழ்வில் மேற்குறிப்பிட்ட கிராமங்களிலிருந்து 200 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு உணவு அல்லாத பண்டங்கள் வழங்கப்படவுள்ளன. (8-203)

## நாளை

கார்த்திகை 03
வியாழக்கிழமை
(18.11.2004)
திதி: ஷஷ்டி
முற்பகல் 7.23 வரை
ஸப்தமி பின்னிரவு 5.17
நட்சத்திரம் : திருவோணம்
முன்னிரவு 11.26 வரை
சுபநேரம் : 7.39 - 9.09
ராகுகாலம் : 1.39 - 3.09
(பழைய நேரப்படி)

# வடமராட்சியில் மாவீரர் தினத்தை எழுச்சியுடன் கொண்டாட ஏற்பாடு

கரவெட்டி,நவ.17

வடமராட்சிப் பிரதேசத்தில் மாவீரர் தினத்தை எழுச்சியுடன் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

வல்வெட்டித்துறையில் இராசாத்தி அம்மன் ஆலய வீதியில் பந்தல் அமைக்கப்பட்டு மாவீரர்களின் உருவப்படங்கள் வைத்து மரியாதை செய்யப்படுவதுடன், மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளது.

பருத்தித்துறையில் பஸ் நிலையத்தில பந்தல்கள் அமைக்கப்பட்டு மாவீரர்களின் உருவப்படங்கள் வைத்து மரியாதை செய்யப்படுவதுடன், எதிர்வரும் 26ஆம்திகதி முற்பகல் 11.30 மணிக்கு வேலாயுதம் மகா வித்தியாலயத்தில் மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வும் இடம்பெறும்.

கரவெட்டியில் எதிர்வரும் 25ஆம் திகதி விக்னேஸ்வராக் கல்லூரியில் மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெறும். எதிர்வரும் 27ஆம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் மில்லர் நினைவரங்கில் கரவெட்டிப் பிரதேச மாவீரர்களின் உருவப் படங்கள் வைத்து மரியாதை செய்யப்படவுள்ளது.

மாவீர்தின இறுதிநாளான எதிர்வரும் 27ஆம் திகதி மாலை 4 மணிக்கு வடமராட்சிப் பிரதேசத்தின் மாவீரர்களின் பெற்றோர்களை தாமோதரா (படா) வித்தியாலயத்திலிருந்து மங்கள வாத்தியங்கள், பாண்ட் வாத்திய அணிவகுப்புகளுடன் வடமராட்சி எள்ளன்குளம் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு அழைத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.(8-70-202)

## உதயவாக்கு

பொய்மையின் அடிப்படையில் உருவான உறவுகள் சேற்றில் இடப்பட்ட அத்திவாரத்திற்கு ஒப்பாகும்.

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## கோழிக்குஞ்சு விற்பனை

Original Prima Broiler மற்றும் பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. க.தன பாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர்.

(38594)

## நாய்க்குட்டி விற்பனை

டல்மேஷன் (DALMATION) Highly Pedigread 2½ மாதம் நிரம்பிய நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு. பூச்சி மருந்தும் சகல தடுப்பூசிகளும் கொடுக்கப்பட்டுள்ளது. தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்: 0777 390391.

(38601)

## தொடர்புகொள்ளவும்

யாழ்ப்பாணம், பஜார் வீதியில் 12.11.2004 இல் பவுண் ஆபரணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர் உண்மையான ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ள கீழுள்ள முகவரியில் தொடர்புகொள்ளவும். இல.103,பஜார் வீதி, யாழ்ப்பாணம். (38654)

## வீடு வாடகைக்கு

3 அறைகள், சமையலறை, ரெலிபோன் வசதிகளுடன் கூடிய வீடு கொழும்புத்துறை கணக்கர் சந்திக்கு அருகில் வாடகைக்கு உண்டு. தொடர்பு: 360/5, பிரதான வீதி (பஸ்தியன் சந்திக்கு அருகில்),யாழ்ப்பாணம்.

(38606)

## தவறிவிட்டது

கட்டுவன் சு.ஜீவஜோதி என்பவரின் தேசிய அடையாள அட்டை (இல.575092241V), விசேட அடையாள அட்டை, ஒரு தொகைப் பணம், நகைகள் அடங்கிய "பேர்ஸ்" யாழ்ப்பாணம் நகரில் 10.11.2004 இல் காணாமற்போய் விட்டது. கண்டெடுத்தவர்கள் யாழ். ஹட்டன் நஷனல் வங்கியில் ப.சசிவர்ணனிடம் ஒப்படைக்கவும். (சி-39065)

மட்டுவிலைச் சேர்ந்த காசிநாதன் பங்கையவதனி என்பவருடைய தேசிய அடையாள அட்டையும் (845792607V), விசேட அடையாள அட்டையும் (091008793) யாழ். பஸ் நிலையத்துக்குக்கும் ஆரியகுளத்திற்கும் இடையில் 07.11.2004 ஞாயிற்றுக்கிழமை தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். ஸ்ரீமகா விஸ்ணு,70,72, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(38679)

## நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர் மன்றம்

நல்லூர்,நவ.17

தமது கஷ்டநிலை காரணமாகக் கல்வி வாய்ப்புகளை இழந்திருக்கும் சிறுவர்கள் உட்பட உயர் கல்வியைத் தொடரமுடியாதிருக்கும் மாணவர்களுக்கு உதவும் பொருட்டுப் புலம்பெயர்ந்து கனடாவில் வாழும் நெடுந்தீவு மக்கள், அங்கு நெடுந்தீவு பாடசாலைகளின் பழைய மாணவர்மன்றம் என்ற அமைப்பை அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைத்துள்ளனர்.

நெடுந்தீவுப் பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றுபவர்களுக்கு மாதாந்த வேதனமாகத் தலா 2 ஆயிரம் ரூபாவை வழங்கவும் -

அடுத்தவருடம் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள 115 மாணவர்களுக்கு மாதிரி வினாத்தாள்களை வழங்கி அவர்களைப் பரீட்சைக்குத் தயார்செய்யவும் - மேற்படி அமைப்பு நடவடிக்கை எடுத்துள்ளது.

(10-111)

## நெஞ்சை விட்டகலாத ஓராண்டு நினைவலைகள்



திருமதி

**யோகசுந்தரம் சிவபாக்கியம்**

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 06.03.1938 | 28.11.2003 |

திதி: 17.11.2004

*அன்போடு ஆதரித்து அரவணைத்தீர்!*
*பண்போடு வாழ்ந்து மறைந்துவிட்டீர்!*
*இன்றோடு ஓராண்டு ஆனாலும் நினைவுகள்*
*எம்மோடு என்றுமே நிறைந்தே இருக்கும்.*

அன்புத்தங்கை (கிளி).
திருமதி
இரத்தினபூபதி சற்குணநாதன் (லயன்).

மீசாலை மேற்கு,
மீசாலை.
(38677)(34-19-44)

# Pharmaceutical Marketing Vacancies

Cipla



இந்தியாவில் மிகப் பெரிய மருந்துகள் உற்பத்தி நிறுவனமான **Cipla** நிறுவனத்தின் உள்ளூர் முகவர்களான *Citihealth Imports (Pvt) Ltd.* நிறுவனமாகிய எமக்கு மருத்துவ பிரதிநிதியாக (Medical Reprasentative Cum Demontrator) யாழ்ப்பாண குடாநாட்டில் நியமிக்கப்படுவதற்கான உத்வேகமும் ஆர்வமும் உள்ள இளைஞர்கள் தேவைப்படுகிறார்கள்.

சிப்லா மருத்துவப் பொருள்கள் ஏற்கனவே வடபகுதியில் எமது விநியோகத்தர்களான **வனிக்கா மெடிக்கல்ஸ் 55,ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்** ஊடாக வெற்றிகரமாக சந்தைப்படுத்தப்பட்டுவருகின்றன.

**யாழ்ப்பாணத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட இரசாயனம். உயிரியல் பாடங்களுடன் ஜி.சி.ஈ. உயர் தரத்தில் சித்தி எய்திய 25 வயதுக்குட்பட்டவர்கள் விண்ணப்பிக்கலாம். ஆங்கிலத்தில் உரையாடும் திறமை இருப்பின் விசேடத் தகுதியாகக் கருதப்படும்.**

தயவு செய்து ஈ.மெயில் செய்யவும்.
citi@isplanka.lk
C.Vஅல்லது உங்கள் விபரங்களை பக்ஸ் செய்யவும்.
Fax:011 4412055

*Citihealth Imports (Pvt) Ltd*
29/3, Kirimandala Mawatha, Nawala, Rajagiriya.
Tel: 011 - 2861800 (Hunting), 011 - 2865819

# மாவீரர் தினத்தை முன்னிட்ட நிகழ்வுகள்

வரணி,நவ.17

தென்மராட்சிப் பிரதேசத்தில் மாவீரர் வாரத்தை எழுச்சியுடன் அனுஷ்டிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளை விடுதலைப் புலிகளின் அரசியல்துறையினர் செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுப்பந்தல் அமைத்து மாவீரர்களின் உருவப்படங்களை வைத்தல், சுடரேற்றுதல், முக்கிய இடங்களில் எழுச்சிப் பாடல்களை ஒலிபரப்புதல், வீதிகளை மஞ்சள் சிவப்புக் கொடிகளால் அலங்கரித்தல், பதாதைகள் கட்டுதல் மற்றும் மாவீரர் தின வளைவுகள் என்பன அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாவீரர் தின நிகழ்வுகளைக் கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம் மற்றும் வரணி ஆகிய இடங்களில் வைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலை, கைதடி ஆயுள்வேத வைத்தியசாலை மற்றும் கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லம் என்பன சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்படவுள்ளன.

இதற்கான ஏற்பாடுகள் தேசிய எழுச்சிப் பேரவை செய்துவருகின்றது.

இதேவேளை - தமிழீழ தேசியத் தலைவரின் பிறந்தநாளை ஒட்டி அவருடைய உருவபடம் ஒன்றை வைக்கவும் பிறந்த தினத்தன்று இனிப்புப் பண்டங்கள் வழங்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (10-5,170)

★ ★ ★

யாழ்ப்பாணம்,நவ.17

யாழ்.பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் 25 ஆம், 26 ஆம், 27 ஆம் திகதிகளில் மாவீரர் தின நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

நினைவுப் பந்தல் அமைத்து, மாவீரர்களின் திருவுருவப் படங்களை வைத்து மாவீரர்களை நினைவு கூருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. (10-203)

★ ★ ★

கைதடி,நவ.17

மாவீரர் தினத்தை முன்னிட்டுக் கைதடி நாவற்குழிப் பிரதேசத்தைச் சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தென்மராட்சி மேற்கு ப.நோ.கூ.சங்கக் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.(10-75-202)

★ ★ ★

வரணி,நவ.17

மாவீரர் தினததை முன்னிட்டு கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்தை• பாடசாலை மாணவர்கள், மகளிர் அமைப்புப் பிரதிநிதிகள் ஆகியோர் சிரமதானததின் மூலம் துப்புரவுசெய்து அலங்கரித்து வருகின்றனர்.

கடந்த வருடங்களிலும் பார்க்க இம்முறை மாவீரர்தினம் எழுச்சிபூர்வமாக கொண்டாடப்படவுள்ளதாக கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லப்பொறுப்பாளர் அஅரசையா தெரிவித்துள்ளார்.

அத்துடன், மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வுகள் எதிர்வரும் 20ஆம் திகதி கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயத்திலும், 21 ஆம் திகதி சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்திலும் அதேதினம் கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்திலும் இடம்பெறவுள்ளன.

அத்துடன், வன்னி செல்லும் மாவீரர்களின் பெற்றோர்களை கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் இருந்து வன்னிக்கு அழைத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

(10-203-170)

★ ★ ★

குருநகர்,நவ.17

யாழ்.கோட்ட எல்லைக்குள் வசிக்கும் மாவீரர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 21ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு யாழ். சென்ஜேம்ஸ் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. குருநகர், பாஷையூர், கொழும்புத்துறை, நாவாந்துறை ஆகிய பகுதிகளில் உள்ள மாவீரர்களின் பெற்றோர்களே இந்நிகழ்வில் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்நிகழ்வுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் மாவீரர்களின் பெற்றோர்களுக்கு அழைப்புக் கடிதங்களும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகக் கடற்புலிகளின் யாழ். கோட்ட அரசியற்றுறைப் பொறுப்பாளர் ஐ.தென்றல்மாறன் தெரிவித்துள்ளார். (10-51-203)

★ ★ ★

யாழ்ப்பாணம்,நவ.17

மாவீரர் தினத்தை முன்னிட்டுத் தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் குடாநாட்டுப் பாடசாலைகளில் கல்விகற்று மாவீரர்களாகியவர்களின் பெற்றோர்களைக் கௌரவிக்கும் நிகழ்வுகள் எதிர்வரும் 21ஆம் திகதி தொடக்கம் ஒவ்வொரு கல்விக் கோட்டங்களிலும் நடைபெறவுள்ளன. மாவீரர் தினத்தை முன்னிட்டு பாடசாலைகளில் மேற்கொள்ளவேண்டிய வேலைத்திட்டங்கள் தொடர்பாக ஒவ்வொரு கல்விக் கோட்டங்களிலும் சந்திப்புக்களை நடத்தி வருவதாக தமிழீழக் கல்விக்கழகத்தின் யாழ்.மாவட்டப பொறுப்பாளர் ஆர்வலன் தெரிவித்துள்ளார்.

(10-7-202)

## சித்திரமும் வடிவமைப்பும்

பட்டப்படிப்பு நுழைவுத் தேர்வுக்கான
பயிற்சி வகுப்புகள்
நடைபெறுகின்றன.
**IAT** சித்திரப்பயிற்சி நிறுவனம்
ஆத்திசூடி வீதி, கந்தர்மடம்.
(38676)

## துயர் பகிர்கின்றோம்



அமரர் கணவதிப்பிள்ளை
**ஆழ்வாப்பிள்ளை திருஞானம் (திரு)**

உமது அன்பு மறக்கவே முடியாத தொன்று!
உமது பண்பு காணவே முடியாத தொன்று!
உமது நட்பு பிரியவே முடியாத தொன்று!
உமது பிரிவு தாங்கவே முடியாத தொன்று!!
விழிநீர் சொரிந்து தவிக்கின்றோம்.

இல.09, நவீன சந்தை,
ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

பொ.செந்தில்நாதன் குடும்பத்தினரும்,
இராமகிருஷ்ணா ஊழியர்களும்
(38680)(34-16-44)

## மரண அறிவித்தல்

### திருமதி றோசம்மா நாகமணி

இளவாலையைப் பிறப்பிடமாகவும் "யசிந்தா இல்லம்" ஏழாலை கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி றோசம்மா நாகமணி (13.11.2004) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை - அக்கினஸ் அக்கா (இளைப்பாறிய ஆசிரியை, யா/புனித சாள்ஸ் ம.வி.) ஆகியோரின் ஏக புதல்வியும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை நாகமணியின் (கிளாக்கர் - நிர்வாக உத்தியோகத்தர், ப.நோ.கூ.ச. ஏழாலை மேற்கு) அன்பு மனைவியும் லில்லிபுஸ்பராணி (கனடா), ஜெயரட்ணம் வில்லியம் (கனடா - இளைப்பாறிய அத்தியட்சகர்-இ.மி.ச. கொழும்பு), தனரெத்தினம் (இளைப்பாறிய சாலைமுகாமையாளர், காரைநகர்), விஜயரத்தினம் (இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர்-கல்வி வலயம், யாழ்ப்பாணம்), அரியரத்தினம் (ஆசிரியர்), ஞானரத்தினம் (இந்தியா), யசிந்தா (லண்டன்), செல்வரத்தினம் (ஜீவா-லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜேம்ஸ் (சட்டத்தரணி - ஆஸ்திரேலியா), சறோஜினி(கனடா), சந்திரா, கலா, புஸ்பா (இந்தியா), ஞானசோதி (Home Office, Immigration Department U.K.), தேவிகா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கத் திருப்பலி இன்று (17.11.2004) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஏழாலை புனித இசிதோர் ஆலயத்தில் இடம்பெற்று, பூதவுடல் புனித இசிதோர் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

யசிந்தா இல்லம்,
ஏழாலை கிழக்கு, ஏழாலை.
T.P.No:060 2213278.

தகவல்:
N.N.அரியரத்தினம்.
(38655)(34-19-44)

# செய்திக் கொத்து

## மாவீரர் தினத்தை முன்னிட்டு பண்டத்தரிப்பில் மரதன் ஓட்டம்

வலி.தென்மேற்கு,நவ.17

மாவீரர் தினத்தை முன்னிட்டு பண்டத்தரிப்பு ஐக்கிய விளையாட்டுக்கழகம் மரதன் ஓட்டப்போட்டியொன்றை நாளை வியாழக்கிழமை காலை நடத்தவுள்ளது.

பண்டத்தரிப்புச் சந்தியிலிருந்து ஆரம்பமாகும் மரதன் ஓட்டம் தொட்டிலடி, சண்டிலிப்பாய்ச் சந்தி, சங்கானை, சித்தன்கேணி ஆகிய இடங்களுக்கூடாகச் சென்று மீண்டும் பண்டத்தரிப்புச் சந்தியை வந்தடையும்.

போட்டியில் பங்குபற்ற விரும்புபவர்கள் கழகத்துடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (8-135-202)

## குளங்கள் திருத்தப்படவில்லை

கோப்பாய்,நவ.17

கோப்பாய் கண்ணகை அம்மன் கோயில் குளம், வேளைக்குளம் ஆகிய குளங்கள் இவ்வருடமும் திருத்தியமைக்கப்படாமையினால் உரிய நீர்க் கொள்ளளவைப் பேணமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடந்த காலங்களில் இதுபற்றி உரியவர்களிடம் தெரிவிக்கப்பட்டபோதும் இதுவரை அது தொடர்பாக எவரும் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் இதனால், எதிர்வரும் கோடை காலங்களில விவசாயத்திற்கு கிணறு மூலம் நீர்ப்பாசனம் செய்வதில் பெரும் சிரமங்களினை எதிர்கொள்ள வேண்டி வரும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (8-203-72)

## ஏழாலையில் வீதிகள் திருத்தம்

ஏழாலை,நவ.17

ஏழாலை மேற்கு இலங்கையர்கோன் வீதி வலி.தெற்கு பிரதேச சபையின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

கடந்த வருடம் இவ்வீதி அபிவிருத்திக்கென பறிக்கப்பட்ட கற்கள், தார் என்பன பிரதேச சபையால் வேறொரு வீதியின் அபிவிருத்திக்கு எடுக்கப்பட்டமையும், சுமார் 25 வருடங்களுக்கு பின்னர் தற்போதுதான் இவ்வீதி அபிவிருத்தி நடைபெறுகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். (8-203-45)

## மாணவர்களுக்கு அப்பியாசப் புத்தகங்கள்

தென்மராட்சி,நவ.17

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் நூற்றாண்டையொட்டி தயாரிக்கப்பட்ட அப்பியாசப் புத்தகங்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

கல்லூரி அபிவிருத்திச் சபையினர் ஒவ்வொரு மாணவர்களுக்கும் தலா 300 ரூபா பெறுமதியான அப்பியாசப் புத்தகங்களினை வழங்கி இதற்கான கொடுப்பனவுகளை டிசம்பர் 10 ஆம் திகதிக்கு முன்னர் வழங்குமாறு அறிவித்துள்ளனர்.

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகள் இக்கல்லூரியில் கல்வி கற்பதால் அவர்கள் தமது கொடுப்பனவுகளினை வழங்கமுடியாது திண்டாடுவதுடன் அப்பியாசப் புத்தகங்கள் மாணவரிடையே திணிக்கப்பட்டுள்ளது எனவும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (8-203-117)

## திருட்டுகள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,நவ.17

கொக்குவில் பகுதிகளில் மீண்டும் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன.

கொக்குவில் கிழக்கு புகையிரதப் பாதைக்கு அண்மையாக உள்ள வீடொன்றின் ஜன்னல் கமபியை உடைத்து உள்ளிருந்த ரீ.வி., டெக உட்பட புடைவைகள் என்பனவும் திருடப்பட்டுள்ளன.

இதேபோலவே அப்பகுதியில் உள்ள வேறொரு வீட்டிலும் உறங்கிக் கொண்டிருந்த பெண்ணின் கழுத்தில் இருந்த சங்கிலியை ஜன்னலினூடே கையைவிட்டு அறுத்துச் சென்ற சம்பவமும் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

இதனையடுத்து இப்பகுதி மக்கள், இளைஞர்கள் விழிப்படைந்து செயற்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (8-203-69)

## வீதி மூடப்படும் அபாயம்

நவாலி,நவ.17

நவாலி காத்தவராயர் ஆலயத்திற்குச் செல்லும் பாரிய வீதியில் மணல் அகழ்வதால் அவ்வீதி விரைவில் மூடப்படும் அபாயம் தோன்றியுள்ளது.

ஆனைக்கோட்டை சிவன் கோயிலடியில் இருந்து ஒரு மைல் தொலைவில் இருக்கும் மேற்படி ஆலயத்திற்குச் செல்லும் இவ்வீதி நெல்வயல்களுக்கு மத்தியில் அமைந்துள்ளது. இதிலிருநது சில விவசாயிகள் மண்ணை அகழ்ந்து வயல் வரம்புகளினை அமைத்துவருவது மட்டுமல்லாமல, சிலர் உழவு இயந்திரங்களிலே மண்ணை ஏற்றிச் சென்று விற்பனை செய்தும் வருகின்றனர்.

இதனால் இவ்வீதி மூடப்பட்டு வயலோடு வயலாக வீதியும் மாறிவிடும் நிலை ஏற்பட்டுள்ளதுடன் ஆலயத்திற்கு செல்வதற்கான பாதையும இல்லாமல் போகும் அபாயம் தோன்றிவிடுமோ என மக்கள் கவலை தெரிவிக்கின்றனர் (8-203-100)

## வீதி கடும் சேதம்

சாவகச்சேரி,நவ.17

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் ஆலய பின் வீதி போக்குவரத்து செய்யமுடியாத நிலையில் சேதமடைந்து காணப்படுகின்றது. இதனால, தற்போது பெய்துவரும் மழை காரணமாக அவ்வீதியில் வெள்ளம் தேங்கியுள்ளதால் பாடசாலை மாணவர்கள் உட்பட ஏனையோரும் அவ்வீதியால் போக்குவரத்துச் செய்ய முடியாமல் சிரமங்களினை எதிர்கொண்டு வருகின்றனர்.

கைதடி நுணாவில் வைரவர் கோயிலடியில் ஆரம்பமாகும் இவ்வீதி பன்றித்தலைச்சி அம்மன் கோயில் பின் வீதியில் முடிவடைகின்றது. கைதடி நுணாவில் வைரவர் கோயிலடியல் இருந்து கல்பம் சிவன்கோயில் சந்திவரை இவ்வீதி புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. ஆனால், சிவன் கோயில் சந்தியில் இருந்து அம்மன் கோயில்வரையான வீதி திருத்தப்படாதுள்ளது எனவும் 2000ஆம் ஆண்டு இடம்பெறற இராணுவ நடவடிக்கையின் பின் இவ்வீதி திருத்தப்படவில்லை எனவும் இதனை உரியவர்கள் கவனத்தில் எடுக்குமாறும் அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (8-203-31)

## பாடசாலை செல்லாத மாணவரை இனங்காண நடவடிக்கை

வட்டுக்கோட்டை,நவ.17

பனிப்புலம் கிராமத்தில் பாடசாலை செல்லாத மாணவர்களை இனங்கண்டு அவர்களை கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுத்த தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடவடிக்கை எடுக்கவுள்ளது.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக இக்கிராம மக்களுடன் கலந்துரையாடி மாணவர்கள் கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடாமைக்குரிய காரணங்கள் இனங்காணப்பட்டன.

இம்மாணவர்களின் குடும்ப நிலையைக் கருத்திற் கொண்டு தொடர்ந்து கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபட தமிழர் புனர்வாழ்வுக் கழகம் நடவடிக்கைகள் மேற்கொள்ளும் எனத் தெரிவிக்கப்பட்டது. (8-204-161)

## வயல்களில் நீர்மட்டம் உயர்வு

வட்டுக்கோட்டை, நவ.17

தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழையினால் வயல்களின் நீர்மட்டம் உயர்ந்து நெற்பயிர்களினை சேதமாக்கியுள்ளன.

பருவகால மழை உரிய காலத்தில் கிடைக்காமையினால் கோட்டைக்காடு, சங்கரத்தை, சுழிபுரம், அராலி ஆகிய இடங்களில் பெருமளவு விவசாயிகள் பிந்திய நெல்விதைப்பினை மேற்கொண்டிருந்தனர் எனவும் திடீரெனப் பெய்த மழையினால் ஏற்பட்ட நீர்மட்ட உயர்வினால் பயிர்கள் சேதமடைந்துள்ளன என்றும் தொடர்ந்து பெய்துவரும் மழையினால் மேலும் நீர்மட்டம் அதிகரிக்கக்கூடும் எனவும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

(8-203-161)

## வாய்க்காலைத் துப்புரவு செய்யக் கோரிக்கை

கொக்குவில்,நவ.17

தாவடிச் சந்தியிலிருந்து சம்பியன் வீதி வரையான, காங்கேசன்துறை வீதிக்கு அண்மையிலுள்ள வாய்க்காலைத் துப்புரவு செய்துதருமாறு கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் க.சுந்தரேசன் உடுவில் பிரதேச சபையின் செயலாளரைக் கேட்டுள்ளார்.

இது விடயமாக அவர், பிரதேசசபைச் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே இவ்வாறு கேட்டுள்ளார்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

தற்போது நியாப் திட்டத்தின்கீழ் நந்தாவில் வாய்க்கால் புனரமைக்கப்பட்டு வருகின்ற காரணத்தினால் அப்பகுதி மக்கள் இவ்வாய்க்காலையும் துப்புரவு செய்து தருமாறு கேட்டுள்ளனர். எனவே, உடனடியாக குறிப்பிட்ட பகுதியிலுள்ள வாய்க்காலைத் துப்புரவு செய்வதன் மூலம் இப்பகுதியில் தேங்கி நிற்கின்ற நீர், புனரமைக்கப்பட்டு வரும் நந்தாவில் வாய்க்கால் ஊடாக கடலுக்குச செல்வதற்கு வசதிகள் இருப்பதனால் இவ்வாய்க்காலை தங்கள் பிரதேச சபை மூலமாக துப்புரவு செய்துதருமாறு கேட்டுக்கொள்கிறேன். - என்றுள்ளது.

(8-76)

## தச்சந்தோப்பில் மருத்துவ முகாம்

யாழ்ப்பாணம்,நவ.17

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினால் தச்சந்தோப்பு பிரதேசசபை உப அலுவலகத்தில் கடந்த மாதம் மருத்துவமுகாம் ஒன்று நடத்தப்பட்டது.

இம்மருத்துவமுகாமில் சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்கு, வைத்திய ஆலோசனை வழங்கல் மற்றும் மருந்துகள் வழங்கல் போன்ற செயறபாடுகள் இடம்பெற்றன.

இதனை யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட சமுதாயமருத்துவத்துறை மாணவர்கள், யாழ்.போதனா வைத்தியசாலை வைத்தியக் கலாநிதி எஸ்.கவிதா ஆகியோர் நடத்தினர். இம்மருத்துவ முகாமில் நூற்றுக்கும் அதிகமானோர் கலந்துகொண்டு பயன்பெற்றனர். (8-203)

# வாசகர் திருமுகம்

## வணிக முகாமைத்துவ பீடம் சிந்திக்க மறுப்பதேன்?

வணிகப் பிரிவில் கல்விப்பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து பல்கலைக்கழக அனுமதிபெறுவது தமிழ் மாணவர்களைப் பொறுத்தவரை மிகமிக கடினமான ஒன்றாக மாறிவருகின்றது. அனுமதி பெறுபவர்களில் அதிஉச்சப் புள்ளிகளைப் பெறும் ஒரு சில மாணவர்களைத் தவிர்ந்த ஏனையோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடத்திற்கு அனுமதி பெறுகின்றனர். பல போட்டிகளின் மத்தியில் அதிகூடிய வெட்டுப்புள்ளிகளைப் பெற்று அனுமதி பெறும் எமக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தற்கால மாற்றங்களுக்குப் பொருத்தமான கல்வித்திட்டம் அமைக்கப்படாதது எம்மைப் பொறுத்தவரை மிகப்பெரிய குறைபாடாகக் காணப்படுகின்றது. நாட்டிலுள்ள ஏனைய பல்கலைக்கழகங்கள் எல்லாம் தற்காலத் தேவைக்கேற்ப வகையில் சந்தைப்படுத்தல், வியாபாரப் பொருளியல், கணக்கியல், நிதியியல் போன்ற பலசிறப்புக் கற்கைநெறிகளை முகாமைத்துவ மாணவர்களுக்காக பல ஆண்டுகளுக்கு முன்பே ஆரம்பித்து நடத்திவருகின்றன. இத்னால், அவர்கள் வேலைவாய்ப்புக்களில் முன்னுரிமை பெறுவதோடு 'சீமா' போன்ற பரீட்சைகளிலும் பல பாடங்களில் விலக்களிக்கப்படுகின்றார்கள்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அது ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்தே பி.கொம்., பி.பி.ஏ. ஆகிய இரு பாடநெறிகள் நடத்தப்பட்டுவருகின்றன. 25 வருடங்களுக்கு மேலாக இது நடத்தப்பட்டு வருகின்றது. அண்மைக் காலத்தில் ஓரிரண்டு பாடங்களை மாற்றிவிட்டு சிறப்புக் கற்கைநெறி என்றார்கள். இவையும் முழுமையான சிறப்புக் கற்கை நெறிகளாக அமையவில்லை. இவற்றிலும் சந்தைப்படுத்தல், கணக்கியல், நிதியியல் போன்ற நெறிகளைக் கற்க வணிகமாணவர்களுக்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டது. கூடிய புள்ளிகளைப் பெற்று அனுமதி பெற்ற முகாமைத்துவ மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்படுவதில்லை. இதனால், ஒரு சிலர் தவிர்ந்த முகாமைத்துவ மாணவர்கள் ஆசிரியத் தொழிலையே நம்பியிருக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

வணிகப்பிரிவில் குறைந்த புள்ளிகளைப் பெற்ற வணிகப்பிரிவு மாணவர்களும், கலைப்பிரிவு மாணவர்களும் வவுனியா வளாகத்திற்கு அனுமதி பெறுகின்றார்கள். அவர்களுக்கு பி.பி.ஏ. (கணக்கியல் சிறப்பு) கற்கைநெறி கற்பிக்கப்படுகின்றது. சிறந்த பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. அவர்களுக்கு 'சீமா' பரீட்சையில் அதிகமான பாடங்களுக்கு விலக்களிக்கப்படுகின்றது. ஒரு வளாகத்தால் முடியுமெனில் ஒரு பல்கலைக்கழகத்தால் ஏன் சிறந்த கற்கைநெறிகளை நடத்தமுடியாது?

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் உள்ளவர்கள் இதைப்பற்றிச் சிந்திப்பார்களா? அல்லது 25 வருடங்களாக நடத்திவரும் கற்கைநெறிகளையே 50 வருடங்களுக்கும் நீடிப்பார்களா? இதனால், பாதிக்கப்படுவது தமிழ் மாணவர்கள்தான் என்பதனை இவர்களால் மறுக்கமுடியுமா?

**ஆர்.கங்காதரன்,**
**எஸ்.சிவனேசன்.**
யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ பட்டதாரிகள்.

## இவர்களுக்கும் 'அது' கிடைக்குமா?

கஷ்டப் பிரதேசங்கள், அதிகஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றும் ஆசிரியர்கள், அதிபர்களுக்கு அடுத்தாண்டு தொடக்கம் 'கஷ்டப் படி' வழங்கப்படவுள்ளதாக அரசு அறிவிததுள்ளது. இது மிகவும் வரவேற்கக் கூடியது. காலந்தாழ்த்தி அறிவிக்கப்பட்டாலும் பரவாயில்லை.

பொதுவாக யாழ் மாவட்டத்தில் வடமராட்சி கிழக்கு, தீவகம் போன்ற பிரதேசங்கள் சொல்ல முடியாத கஷ்டங்களை ஆசிரியர்களுக்கு உண்டுபண்ணும் பிரதேசங்கள். இங்கு கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு எதிர்காலத்தில் 'கஷ்டப் பிரதேசப்படி' வழங்கத் தீர்மானித்தது போல கடந்த காலங்களில் கடமையாற்றிய ஆசிரியர்களுக்கும் இப் படி வழங்கப்பட வேண்டியது நீதியும் நியாயமுமாகும்.

மிகுந்த கஷ்டத்தின் மத்தியில் பொருளாதார நெருக்கடிகளின் பிடியில் சிக்கியும், போக்குவரத்துக் கஷ்டங்களை அனுபவித்தும், அதிகாரிகளின் கெடுபிடிகளைத் தாங்கியும், அன்றாடம் ஏ-9 பாதையைக் கடந்தும் இத்தகைய கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றிய அந்த ஆசிரியர்களுக்கு அவர்கள் கடமையாற்றிய முழு வருடங்களுக்கு வழங்கப்படாவிடினும் அரைவாசிக் காலத்துக்காவது 'கஷ்டப் படி' வழங்க வேண்டியது தார்மீகக் கடமையாகும்.

2002ஆம் ஆண்டு சமாதான உடன்படிக்கையின் பின் ஏ-9 பாதை திறக்கப்பட்டதைத் தொடர்ந்து புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களான வடமராட்சி கிழக்குப் பகுதியில் கடமையாற்றிய ஆசிரியர்களையும் தீவுப்பகுதிகளுக்குச் சென்று கடமையாற்றியவர்களையும் இத்தருணத்தில் நினைத்துப் பார்க்க வேண்டியது உரியவர்களின் நன்றி கலந்த கடமையாகும்.

**க.ஸ்ரீசந்திரன்,**
ஹாட்லிக் கல்லூரி.

பருத்தித்துறை.

## யாரிடம் சொல்வோம்?

வீதிகளில் குப்பை கொட்டவேண்டாம், அவ்வாறு கொட்டினால் அவற்றிற்கு நாம் பொறுபபாளிகள் அல்லர் என மாநகர சபையினரால் அறிவித்தல் விடுக்கப்பட்டது யாவரும் அறிநததே. ஆனால், அதற்காக ஒரு வீதி நாறடிக்கப்படுவதை ஏற்றுக் கொள்ளமுடியுமா?

நான் இக்கடிதத்தை வரைந்ததன் நோக்கம் எமது யாழ்.குடாநாட்டின் மாட்டீன் வீதி - வேம்படி வீதி சந்திக்குச் சென்றால் புரியும்.

மாநகர சபையினால் அறிவிப்பு கொடுக்கப்பட்டதென்னவோ உண்மைதான். ஆனால், தள்ளுவண்டிலில் குப்பை சேகரிப்போர், கூட்டுவோர் போன்றவர்கள் தாமே வீதிகளில் ஓரிடத்தில் குப்பைகளைக் கொட்டுகின்றனர். இதனால், சுற்றுப்புறத்தில் வாழும் சில பொறுப்பற்றவர்களும் குறிப்பிட்ட இடத்தில் குப்பைகளை கொட்ட, இதனால் அவ்விடம் குப்பை கொட்டபடும் இட மாகவே மாற்றப்படுகிறது.

இதே நிலையில்தான் மாட்டீன் வீதி - வேம்படி வீதிச்சந்தி உள்ளது. தத்தமது வீடு சுத்தமாக இருக்கவேண்டும் என நினைக்கும் நம்மவர்கள் அடுத்தவன் சூழல்தானே என நினைத்து மேலும் மேலும் குப்பைகளைக் கொட்டுவதே காரணமாகும்.

ஆனால், அவர்களில் பலர் இது நமது சூழல், நமது நாடு என்பதை மறந்து விடுகிறார்கள். இதனால், அவ்விடத்தில் அதுவும் இந்த மழைகாலத்தில் நுளம்புப் பெருக்கம் அதிகரித்து அதன் விளைவாக அவர்களே பாதிக்கப்படுவர் என்பதை விளங்க மறுக்கின்றனர்.

அது மட்டுமல்ல, மாநகரசபை ஊழியர்கள் சிலர் வீதிகளில் குப்பை சேகரிப்பு நிலையங்களை உருவாக்க அதன் பின்பு நம்மவர்கள் பலரும் அதில் குப்பைகளைக் கொட்ட, உழவு இயநதிரத்தில் குப்பை சேகரிக்க வரும் சிலருக்கு குறிப்பிட்ட குப்பை நிலையத்தை அகற்றுவதற்கு குறித்த வீட்டினர் பணம் கொடுக்க வேண்டிய நிலையும் காணப்படுகிறது.

இது தொட்டிலையும் கிள்ளி பிள்ளையையும் ஆட்டிவிடும் நிலை போலல்லவா உள்ளது. அவர்களே குப்பை கொட்டுவார்கள். அவர்களே குப்பை கொட்டக்கூடாது என அறிவித்தலும் போடுவார்கள். பின்பு ஏன் கொட்டினீர்கள் காசு கொடுத்தால் மட்டுமே குப்பை அள்ளுவோம் என குதிப்பார்கள், இவ்வாறுதான் நடக்கிறது. சிலர் விதிவிலக்காகலாம் . மேல் மாவட்ட அதிகாரிகள் இதை மறுக்கலாம். ஆனால், கீழ் மட்டங்களில் இதுவே உண்மை. ஏனெனில், பாதிககப்பட்டோரில் நானும் ஒருவன்.

அதுமட்டுமல்ல, மாட்டீன் வீதி, வேம்படி வீதிச் சந்தியைக் கடக்கவே முடியவில்லை. நாற்றம் உயிரை வாங்குகிறது. ஏறக்குறைய வீதி முழுவதும் பரந்து கிடக்கும் குப்பையையாவது அள்ளமாட்டார்களா? (காசு வாங்கினாலும் பரவாயில்லை) எனப் பலர் அங்கலாய்க்கின்றனர்.

அறிவித்தலின்படி குப்பை அள்ளவே மாட்டோம் என்றால், அக்குப்பைகளைத் தம் வீட்டு வளவினுள் ஏற்க யாரும் தயாரில்லை. எம் நிலை பற்றி யாரிடம் சொல்வது என்றே புரியவில்லை. சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்கமாட்டார்களா?

**- பாதிப்புற்றோர் சார்பில் தமிழ்நெஞ்சன்**

# கேள்வி அறிவித்தல்

## வீடமைப்பு மற்றும் கைத்தொழில் நிர்மாண, கிழக்கு மாகாண கல்வி மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி அமைச்சு

1. கைதடியிலுள்ள ஆயுர்வேத வைத்தியசாலை 3ஆம் வாட்டிற்கான திருத்தல் வேலைகளுக்கான பொறியிடப்பட்ட கேள்விகளை 2004.12.03 ஆம் திகதி மு.ப.10.00 மணி வரை யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டடத் திணைக்கள, பிரதான பொறியியலாளரின் அலுவலக, கேள்விச் சபைத் தலைவரால பெற்றுக்கொள்ளப்படும். மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணமாக ரூபா ஆயிரம் மாத்திரம் (Rs.1000.00) செலுத்துவதன் மூலம் 2004.11.29 ஆம் திகதி பி.ப.3.30 வரை யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டடத் திணைக்கள, பிரதான பொறியியலாளரின அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய படிவங்களிலேயே கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
2. பின்வரும் தகைமைகளைக் கொண்ட தகைமையுள்ள கேள்விதாரர்கள் கேள்விகோரலாம்.
   தரம் M7 மற்றும் அதற்கு மேல் நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர்களின் பதிவு மற்றும் தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் கட்டட நிர்மாண ஒப்பந்தகாரர்களாக பதிவுசெய்து கொண்ட மற்றும் இலங்கைத் தேசிய நிர்மாண சங்கத்தின் (NCCASL) அங்கத்துவத்தையும் கேள்விதாரர்கள் கொண்டிருத்தல்வேண்டும். அவர்களுக்கு கேள்வி ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன்பு விண்ணப்பதாரிகளினால் ஒப்பந்தகாரர்களின் பதிவுப் புத்தகம் மற்றும் NCCASL இன் அங்கத்துவ அட்டை போன்றன சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
3. கேள்வி ஆவணங்கள் யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டடத் திணைக்கள, பிரதான பொறியியலாளரின் அலுவலகம் (யாழ்ப்பாணம்) இல இலவசமாகப் பார்வையிடலாம்.
4. கேள்விகள் மூடப்படும் திகதியிலிருந்து 90 நாள்கள் வரையுமே கேள்விகள் செல்லுபடியாகும்.
5. கேள்விகள், கேள்விப்பிணையான ரூபா இருபத்தேழாயிரம் மாத்திரத்துடன் (Rs.27,000.00) சேர்த்து சமர்ப்பித்தல்வேண்டும்.
6. பொறியிடப்பட்ட கேள்விகளை முடிவடையும் நேரத்திற்கு முன்பு கிடைக்கக்கூடியதாக யாழ்ப்பாணம், கட்டடத் திணைக்களம், மே/பா பிரதான பொறியியலாளரின் அலுவலகம் (யாழ்ப்பாணம்), கேள்விச் சபைத் தலைவருக்கு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமோ கிடைக்கச்செய்தல் வேண்டும்.
7. யாழ்ப்பாணம், கடற்கரைவீதி, கட்டடத் திணைக்களம், பிரதான பொறியியலாளரின் அலுவலகத்தில் (யாழ்ப்பாணம்) கேள்விகள் மூடப்பட்டு உடனடியாகத் திறக்கப்படும்.
8. மேலதிக விவரங்களுக்கு தயவுசெய்து யாழ்ப்பாணம், கடற்கரை வீதி, கட்டடத் திணைக்களம், பிரதான பொறியியலாளரை (யாழ்ப்பாணம்) தொடர்புகொள்க.

**W.S.மொல்லிகொடை,**
கட்டடப் பணிப்பாளர்,
கட்டடத் திணைக்களம்,
"செத்சிரிபாய" ஸ்ரீ ஜயவர்த்தனபுர,
கோட்டே, பத்தரமுல்லை.
WWW.buildings.gov.lk. (C/39059)(42-45-15-34)


## கிணறுகள் சுத்தம்செய்யப்பட்டன

கைதடி,நவ.17

மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள மறவன் புலோ வடக்குப் பிரதேசத்திலுள்ள நன்னீர்க் கிணறுகள் யாவும் கமநலசேவைகள் அபிவிருத்தித் திணைக்களத்தினாலும் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினாலும் அண்மையில் மக்கள் பாவனைக்கு ஏற்றவாறு இறைத்துச் சுத்தப்படுத்தப்பட்டுள்ளன.

(10-75)

## விசேட பயிற்சிநெறி

யாழ்ப்பாணம்,நவ.17

காணாமற்போனோரின் பெற்றோர் குடும்ப அங்கத்தினருக்கான அமைப்பு, வன்முறையற்ற தொடர்பாடலுக்கான மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில் 'வன்முறையற்ற தொடர்பாடல்' என்ற தலைப்பில் விசேட பயிற்சிநெறி இன்று புதன்கிழமை தொடக்கம் எதிர்வரும் 20 ஆம் திகதிவரை கொழும்பிலுள்ள 'செடக்' நிறுவன அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள அரச உத்தியோகத்தர்களான கிராமசேவையாளர்கள், ஆசிரியர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், பத்திரிகையாளர்கள், பொது சௌக்கிய உத்தியோகத்தர்கள், பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்கள் போன்றோர் சார்பாக 25 பேர் தெரிவுசெய்யப்பட்டு இங்கு பயிற்சி வழங்கப் படவுள்ளது.

(எ-203)

## அடிப்படை வசதிகளற்ற மூளாய் மீன்சந்தை

வட்டுக்கோட்டை,நவ.17

அடிப்படை வசதிகள் அற்ற நிலையில் வெள்ளத்துக்கு மத்தியில் இயங்கும் மூளாய் மீன்சந்தையில் வியாபாரிகள் முதல் மீன்வாங்கச் செல்லும் பொதுமக்கள் வரை பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

வலிகாமம் மேற்குப் பிரதேச சபையின் கேள்வி அறிவித்தல் மூலம் தனியாருக்குக் குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள மீன்சந்தையில் பத்தடி நீள அகலமுள்ள ஒரு கொட்டகை மட்டுமே உள்ளது.

பொன்னாலைக் கடலில் பிடிக்கப்படும் கடலுணவுகள் இங்கு தான் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

மழை இல்லாத காலத்தில் மரங்களுக்குக் கீழ் இருந்து வியாபாரம் செய்துவந்த வியாபாரிகள் இச்சந்தை வெள்ளத்திலும் சகதியிலும் மூழ்கியுள்ளதால் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

கடந்த ஐந்து வருடங்களுக்கு மேலாக தனியாரின் காணியில் இயங்கும் இச்சந்தையை பிரதேச சபை குத்தகைக்கு விட்டுப் பணம்பெற்று வருகின்ற போதும் அடிப்படை வசதிகளையேனும் செய்துகொடுக்கவில்லை என மக்களும் வியாபாரிகளும் விசனம் தெரிவித்துள்ளனர். (10-161)

## ஸ்ரீ வித்யா பீட செயலாளர் இந்தியா பயணம்

ஸ்ரீ வித்யா சர்வதேச இந்துமத பீடச் செயலாளர் பிரம்மஸ்ரீ ராமச்சந்திரக்குருக்கள் பாபுசர்மா தென் ஆசிய சர்வமத சபை அழைப்பை ஏற்று புதுடில்லிக்குச் செல்லவுள்ளார்.

எச்.ஐ.வி. நோய்த் தாக்கத்திலிருந்து இளைய சமுதாயம் விடுபடவும், பாதிக்கப்பட்டவர்கள் தனிமைப் படுத்தப்படும் துயரங்களைப் பற்றியும் தெனாசியா சர்வமத குருமார்களிடையே புதுடில்லியில் நாளைமறுதினம முதல் நடைபெறவுள்ள கலந்துரையாடலில் பங்குகொள்வதற்காக ஸ்ரீவித்யா சர்வதேச இந்துமத பீடக் குருவானவர் சார்பில் இவர் செல்கிறார்.

(8-202)

## இலவச வழிகாட்டல் கருத்தரங்கு

டாக்டர் எம்.ஜி. ஆர்.டீம்ட் பல்கலைக் கழகத்தின் ஏற்பாட்டில் 'உயர்கல்விக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு' எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.ப.நோ.கூ.ச. கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (8-202)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்



19.10.2004 அன்று சிவப்பேறடைந்த எங்கள் குடும்பத் தலைவர்

# கணபதிப்பிள்ளை நடராஜா

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

எமது அன்புத் தெய்வத்தின் சபிண்டீகரணக் கிரியைகளும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் நாளை (18.11.2004) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் கலந்து கொள்வதோடு, தொடர்ந்து இடம்பெறுகின்ற மதியபோசனத்திலும் பங்கேற்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

☞ **தனிப்பட்ட அழைப்பிதழ்கள் கிடைக்கப்பெறாதவர்கள் இந்த அழைப்பை ஏற்று வருகைதருமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.**

"கற்பகவாசா"
இமையாணன், உடுப்பிட்டி. (38649)(34-45-15)

- **குடும்பத்தினர்.**



**UNIVERSITY OF JAFFNA, JAFFNA**
**Improving Relevance and Quality of Undergraduate Education (IRQUE)**

**INTENSIVE COURSE IN ENGLISH LANGUAGE SKILLS**

An intensive Course in English Language skills funded by the World Bank will be *conducted at the University of Jaffna including Vavuniya Campus from December* 2004 to January 2005.

Applications are invited from the final year students of Arts, Management Studies & Commerce admitted to the University of Jaffna in 1999, 2000 & 2001 who have completed the final examinations/awaiting for final examinations in December 2004 and not have been awarded their degrees. The Course will be of 160 hours duration.

Applications should be made on self prepared forms with the following details.

1. Full Name
2. Address : Permanent
   : Temporary
3. University Registration No.
4. Index No:

Course will be conducted in University of Jaffna and Vavuniya Campus. Applications close on 24.11.2004.

Applications to be sent to the following address:

***Mrs.A.Sivaneswaran,***
***Deputy Director/Administration***
***Local Technical Secretariat,***
***IRQUE Project.***
***University of Jaffna, Jaffna.***

**IRQUE Project**
**University of Jaffna.**
**15.11.2004** (சி-39057)(34-15-45)

**Deputy Director/ Administration.**



ALLIANICE FRANCAISE OF JAFFNA

பிரெஞ்சு நட்புறவுக் கழகம், யாழ்ப்பாணம்

## வருடாந்த பொதுச்சபைக் கூட்டம்

எமது கழக வருடாந்தப் பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 19.11.2004 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு கழக அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது சமுகந்தருமாறு வேண்டுகின்றோம்

83, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

- **செயலாளர்.** (38642)(42-34-15-45)



## விண்ணப்பம் கோரல்

வவுனியாவில் இயங்கிவரும் கணக்காய்வுத் துறைக்கு அதன் கிளிநொச்சிக் கிளைக்கு கணக்காய்வுப் பயிலுநர்களைச் சேர்த்துக்கொள்ளவுள்ளது.

**தகைமை**

▶ க.பொ.த.(உயர்தரம்) வர்த்தகத்துறையில் சித்தி
*அல்லது*
▶ கூட்டுறவுக் கல்லூரியில் உயர்தரத்தில் சித்தி
*அத்துடன்*
▶ AAT கற்கைநெறி தொடரும் மாணவர்கள்

குறிப்பு: தங்குமிட வசதிசெய்து தரப்படும்.

மேற்படி தகைமை கொண்டோர் விண்ணப்பங்களை சுயவிவரங்கொண்டதாகத் தயாரித்து கீழ்க்காணும் முகவரிக்கு 25.11.2004இற்கு முன்கிடைக்குமாறு அனுப்பிவைக்கவும்.

**BATHRA & CO**
*(Tax & Accounting Consultants)*
29A, S.P.K.Road, 1st Floor, Vavuniya.
024-4588152.
(38664)(34-15-45)



**கணக்காய்வு முகாமையாளருக்கான**

## விண்ணப்பம் கோரல்

வவுனியாவில் இயங்கிவரும் கணக்காய்வு நிறுவனம் அதன் கிளிநொச்சிக் கிளைக்கு கூட்டுறவுக் கணக்காய்வுக்கான முகாமையாளரைச் சேர்த்துக்கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமை:**

1. கடமையாற்றிய கூட்டுறவுக் கணக்காளர்/ கணக்காய்வாளர்,

*அல்லது*

2. கடமையாற்றிய கூட்டுறவுப் பரிசோதகர்

குறிப்பு: கூட்டுறவுத் துறையில் கணக்குப்பதிவியல்/கணக்காய்வில் அனுபவமுள்ளோரும் விண்ணப்பிக்கலாம்.

மேற்படி தகைமை உள்ளோர்கள் விண்ணப்பங்களை சுயவிவரம் கொண்டதாகத் தயாரித்து, கீழ்க்காணும் முகவரிக்கு 25.11.2004 இல் அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைத்தல்வேண்டும்.

**BATHRA & CO**
**(Tax & Accounting Consultants)**
29A,S.P.K.Road, 1st Floor, Vavuniya.
024-4588152. (38663)(42-34-15-45)

# தொடரும் பயிற்சி மூலமே கலையில் நிறைவைப் பெறமுடியும்



பிரபல வயலின் கலைஞரும், யாழ். இராம நாதன் நுண்கலைக் கல்லூரியின் முன்னாள் வயலின் விரிவுரையாளரும், லண்டன் 'ஞானா லயா' ∴பைன் ஆட்ஸ்' நிறுவனத்தின் அதிபரு மான திருமதி ஞானாம்பிகை பத்மசிகாமணி அண்மையில் இங்கு வருகை தந்திருந்தார். அவ ருடனான நேர்காணல் இங்கே தரப்படுகின்றது.

★ *கேள்வி:* உங்களைப் பற்றி....

☆ *பதில்:* சங்கீதக் கலை மீது சிறுவயது முதல் இருந்த ஆர்வத்தினால் பல பிரபலக் கலைஞர்களிடம் முறைப்படி சங்கீதம் கற்றேன். தொடர்ந்து இந்தியாவிற்குச் சென்று சங்கீதம் கற்றுப் பட்டம் பெற்றதுடன், சங்கீதத்தில் தங் கப் பதக்கமும் பெற்றுள்ளேன். வயலினோடு சங்கீதம், நடனம், மிருதங்கம் ஆகிய கலை களையும் கற்றுள்ளேன்.

அதன்பின்பு 1979 - 1990 வரை இராம நாதன் நுண்கலைக் கல்லூரியில் வயலின் விரிவுரையாளராகவும், யாழ். நாவலர் மகா வித்தியாலயம், வேம்படி மகளிர் கல்லூரி மற்றும் இந்தியாவிலுள்ள கல்லூரிகளிலும் வயலின் ஆசிரியையாகவும், சென்னைப் பல் கலைக்கழகத்தில் விரிவுரையாளராகவும் கடமை யாற்றினேன். இக்காலங்களில் சாருமதி ராமச் சந்திரன், ராஜ்குமார், பாரதி, சுதா ரகுநாதன், பிரசாத் போன்ற இந்தியக் கலைஞர்களுக்கும் சொர்ணமுகி போன்ற இலங்கைக் கலைஞர்களுக் கும் மற்றும் பல பிரபல வித்துவான்களுக்கும் பக்கவாத்தியம் வாசித்துள்ளேன்.

பின் 1994 ஆம் ஆண்டு லண்டன் சென்று தமிழ்ப்பாடசாலைகளிலும் ஆசிரியையாகக் கடமையாற்றியுள்ளேன்.

★ *கேள்வி:* லண்டனில் கலைத்துறை சார்பாகத் தங்களுடைய தற்போதைய நட வடிக்கைகள் பற்றிக் கூறுங்கள்?

☆ *பதில்:* லண்டனிலுள்ள பல தமிழ்ப் பாடசாலைகளில் வயலின் ஆசிரியையாகப் பணி யாற்றி வருகின்றேன். இதனைவிட 'ஞானா லயா' ∴பைன் ஆட்ஸ்' என்ற கலைக் கல் லூரியை அமைத்து அதன் மூலம் சுமார் 50 மாணவர்களுக்கு நடனம், வயலின், சங்கீதம் போன்ற பல தரப்பட்ட கலைக் கல்வியை நானும் எனது மகள் திருமதி சுஜாதா முரளிதர னும் இணைந்து வழங்கி வருகின்றோம்.

அத்துடன், 'ஞானாலயா'∴பைன் ஆட்ஸ்' மூலம் மாணவர்களுக்கான அரங்கேற்றங்கள் பலவற்றையும் மேற்கொண்டுள்ளோம்

இவற்றைவிட, லண்டனில் வாத்தியங்களைக கற்ற மாணவர்களுக்காக நடத்தப்படும் பரீட்சை கள் அனைத்திலும் நான் பிரதம பரீட்சகராக இருந்ததுடன், மேற்கு லண்டன் தமிழ்ப் பாட சாலைகளினால் நடத்தப்படும் பரீட்சைகள் யாவற் றுக்கும் தலைமை வகிப்பதோடு, அங்குள்ள சங்கீதக் கல்லூரியிலும், பதவிவகித்து வரு வதன் மூலமும் எனது கலைச்சேவையைத் தொடர்ந்த வண்ணம் உள்ளேன்.

★ *கேள்வி:* லண்டனில் வயலின் கலைக்கு எத்தகைய வரவேற்பு இருக்கின்றது.?




☆ *பதில்:* மிகுந்த வரவேற்பு காணப்படு கின்றது. ஏற்கனவே, என்னிடம் கலைபயின்ற மாணவர்கள் அங்கிருந்தபடியினாலும் எனது சேவையை லண்டன் வாழ் தமிழ்மக்கள் விரும்பி ஏற்றமையினாலும் எனது கலைச்சேவையை அங்கு தொடர்வதற்கு வாய்ப்புகள் ஏற்பட்டன.

★ *கேள்வி:* லண்டனிலுள்ள கற்பித்தல் முறைக்கும் இங்குள்ள கற்பித்தல் முறைக்கும் இடையிலான வேறுபாடுகள் எத்தகையவை.?

☆ *பதில்:* இங்குள்ள கற்பித்தல்முறையில் பெரியோருக்கு கீழ்ப்படிவுள்ள ஒரு சமுதாயத் தைக் கலைக்கல்வியினோடு போதிக்கக்கூடிய வகையில் மாணவர்களும் கீழ்ப்படிவுள்ளவர் களாக உள்ளனர். அத்துடன், எமது கலாசாரம் பற்றி நன்கு அறிந்தவர்களாக உள்ளனர்.

அத்துடன், இங்கு தமிழிலேயே கலைக் கல்வி அமைவதால் கலைச்சொற்களை மாண வர்கள் சரளமாக உச்சரிக்கிறார்கள்.

ஆனால், லண்டனிலுள்ள மாணவர்களிடம் 'கீழ்ப்படிவு' என்பது மிகமிக அரிதாகவே காணப்படுவதோடு, எமது கலாசாரம் பற்றிய அறிவும் குறைவாகவே உள்ளது.

அவர்களுக்கு ஆங்கிலம் மட்டுமே சரள மாகத் தெரிந்துள்ளதால் தமிழில் கலைச்சொற் களை எளிதாக உச்சரிக்கமுடியாது உள்ளது. இதனால், அவர்களுக்கு ஆங்கிலத்திலும், தமி ழிலும் எழுதிக் கற்பிக்க வேண்டியுள்ளது. இருப் பினும், கூடியவரையில் எமது கலாசார விழு மியங்களுக்கு அமைவாகவே அவர்களுக்குக் கலைப் பாடங்களைக் கற்பித்து வருகின்றேன்.

★ *கேள்வி:* கற்றல் முறை பற்றி...

☆ *பதில்:* இங்குள்ள கற்றல்முறை மிகவும் கடினமானது. இங்குள்ள பிள்ளைகள் எதனைக கொடுத்தாலும் விளங்கிக்கொள்ளக்கூடிய திற னுடையவர்களாக இருந்தாலும் லண்டனை விடக் குறைந்த தொழினுட்ப வசதியே இங் குள்ளதன் காரணமாகக் கேள்விஞானத்தை அடிக்கடி பெற்றுக்கொள்வது கடினமாக உள் ளது.

ஆனால், லண்டனில் பாடல்கள், வாத்தியங் கள் வாசிக்கப்படும் விதங்களைப் பதிவுசெய்வ தற்குரிய நவீன தொழினுட்ப வசதிகள் உள்ள தால் அவர்கள் அவ்வாறு செய்து தமது கேள்வி ஞானத்தை வளர்த்துக்கொள்கிறார்கள். அவர் கள் பொருளாதார வசதியுடன் இருப்பதும் இதற்கு ஒரு காரணமாக அமைகின்றது.

★ *கேள்வி:* நீங்கள் கற்றுள்ள பல கலை களும் பக்கவாத்தியத்திற்கு எவ்வாறு உதவு கின்றது?

☆ *பதில்:* பலகலைகளையும் நான் கற் றுள்ளமையால் பக்கவாத்தியமாக வயலினை வாசிக்கும்போது பாட்டின் சுருதி மற்றும் நட னம், மிருதங்கம் ஆகியவற்றின் தாளலயங் களை நுணுக்கமாக உணர்ந்து அவற்றைப் பிரயோகிப்பது சுலபமானதாக இருக்கின்றது.

★ *கேள்வி:* வயலின் கலையின் ஆரம்ப கால நிலைக்கும் தற்கால நிலைக்குமிடையில் ஒப்பீட்டு ரீதியாக நீங்கள் எதை உணர்கிறீர் கள்?

☆ *பதில்:* ஆரம்பகாலத்தில் வயலின் கலை இருந்த நிலையை விடத் தற்போது மிகுந்த வளர்ச்சியைக் கண்டுள்ளது. இளங்கலைஞர் கள் எல்லாரும் தம்மை வளர்ப்பதில் நல்ல ஆர்வமாக இருந்து தம்மை வளர்த்துள்ளார் கள். போர்ச்சூழலிலும் அவர்களது கலை ஈடு பாடு வளர்ச்சியடைந்துள்ளமை சந்தோசமாக வுள்ளது.

★ *கேள்வி:* வயலின் கற்பிக்கும் ஆசிரியர் களுக்கு உங்கள் ஆலோசனை?

☆ *பதில்:* ஓர் ஆசிரியர் தனக்குக் கீழே உள்ள மாணவரைத் தாமாகவே வளர்ச்சிய டையப் பயிற்சியளித்து வந்தால் அவர்களது அறிவு வளரும். தமது மாணவர்களுக்குத் தாம கற்ற கலையைச் சுத்தமாகவும் சந்தேகம் இல் லாதும் கற்பிக்கவேண்டும். அத்துடன், மாண வர்கள் பாடுவது சரியா? பிழையா? சுருதி சரியாக இணைகிறதா? என்பதை ஆராய்ந்து கற்பித்தல்வேண்டும்.

**செவ்வி: சாம்பவி, கங்கா**

சுருதி சுத்தம், அடிப்படைக் கல்வி, ஜண்ட வரிசை, தாட்டவரிசை, சுறாவளி யாவற்றையும் மாணவர் மனதிலே ஆணித்தரமாகப் பதியவைக்க வேண்டும். அந்தப் பதிவுதான் பிற்காலத்தில் அப்பிள்ளையின் வளர்ச்சிக்கு உதவும்.

சரிபிழை தெரிந்து கற்பிக்கும் ஆசிரியரால் தான் ஒரு மாணவனைப் பூரணமுள்ளவராக ஆக்கமுடியும். (அதேவேளை, ஆசிரியரும் தாம் படித்ததுபோதும் என இருக்காது அறிவைத் தேடுவதன் மூலம் தன்னை மேலும் வளர்த்துக் கொள்ளவேண்டும்).

★ *கேள்வி:* வயலின் துறையில் ஈடுபடும் மாணவர்களுக்குக் கூறவிரும்புவது?

☆ *பதில்:* காலையும், மாலையும் நிறையப் பயிற்சி செய்யவேண்டும். பயிற்சிதான் ஒருவரை நிறைவானவராக ஆக்கமுடியும். பயிற்சியை எக் காலத்திலும் தொடர்ந்துகொண்டே இருக்கவேண டும். பக்கவாத்தியக் கலைஞர்களாக வருவதற் குத் தங்களை வளர்க்கவேண்டும் என்றால் மனோ தர்ம சங்கீதத்தை (தாமாகத் தேடித் தம்மை வளர்ப்பது) நிறைய வளர்க்கவேண்டும். நிறை யக் கச்சேரிகளைக் கேட்பதன் மூலம் கேள்வி ஞானத்தையும் வளர்த்துக்கொள்ளவேண்டும். ✳

# ஈழத்தின் ஆடல் மரபை அடையாளப்படுத்தும் வடமோடி, தென்மோடி நாட்டுக்கூத்துகள்

அண்மையில் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்ற தமிழ் இலக்கிய விழாவில் தமிழர் பாரம்பரிய நிகழ்வான வடமோடி, தென்மோடி கூத்துகளும் இடம்பெற்றன. இக்கலையின் முக்கியத்துவம் பற்றியும் அதனை அழியவிடாது காத்தல் பற்றியும் விளக்கும் தொகுப்பு இது.

இவ்விலக்கிய விழாவில் கலை நிகழ்வு கள் யாவும் சிறந்த ஒழுங்கமைப்போடு நடை பெற்றன. இதில் ஈழத்தமிழர் மரபுகளை எடுத் துக்காட்டக்கூடிய வகையில் பண்பாட்டுப் பேரணி அமைந்தது.

பேரணியில் பாரம்பரிய ஆட்டங்கள், இலக் கிய காட்சிகளைத் தாங்கிய ஊர்திகள் என் பன மனதுக்குக் களிப்பூட்டின. இருந்தும் 2ஆம் நாள் கலைச்செல்வன் ஏரம்பு சுப்பையா அரங்கில் இடம்பெற்ற கன்னன்குடா மரபுவழிக் கூத்துக்கலைஞர்கள், கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்கள், விரிவுரையாளர்கள் இணைந்து வழங்கிய வடமோடி, தென்மோடி ஆடல்கள் பார்வையாளரது கவனத்தைத் திருப்பியது மட்டுமல்லாது சிந்திக்கவும் வைத்தது.

ஈழத்தமிழ் இனம் பாரம்பரியங்களையும் பண்பாட்டு விழுமியங்களையும் கட்டிக் காத்து வந்தது. இன்று அந்நிய கலாசாரத்தை தாங் கித்தான் சுயகலாசாரத்தை, பொலிவை இழந்து நிற்கிறது. இந்த வேளையில், எமது கூத்து மரபுகளும் அழிந்து வருகின்றது. இந்த வேதனை யாருக்கும் புரிவதுமில்லை. தெரிவதுமில்லை.

இதையெண்ணி மூத்தவர்கள் இன்று வேத னையுறுகிறார்கள். எங்களது பாரம்பரிய கலை கள் அழிந்து போகிறதே! இதைக் காப்பாற்ற இளைய சமுதாயமே வாருங்கள் என்று அழைப பும் விடுக்கிறார்கள்.

## ஈழத் தமிழ் நடனம்

அந்தத் துண்டுப் பிரசுரத்தில் - ஈழத்துத் தமிழர்கள் தமக்கென ஒரு கூத்துப் பாரம்பரி யத்தைக் கொண்டுள்ளனர். இப்பாரம்பரியம் வடமோடி, தென்மோடி என இரண்டு பிரதான பிரிவுகளைக் கொண்டது. ஆடல், பாடல், தாளக் கட்டுக்கள், உடல் அசைவுகள் அனைத தும் மோடிக்கு மோடி வித்தியாசப்படும்.

செழுமை மிகுந்த இவ்வாடல் மரபுகள் யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், மட்டக் களப்பு ஆகிய பகுதிகளில் வழக்கிலே இருக் கின்றன. சிற்சில பிரதேச வேறுபாடுகள் இருப் பினும் அடிப்படையில் பல ஒற்றுமைகளை இவை கொண்டுள்ளன.

இவ்வொற்றுமைகளை அடியாக வைத்து ஈழத்தமிழ் கூத்தின் அடியாக ஈழத்தமிழ் நடன மரபினை உருவாக்கும் முயற்சியின் ஆரம்பக் காலடி இது.

புகழ்பெற்ற யஷகானமும், கதகளியும், கண் டிய நடனமும் ஒரு காலத்தில் முறையே கன் னடமக்களினதும், கேரளமக்களினதும், சிங் கள மக்களினதும் கிராமிய கூத்து நிலையில் தான் இருந்தன. இன்று அவை மக்களின் தேசிய நாடகங்களாக, நடனங்களாக ஆகி விட்டன. ஆக்கப்பட்டுவிட்டன.

**தொகுப்பு: சுதேசிகன்**

கன்னடரை யஷகானம் அடையாளப்படுத்து கிறது. கேரளரை கதகளி அடையாளப்படுத்து கிறது. சிங்கள மக்களை கண்டிய நடனம் அடையாளப்படுத்துகின்றது. ஈழத்தமிழ் மக்க ளது ஆட்ட அடையாளம் என்ன? என்ற கேள்வி எழுகின்றது.

பரதம் அவர்களது அடையாளம் என்பதில் எவ்விதத் தவறும் இல்லை. எனினும், நமது மண்ணில் இருந்ததும், நமது கிராமிய மக் களிடமிருந்தும் தோன்றிய பொதுமக்கள் சார்ந்த இவ்வடமோடி, தென்மோடி ஆட்ட மரபில் இருந்து ஈழத்தமிழ் ஆடல்மரபொன்றை அடை யாளப்படுத்துவது நமது ஈழத்தமிழர்க்கு மேலும் ஒரு கலைப் பலத்தைத் தரும் முயற்சி என்று கருதுகிறோம்.

அருகிவரும் இவ்வாடற்கலையை அழி யாமற் காக்க, வளர்த்து எடுக்க முனையும் எம் முயற்சிக்கு ஆதரவு தருவீர்கள் என நம்பு கிறோம் - எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

நிகழ்வு அரங்கேறி சபையோரை மகிழ்வித் தது. நிகழ்வின் இறுதியில் கூத்தில் பங்கேற்ற ஒருவர் உருக்கமான வேண்டுகோள் ஒன்றை விடுத்தார். கிழக்குப் பல்கலைக்கழக நுண் கலைத்துறையும், யாழ். பல்கலைக்கழக நுண் கலைத்துறையும் எமது மரபு வழிக்கலை களை வளர்க்கவேண்டும் என்றார்.

இறுதிநாள் வி.வி.வைரமுத்து அரங்கில் இடம்பெற்ற நிகழ்வில் பாரம்பரிய மேம்பாட்டுக் கழகத்தின் நாடக மேடைப் பாடல்கள் இடம் பெற்றன. அந்த நிகழ்வுக்குத் தலைமை தாங் கிய மெற்றாஸ்மயில் அவர்கள், எமது கலை களுக்குப் பல்கலைக்கழக அந்தஸ்து வழங் கப்படவேண்டும் என்றார். அவரது வேண்டு கோள் நிறைவேற்றப்படுமா? பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

## வட்டத்துக்குள் வாழும்

இன்றைய நடன ஆசிரியர்களும், விரிவு ரையாளர்களும் பரத நாட்டியம் என்ற வட்டத் துக்குள்ளேயே தங்களது ஆற்றல்களை நிறுத்திவிடுகிறார்கள். அப்படி இருந்தும் பர தத்தைப் பொறுத்தவரையில் ஈழத்தமிழர்களுக கென ஒரு தனியான நடன உருப்படியை இங்குள்ளவர்கள் உருவாக்கியதாக இதுவரை அறியப்படவில்லை. தென்னிந்தியாவின் கலா ஷேத்திரா போன்ற நடனப் பள்ளிகளில் உரு வாக்கப்பட்ட உருப்படிகளையே இங்குள்ளவர் கள் அப்படியே மாணவர்களுக்குப் போதித்து வருகிறார்கள். அது ஒரு பெரும் குறைபாடா கவே கருதப்பட்டு வருகிறது.

கலையானது கலைக்காகவும், பட்டத்துக் காகவும் பாமர மக்களுக்காகவும் படைக்கப் பட வேண்டும் அப்போது தான் அதில் ஒரு ஆத்ம திருப்தி ஏற்படும்.

## மாறுபட்ட ஒரு கலை

பரதத்தில் இருந்து மாறுபட்ட ஓர் ஆடல் நிகழ்வு கந்தர்மடம் பகுதியில் அண்மையில் நடைபெற்ற ஓவியக் கண்காட்சி நிகழ்வில் 'ஓவிய ஆடல்' எனும்பொருளில் இடம்பெற்றது. கடந்த கால யுத்தத்தால் இம்மண்ணில் இடம் பெற்ற அவலங்கள் ஓவியங்களில் தீட்டப்பட்டி ருந்தன. அந்த ஓவியங்கள் உணர்த்தும் வெளிப் பாட்டை மிக அருமையாக ஓவிய ஆடல் மூலம வெளிக்கொண்டு வந்தார்கள். அவர்கள் எடுத்த முயற்சி பலித்தது. இது உண்மையிலேயே வித்தியாசமான விசித்திரமான நிகழ்வாய் அமைந்தது. அதுமட்டுமல்லாது, பார்ப்பவர்களின் மனங்களையும் தொட்டது.

நாம் எமது மரபு வழித் தாயகத்தில் எமக் கான பாரம்பரிய கலைகளை அழியவிடாது கட்டிக்காப்போம்.



தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் பாடசாலை மாணவிகள் வழங்கிய நாட்டிய நிகழ்ச்சியில் ஒரு காட்சியைப் படத்தில் காணலாம். *(படம்: சங்கானைச் செய்தியாளர்)*

# சைவநெறித் தேர்வுப் பரீட்சையில் 75 ஆயிரம் மாணவர்கள் தோற்றினர்

வலி.தென்மேற்கு,நவ.17

யாழ். சைவ பரிபாலன சபை இம்மாதம் 6ஆம் திகதி நடத்திய சைவ நெறித் தேர்வுப் பரீட்சையில் 75 ஆயிரத்திற்கு மேற்பட்ட மாணவர்கள் பங்குபற்றியதாக சைவப் புலவர் வ.கந்தசாமி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, கண்டி, புத்தளம் ஆகிய இடங்களில் இப்பரீட்சை நடைபெற்றது.

வன்னி மாவட்டத்தில் இம்முறை பெரும் எண்ணிக்கையிலான மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (10-135)

## சுவிஸ் திரைப்பட விழா இன்று ஆரம்பமாகின்றது

யாழ்ப்பாணம்,நவ.17

சுவிஸ் திரைப்பட விழா இன்று புதன்கிழமை தொடக்கம் தொடர்ந்து 4 நாள்களுக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் நடைபெறவுள்ளது.

இன்று புதன்கிழமை பி.ப. 4.30 மணிக்கு அக்றொஸ் த போர்டர் (Across the border) திரைப்படக் காட்சியும், நாளை வியாழக்கிழமை பி.ப. 4.30 மணிக்கு எ லிற்றில் கலர் (A Little Colour) திரைப்படக் காட்சியும், நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை அசுரோ (Azzurro) திரைப்படக் காட்சியும், எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை மு.ப.10.30 மணிக்கு பக் ஃபோர் மோர் (Back for more), பி.ப.2.30 மணிக்கு உரோபியா புளூஸ் (Utopia Blues), பி.ப. 4.30 மணிக்கு எஸ்கேப் ரு ப்றடைஸ் (Escape to pradise) ஆகிய திரைப்படக் காட்சிகளும் ஆங்கில உபதலைப்புகளுடன் காட்சிப்படுத்தப்படவுள்ளன. (8-202)

## மதுபானச் சாலைகளை மாலை ஏழரை மணிக்கு மூடத் தீர்மானம்

சாவகச்சேரி,நவ.17

சாவகச்சேரி நகரில் உள்ள மதுபானச் சாலைகள் யாவும் மாலை 7.30 மணியுடன் மூடப்படவுள்ளது.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்திற்குட்பட்ட மதுபானச்சாலைகள் எதிர்வரும் 25ஆம் திகதி தொடக்கம் மாலை 7.30 மணிக்கு மூடப்படவேண்டும் என வணிகர் மன்றப் பொதுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (10-31)

## தீபாவளிப் பரிசாக உடுபுடைவைகள்

தென்மராட்சி,நவ.17

பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தினர் சங்க அங்கத்தவர்களுக்குத் தீபாவளிப் பரிசாக உடுபுடைவைகளை வழங்கியுள்ளனர்.

பளைப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த பின்னர் சிறப்பாகத் தொழிலில் ஈடுபட்ட சிவில் தொழிலாளர்கள் 150 பேருக்கே உடுபுடைவைகள் வழங்கப்பட்டன. (10-117)

## ஒன்றுகூடல்

திருகோணமலைநவ.17

வடக்கு - கிழக்கு மாகாண பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களின் ஒன்றுகூடல் இன்று புதன்கிழமை திருகோணமலையில் இடம்பெறவுள்ளன.

கடந்த 10 வருடகாலமாக இழுத்தடிக்கப்பட்டுவரும் நிரந்தர நியமனம் தொடர்பாக இறுதிப் போராட்டம் நடத்துவதற்கான தீர்மானத்தை மேற்கொள்ளவே இக்கூட்டம் நடைபெறவுள்ளதாகச் சங்கத்தின் பேச்சாளர் ஷிப்லி தெரிவித்துள்ளார். (10-203)


**UNIVERSITY OF JAFFNA, JAFFNA**
IMPROVING RELEVANCE AND QUALITY OF UNDERGRADUATE EDUCATION (IRQUE)

***INTENSIVE COURSE IN ENGLISH LANGUAGE SKILLS***

An intensive Course in English Language skills funded by the World Bank for the Final year students in Arts, Management Studies & Commerce will be implemented at the University of Jaffna including Vavuniya Campus from December 2004 to January 2005.

Applications are invited from teachers who are proficient in teaching English Language skills at the Tertiary levels. Employment will be on hired basis at the rate of Rs.15,000/- per month. The Course will be of 160 hours during the stipulatde period. Applicants should be 60 years of age or below as at 31.10.2004.

Applications should be made on self prepared forms with names of two non related referees. Applications close on 24.11.2004.

Course will be conducted in the University of Jaffna and the Vavuniya Campus.

*Applications to be sent to the following address:*

***Mrs.A.Sivaneswaran,***
***Deputy Director/Administration***
***Local Technical Secretariat,***
***IRQUE Project,***
***University of Jaffna,***
***Jaffna.***

IRQUE Project
University of Jaffna, Jaffna.
15.11.2004

Deputy Director/ Administration.

(C-39054)(42-16-17-24)





வாழ்க பல்லாண்டு வாழி!

எமது தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன்
அவர்களின்
50 ஆவது அகவையை முன்னிட்டு
வாழ்த்துகின்றோம்.

ஏழ்கடல் சூழ்புவி ஆள்பவர் எவரினும்
வாழ்ந்திடுந் தலைவா வாழி – தமிழ்
வையமும் வாழ்ந்திட வந்தனை தந்தனம்
வாழ்கபல் லாண்டுகள் வாழி!

- யாழ். மாவட்ட தனியார்
சிற்றூர்தி உரிமையாளர் சங்கங்களின்
இணையம்.

(38665) (24-19-44)





முதலாவது பிறந்தநாள் வாழ்த்து

யாழ்ப்பாணம். கந்தர்மடம். ஆத்திசூடி வீதியைச் சேர்ந்த
அமுதரூபன் - றொபேக்கா தம்பதிகளின்
செல்வ மகள்
மதுகீர்த்தனா

தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (17.11.2004) புதன்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மம்மா, பெரியப்பாமார், மாமாமார், பெரியம்மாமார், அத்தை, சித்தப்பாமார், அக்காமார், மச்சான்மார், அண்ணாமார், தங்கை மற்றும் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் சீரும் சிறப்புடனும் வாழ வாழ்த்துகின்றார்கள்.

ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(38673) (24-19-44)

தகவல்:
அன்பு அப்பா
திரு.அமுதரூபன்.



"உயர் கல்விக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு"

உங்கள் பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமானதாக மாற்ற விரும்பும் பெற்றோர்களே நீங்களும் கலந்துகொள்ளுங்கள்



காலம் - 20.11.2004
இடம் - MPCS கேட்போர் கூடம், K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
நேரம் - காலை 10 மணி - 12 மணிவரை

★ குறிப்பிட்ட அளவு மாணவர்களே அனுமதிக்கப்படவிருப்பதால் முற்கூட்டியே எமது நிலையத்தில் பதிவுசெய்து கொள்ளுங்கள்.

***Dr. M.G.R. Deemed University***
**Offshore Campus Information and Admission Centre**
(C/30043) **No.195, Navalar Road, Jaffna, T.P.: 021-222 2840**



**UNIVERSITY OF JAFFNA, JAFFNA**
IMPROVING RELEVANCE AND QUALITY OF UNDERGRADUATE EDUCATION (IRQUE)

**INTENSIVE COURSE IN INFORMATION TECHNOLOGY SKILLS**

An intensive Course in Information Technology skills funded by the World Bank for the *final year students in Arts, Management Studies & Commerce will be implemented at* the University of Jaffna including Vavuniya Campus from December 2004 to January 2005.

Applications are invited from teachers who are proficient in teaching Information Technology skills. Employment will be on hired basis at the rate of Rs.15,000/- per month. The Course will be of 160 hours during the stipulated period. Applicants should be 60 years of age or below as at 31.10.2004.

Applications should be made on self prepared forms with names of two non related referees. Applications close on 24.11.2004.

*Applications to be sent to the following address:*

***Mrs.A.Sivaneswaran,***
***Deputy Director/Administration***
***Local Technical Secretariat,***
***IRQUE Project.***
***University of Jaffna,***
***Jaffna.***

IRQUE Project
University of Jaffna, Jaffna.
15.11.2004

Deputy Director/ Administration.

(C-39056)(42-19-15-24)



**UNIVERSITY OF JAFFNA, JAFFNA**
IMPROVING RELEVANCE AND QUALITY OF UNDERGRADUATE EDUCATION (IRQUE)

***INTENSIVE COURSE IN INFORMATION TECHNOLOGY SKILLS***

An intensive Course in Information Technology skills funded by the World Bank will be conducted at the University of Jaffna and Vavuniya Campus from December 2004 to January 2005.

Applications are invited from the final year students of Arts, Management Studies & Commerce admitted to the University of Jaffna in 1999, 2000 & 2001 who have completed the final examinations/awaiting for final examinations in December 2004 and not have been awarded their degrees. The Course will be of 160 hours duration.

Applications should be made on self prepared forms with the following details.

1. Full Name
2. Address : Permanent
   : Temporary
3. University Registration No.
4. Index No:

Course will be conducted in University of Jaffna and Vavuniya Campus. Applications close on 24.11.2004 .

*Applications to be sent to the following address:*

***Mrs.A.Sivaneswaran,***
***Deputy Director/Administration***
***Local Technical Secretariat,***
***IRQUE Project,***
***University of Jaffna, Jaffna.***

IRQUE Project
University of Jaffna, Jaffna.
15.11.2004

Deputy Director/ Administration.

(C-39058)(34-16-17-24)

பன்முகப்படுத்தப்பட்ட வரவு -செலவுத் திட்டத்தின் கீழ்

# வன்னி மாவட்ட அபிவிருத்திக்கு 2 கோடி 10 லட்சம் ரூபா ஒதுக்கீடு

ஒட்டுசுட்டான்,நவ.17

வன்னி மாவட்டத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கென இவ்வாண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தின் கீழ் கோடி 10 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வன்னி மாவட்டத்தினைச் சேர்ந்த ஆறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத்திட்டத்தின் கீழ் வன்னிப் புனரமைப்புக்கு 3 கோடி ரூபா ஒதுக்குமாறு பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதில் 2 கோடி 10 லட்சம் ரூபாவை வழங்க அமைச்சு முன்வந்துள்ளது. இந்நிதியின் மூலம் வன்னி மாவட்டத்தில் 229 திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இதுதொடர்பான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் வன்னியில் இடம்பெற்றது.

இதில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன் கிஷோர், செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன் மற்றும் வினோ நோதராதலிங்கம் ஆகியோர் உட்படப் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், அரச திணைக்கள அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

வவுனியா மாவட்டத்தில் 101 திட்டங்களை நடைமுறைப்படுத்த 70 லட்சத்து 60 ஆயிரம் ரூபாவும் மன்னார் மாவட்டத்தில் 93 திட்டங்களை நடைமுறைப்படுத்த 80 லட்சம் ரூபாவும், முல்லைத்தீவில் திட்டங்களை அமுல்படுத்த 50 லட்சத்து 20 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்பிரதேசங்களின் கல்வி, சுகாதாரம், விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் விளையாட்டு ஆகிய துறைகளின் விருத்திக்கு இந்த நிதி பயன்படுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

(8-5-341)

## காலபோக நெற்செய்கை பாதிப்பு

வட்டக்கச்சி,நவ.17

தொடர்ச்சியாகப் பெய்துவரும் பருவ மழை காரணமாக வட்டக்கச்சி இராமநாதபுரம் பகுதி விவசாயிகளின் காலபோகச் செய்கை பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளன.

முன்னர் இருமுறை விதைப்பு மேற்கொண்ட போதும் மழையினால் விதை நெல்கள் அடித்துச் செல்லப்பட்டன. மூன்றாவது முறையாக இப்பகுதி விவசாயிகள் விதைப்பில் ஈடுபடுவதனைக் காணமுடிகின்றது.

விதைக்கப்பட்ட வயல்களில் உள்ள நெற்களின் விளைதிறன் இம்முறை குறைவாகக் காணப்படுவதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

(8-204-405)

புதுக்குடியிருப்புக் கோட்டத்தில் நடந்த

## சிறுவர் தினப் போட்டியில் வெற்றி பெற்றோர் விவரம்

சர்வதேச சிறுவர் தினத்தை முன்னிட்டு புதுக்குடியிருப்புக் கோட்டப் பாடசாலை மாணவர்களுக்கிடையே கவிதை, கட்டுரைப் போட்டிகள் நடைபெற்றன. இப்போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களின் விவரங்கள் வருமாறு:-

**ஆரம்பப்பிரிவு - கட்டுரை**

வி.முகர்சினி (சிவநகர் தமிழ் வித்தியாலயம்), அ.ஜெயதர்சிகா (இரணைப்பாலை ம.வித்தி),

கிளிநொச்சி வன்னிச் செய்திகள் முல்

ஜெ.யசோதினி(உடையார் கட்டு ம.வி.)

**ஆரம்பப்பிரிவு - கவிதை**

நா.டிவானா (ஸ்ரீ சுப்பிரமணிய வித்தி.), தி.லக்சிகா (பாரதி வித்தி.), த.தனுசன் (பாரதி வித்தி.)

**இடைநிலைப் பிரிவு - கட்டுரை**

யோ.பத்நமசுதருத்திரா (உடையார்கட்டு ம.வி.), இ.ஆன்அர்ச்சனா (இரணைப்பாலை ம.வி), அ.சாயிப்பிரியா(ஸ்ரீசுப்பிரமணிய வித்தி.)

**இடைநிலைப் பிரிவு - கவிதை**

கி.நிக்ஷிகா (விசுவமடு ம.வி.), நி.தர்சன் டிசாலி (இரணைப்பாலை ம.வி.) பு.பவுஸ்தினா (இரணைப்பாலை ம.வி.)

**சிரேஷ்ட பிரிவு - கட்டுரை**

த.தேவரஞ்சினி (விசுவமடு ம.வி.), அ.மதியரசி(விசுவமடு ம.வி.), கோ.நிரோஜா (புதுக்குடியிருப்பு ம.வி.)

**சிரேஷ்ட பிரிவு - கவிதை**

சொ.சோதிலட்சுமி (புதுக்குடியிருப்பு ம.வி.), கு.கஜேந்தினி (விக்னேஸ்வரா வித்தி.), செ.கஜந்தா (விசுவமடு ம.வி.)

**உயர்தரப்பிரிவு - கட்டுரை**

செ.கல்பனா(உடையார்கட்டு ம.வி.), சி.சுகந்தினி(விசுவமடு ம.வி.) சாதனா (உடையார்கட்டு ம.வி),

**உயர்தரப் பிரிவு - கவிதை**

செ.கஜேந்தினி (புதுக்குடியிருப்பு ம.வி), சி.சுகந்தினி (விசுமடு ம.வி), வி.நிகால் டின் (புதுக்குடியிருப்பு ம.வி)

இவர்களுக்கான பரிசில்களைப் புதுக்குடியிருப்பு பிரதேச நன்னடத்தை அதிகாரி செல்வி ந.சந்திரா வழங்கினார். (8-203-353)

## இறைதியான வழிபாடு

வேரவில்,நவ.17

அருட்தந்தை வி. இக்னேசியஸ் அடிகளாரின் குணமாக்கல் இறைதியான வழிபாடு கடந்த 10ஆம் திகதி குமுழமுனையில் இடம்பெற்றது.

இவ்வழிபாட்டில் பூநகரி வலைப்பாடு, முழங்காவில் பிரதேசங்களைச் சேர்ந்த கத்தோலிக்க மக்கள் கொட்டும் மழையிலும் கலந்துகொண்டனர்.

(8-204-404)

## ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு நிரந்தரக் கட்டடம் இல்லை

நெடுங்கேணி, தட்டுவான் பிரதேசத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் பல்வேறு வசதிக் குறைபாடுகளுடன் இயங்கி வருகின்றது.

இந்நிலையத்திற்கு நிரந்தரமான கட்டட வசதி எதுவும் இன்மையால் இப்பகுதியில் உள்ள சிறுவர் பாடசாலை ஒன்றிலேயே இயங்கி வருகின்றது.

எவ்வித வசதிகளும் இன்றி இயங்கும் இச்சுகாதார நிலையத்திலே பெரும்பாலான கர்ப்பிணிப் பெண்கள், சிறுவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இவர்களின் நலன்கருதி உரியமுறையில் சிகிச்சை பெற இச்சுகாதார நிலையத்தில் உள்ள குறைபாடுகளை நிவர்த்திசெய்து தருமாறு இப்பகுதி மக்கள் கேட்டுள்ளனர்.

(8-204-391)



வட்டக்கச்சிப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் சங்கம நிகழ்வு அண்மையில் இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலையில் நடைபெற்றது.

இதில் வட்டக்கச்சிப் பிரதேச அரசியல்துறைப் பொறுப்பாளர் சோழநிலவன் உரையாற்றுவதையும் கரைச்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கத் தலைவர் க.தர்மசூரியர், கிளிநொச்சி மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் சு.பசுபதிப்பிள்ளை, வட்டக்கச்சிப் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் ச.பொன்னுத்துரை, கிளிநொச்சி மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவைப் பொறுப்பாளர் ச.திருமாறன் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

*(படங்கள்: வட்டக்கச்சிச் செய்தியாளர்)*

## குளங்களின் நிலைமை குறித்து அவதானமாக இருக்கக் கோரிக்கை

கிளிநொச்சி,நவ.17

வவுனியா வடக்குப் பகுதியில் நியாப் திட்டத்தின் கீழ் 28 குளங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு வருகின்றன. புனரமைப்பு வேலைகள் முடிவுறும் நிலையில் உள்ளபோதும் தொடர்ந்து பெய்து வரும் மழைகாரணமாக குளங்களின் நீர் மட்டம் உயர்ந்து வருகின்றமை பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தலாம் என அஞ்சப்படுகின்றது.

பாதிப்புக்கள் ஏற்படும் பட்சத்தில் இது குறித்து குளப் பங்காளர்கள், கமக்கார அமைப்புக்கள், பொது அமைப்புக்கள் என்பன விழிப்புடன் செயற்படுவதும், உரிய நடவடிக்கைகளை எடுப்பதற்குத் தயாராக இருக்க வேண்டும் எனவும் இது குறித்து உரிய இடங்களுக்கு அறிவிக்கவேண்டும் எனவும் - வவுனியா மாவட்டத் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கேட்டுள்ளது. (8-12)

## தங்குவதற்கு விடுதிகள் இல்லை; வெளிமாவட்ட ஆசிரியர்கள் பாதிப்பு

புதுக்குடியிருப்பு, நவ.17

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது பெய்துவரும் கடும் மழையினால் வெளிமாவட்டத்தில் இருந்து இங்குவந்து சேவைபுரியும் ஆசிரியர்கள், அரச உத்தியோகத்தர்கள் பெரும் துன்பங்களை அனுபவிக்கின்றனர்.

முல்லைத்தீவு, ஆறுகளையும் குளங்களையும் கொண்ட ஒரு மாவட்டம். இங்கு நிலையான கட்டடங்களும் மிகக்குறைவு. பாடசாலைகளில் சேவையாற்றும் வெளிமாவட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் தங்க விடுதி வசதிகள் இல்லை. பாடசாலைகளும் ஓலைக் கொட்டில்களிலேயே இயங்குகின்றன.

மழை காலத்தில் ஆறுகள் பெருக்கெடுப்பதால் வீதிகள் யாவும் தடைப்பட்டுப் போக்குவரத்துப் பாதிக்கப்படுகின்றது. எந்தவொரு வீதியும் மக்கள் பயன்படுத்தக் கூடியநிலையில் இல்லை.

கடந்த இருபது வருட யுத்தத்தினால் மிகவும் பின்தங்கிய மாவட்டமாகக் கணிக்கப்படும் முல்லைத்தீவில் யுத்த நிறுத்தத்தின் பின்னரும் பெரிய அளவிலான புனரமைப்புப் பணிகள் இடம்பெறவில்லை.

வெளிமாவட்ட ஆசிரியர்கள் தங்குவதற்கு விடுதிகள் இல்லாமையால் தனியார் வீடுகளில் பல சிரமங்களுடன் தங்கி சேவைபுரிய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இதனைப் பலமுறை பல தரப்புக்கும் எடுத்துக் கூறியும் எந்தப் பலனும் இல்லையென வெளி மாவட்டங்களிலிருந்து வந்து பணியாற்றும் ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர்.

(8-353)


SHARP
be sharp

கொண்டாட்டம்... கொண்டாட்டம்...

பிறவுண்ஸ் வழங்கும் நம்பமுடியாத கொடுப்பனவுகள் விரையுங்கள்...



ஜப்பானியத் தொழில்நுட்பத்துடன் கூடிய Sharp T.V.5 வருட உத்தரவாதத்துடன் விற்பனைக்குப் பிந்திய சேவையில்...

14D25 ~~20295~~/= 16775/=
20D25 ~~30525~~/= 25000/=
21EFGIA ~~38995~~/= 32956/=

இன்னும் பல கொடுப்பனவுகள்.....

BG BROWNS GROUP ESTD 1875
பிறவுண்ஸ்
இல.89, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P.-021-222 5150.

# கண்ணீர் அஞ்சலி

எமது ஆலயத்தின் பிரதம குரு பிரம்மஸ்ரீ **வரதராஜக் குருக்கள் கேதீஸ்வர சர்மா** அவர்களின் சகோதரர் **ஹரிஹரசர்மா**

அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய சிவஞானப் பிள்ளையாரைப் பிரார்த்திக்கின்றோம்.

அறங்காவலர்,
நல்லூர் சிவஞானப் பிள்ளையார் தேவஸ்தானம்.

(38686)(34-19-44-24)

# மூளாய் கூட்டுறவு வைத்தியசாலைச் சங்கம்

மேற்படி வைத்தியசாலை தனது சேவையை மக்களுக்கு வழங்கத் தயாராகவுள்ளது.

பின்வரும் சேவைகள் வழங்கப்படுகின்றன.

24 மணிநேர வெளிநோயாளர் பிரிவு
ஆய்வுகூட வசதிகள்
- இரத்தம்
- சலம்
- ஸ்கானிங் (SCAN)
- ECG

நிபுணத்துவ ஆலோசனைகள்

மேலதிக விவரங்களுக்குக் கீழ்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

☎ 060 221 2533.

- பணிப்பாளர் சபை.

(கி-39067)(34-19-44-24)

## UNIVERSITY OF JAFFNA, SRILANKA

Prof. Sivupathasuntharam Mageswaran

## Memorial Lecture

Date and Time: **2004.11.19 at 2.00 p.m.**
Venue: **Chemistry Lecture Theatre, Mageswaran Block**
Speaker: Prof. **J.N.O. Fernando**
*Dean / Science, Open University of Sri Lanka*
Title: **State of Tertiary Education in SriLanka**
*Those who interested are cordially invited.*

Vice - Chancellor.

(கி-39068)(34-19-44-24)

# வருந்துகின்றோம்; அஞ்சலிசெய்கின்றோம்



எமது கல்லூரியின் வெளிவாரிப் பட்டப் படிப்பு மாணவன்
பிரம்மஸ்ரீ **வரதராஜக்குருக்கள் ஹரிகரசர்மா**
(G.A.Q. 2005 ஆம் ஆண்டு மாணவன்)

அவர்களின் அகாலமரணம் எம்மை ஆழ்ந்த துயருக்குட்படுத்தியுள்ளது. அவரது அகாலமரணத்தினால் துயருற்றிருக்கும் அனைவருக்கும் ஆறுதல் அளிக்க எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

அரியகுளம் சந்தி - யாழ். - புதிய உயர் கல்லூரி நிர்வாகம்.

(38681) (24-19-11)

## பிரபாகரனின் பிறந்ததினத்தன்று சாவகச்சேரி நகரில் பொங்கல்

சாவகச்சேரி,நவ.17

தமிழீழத் தேசியத்தலைவர் வே.பிரபாகரனின் 50 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 9 மணிக்கு நவீன சந்தைக்கு முன்பாக சர்க்கரைப் பொங்கல் வைக்கப்படவுள்ளது.

50 மாவீரர்களின் பெற்றோர்களினால் 50 பானைகளில் வைக்கப்படவுள்ள பொங்கல் ஏ-9 வீதியில் செல்லும் பயணிகள் அனைவருக்கும் வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வையொட்டி சாவகச்சேரி நவீன சந்தை அலங்கரிக்கப்படவுள்ளது. அத்துடன், தென்மராட்சிப் பிரதேசத்தில் தேசியத்தலைவரின் பிறந்ததினக் கொண்டாட்டங்கள் தேசிய எழுச்சிப் பேரவையின் ஏற்பாட்டில் கிராமங்கள் தோறும் நடத்தப்படவுள்ளது. ஆலயங்களிலும் விசேட சமய நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. (10-31-202)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் முன்னாள் கணித ஆசிரியை **திருமதி மகேஸ்வரி பூலோகநாதன்** அவர்களின் ஏக புதல்வியும் கணனிப் பொறியியலாளருமான

## செல்வி கிருஷாந்தி பூலோகநாதன்

அவர்களின் அகால மறைவை அறிந்து எமது கல்லூரிச் சமூகம் ஆழ்ந்த கவலையடைகின்றது. அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மசாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

யாழ்.இந்து மகளிர் கல்லூரி
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.

(38684)(29-19-11-24)

# மரண அறிவித்தல்

## அந்தோனிப்பிள்ளை இராயப்பு (ராசு)



புலோலி தெற்கு, சாரையடியைப் பிறப்பிடமாகவும் தவசிகுளம், மிருசுவிலை வதிவிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை இராயப்பு (ராசு - மேசன் ஒப்பந்தகாரர்) 15.11.2004 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - கதரீனாவின் அன்பு மகனும் றோசம்மா (செல்வராணி) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான சூசைப்பிள்ளை, செபஸ்தியாம்பிள்ளை மற்றும் பிரகாசி, சீமான்பிள்ளை (ஓய்வுபெற்ற தபாலதிபர்), மரியம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் அன்ரன் செல்வரட்ணம் (ஜேர்மனி), மேரிகில்டா (பிரான்ஸ்), யோன்சன் ஜெயரட்ணம் (லண்டன்), மேரிநிமல்டா, யூட்டிஷயன் ஜீவரட்ணம், மேரி மெற்றில்டா, கலிஸ்ரஸ் விஜயரட்ணம் (ஜேர்மனி) அகியோரின் பாசமிகு தந்தையும் மட்டினா (ஜேர்மனி), யோசப் அன்ரனி (பிரான்ஸ்), மேரிமெக்டலின் (லண்டன்), சுரேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் கெவின், ஆர்னிக்கா, ஜெனீனா, ஜெனிபர், ஜெசிக்கா, ஜெரமின் ஆகியோரின் அன்புப் பேரனும் அருளானந்தம் (கொழும்பு), 'திமதிராஜா, குணம், முத்துராஜா, இந்திரா, செல்வக்குமார் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (18.11.2004) வியாழக்கிழமை மூன்று மணிக்கு தவசிகுளம் புனித காணிக்கை மாதா ஆலயத்தில் இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு மிருசுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தவசிகுளம்,
மிருசுவில்.
T.P.:0777917827

தகவல்:
இ.ஜீவரட்ணம் (மகன்).

(38683) (43-19-44-24)

## தேசியத் தலைவரின் பிறந்தநாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,நவ.17

50ஆவது அகவையில் காலடிவைக்கும் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்ததினத்தை முன்னிட்டு எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 7 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தில் உள்ள பரமேஸ்வரர் ஆலயத்தில் தமிழீழத் தேசியத் தலைவருக்கும் போராளிகளுக்கும் நல்லாசி வேண்டி விசேட அபிஷேக, ஆராதனைகள் இடம்பெறவுள்ளன.

அத்துடன், தமிழீழத் தேசியத் தலைவருக்கான வெற்றிக் கேடயமும் வாழ்த்துச் செய்தியும் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினரால் தேசியத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன. (10-203)

✦✦✦ ✦✦✦

யாழ்ப்பாணம்,நவ.17

தேசியத் தலைவரின் 50ஆவது பிறந்த நாளையொட்டி கோப்பாய் தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்கள் இரத்ததானம் வழங்கவுள்ளனர்.

இந்த இரத்ததான நிகழ்வு எதிர்வரும் 26 ஆம் திகதி தலைவரின் 50ஆவது பிறந்த நாளன்று கல்வியியற் கல்லூரியில் இடம்பெறும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (10-13)

✦✦✦ ✦✦✦

யாழ்ப்பாணம்,நவ.17

தேசியத் தலைவரின் 50 ஆவது பிறந்த நாளையொட்டி சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர் கைந்நூல் ஒன்றை வெளியிடவுள்ளனர்.

இத்தகவலை மாணவர் பேரவையின் இணைப்பாளர் ந.கண்ணன் தெரிவித்துள்ளார்.

தேசியத் தலைவர் பிரபாகரனின் சிந்தனைகள் உள்ளடக்கப்பட்ட இந்நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறவுள்ளது. (10-13)

✦✦✦ ✦✦✦

கொழும்புத்துறை,நவ.17

தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் 50 ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் சுயதொழில் ஊக்குவிப்பு நிதி வழங்கவுள்ளது.

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எல்லைக்குள் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்கள் இனங்காணப்பட்டு அக்குடும்பங்களுக்குத் தலா 15 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

இந்நிதி சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ள மாவீரர் தின நிகழ்வில் வைத்து வழங்கப்படவுள்ளதாகச் சங்கத்தின் தலைவர் சூ.சிறில் தெரிவித்துள்ளார். (10-30-202)

✦✦✦ ✦✦✦

குடத்தனை,நவ.17

தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் 50ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு ஆசி வேண்டி துன்னாலை வடக்கு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் எதிர்வரும் 26ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறவுள்ளன. (8-204-78)

## தமிழீழ மாணவர் பேரவை ஏற்பாட்டில் விவாதப் போட்டி

யாழ்ப்பாணம், நவ.17

மாவீரர் தினத்தை முன்னிட்டு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினால் ஒழுங்குசெய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான விவாதச் சுற்றுப்போட்டி நேற்றுக்காலை 10 மணியளவில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் கிளிநொச்சி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பல கழகங்கள் கலந்துகொண்டன.

இப்போட்டி இன்றும் நடைபெறும் என்று போட்டி அமைப்பாளர்களால் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, இப்போட்டியில் தெரிவுசெய்யப்படும் கழகங்கள் இறுதிப்போட்டிக்குத் தகுதி பெறும் எனவும் -

முதல் மூன்று இடங்களைப் பெறும் கழகங்களுக்குப் பெறுமதியான பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படும் எனவும் - போட்டி அமைப்பாளர்கள் மேலும் தெரிவித்தனர்.

இவர்களுக்கான இறுதிப்போட்டியும் பரிசில் வழங்கும் நிகழ்வும் விரைவில் நடைபெறவுள்ளன. (10-12)

## யாழ். பல்கலையில் மகேஸ்வரன் நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம்,நவ.17

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் சிவபாதசுந்தரம் மகேஸ்வரனின் நினைவுப் பேருரை நிகழ்வு நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழக இரசாயனத்துறை விரிவுரை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

'இலங்கையில் மூன்றாம் நிலைக்கல்வி நிலை' என்னும் தலைப்பில் திறந்த பல்கலைக்கழக இரசாயனத்துறை சிரேஷ்ட பேராசிரியர் ஜே.என்.ஒலிவ் பெர்னாண்டோ நினைவுரை நிகழ்த்துவார். (3-204)

## 17.11.1999 சர்வதேச மாணவர் தினத்தன்று இன்பருட்டிக் கடலில் கல்விக்காய் கலந்துவிட்ட ஹாட்லியின் மைந்தர்களின் ஐந்தாம் ஆண்டு

# நினைவலைகள்



சிவநாதன் ரவிசங்கர்
02.02.1981



பாலகிருஷ்ணன் பிரதீபன்
17.04.1981

"நினைவுகள் கலையவில்லை
நிகழ்வுகள் மறக்கவில்லை
ஆண்டுகள் ஐந்தாச்சோ
ஆழியில் கலந்து நீங்கள்"



பூரணமூர்த்தி கந்தர்வன்
11.05.1981



சுந்தரலிங்கம் சிவோத்தமன்
23.03.1981

பெற்றோர், உற்றோர், நண்பர்கள் (A/L 2000)

(38682) (24-19-44)

# சகல வீரர்களின் ஒருமித்த செயற்பாடே சம்பியன் பட்டம் வெல்வதற்குக் காரணம்

## யாழ்.பல்கலைக்கழக கிரிக்கெட் அணியின் பயிற்றுநர்

யாழ்ப்பாணம்,நவ.17

எட்டாவது மினி ஒலிம்பிக் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் யாழ்.பல்கலைக்கழக அணி சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டமைக்கு வீரர்களின் ஒருங்கிணைந்த செயற்பாடுகளே காரணம்.

-இவ்வாறு தெரிவித்துள்ளார் யாழ்.பல்கலைக்கழக கிரிக்கெட் அணியின் பயிற்றுநர் ஜி.டானியல் மதியழகன்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது -

5 ஆவது மினி ஒலிம்பிக் போட்டி 1995 ஆம் ஆண்டு கொழும்பில் இடம்பெற்றது.

அந்தப் போட்டியில் உதைபந்தாட்டம்,கிரிக்கெட், ஹொக்கி, கூடைப்பந்து மற்றும் இதர போட்டிகளில் எமது வீரர்கள் சளைக்காது விளையாடியதை யாவரும் அறிவர்.

தொடர்ந்து எமது உதைபந்தாட்ட அணி மூன்று வருடங்களுக்கு ஒருமுறை நடக்கும் மினி ஒலிம்பிக் (MINI OLYMPIC) போட்டிகளில் தங்கப் பதக்கங்களை வென்றது.

ஆனால், இவ்வருடம் இடம்பெற்ற போட்டி தென்னிலங்கையிலேயே பெரும் மாற்றத்தை வீரர்களிடையே ஏற்படுத்தியுள்ளது.

எமது கிரிக்கெட் அணி கொழும்பு பல்கலைக்கழக அணியுடனான இறுதிப் போட்டியில் கொழும்பு பல்கலைக்கழக மைதானத்தில் வெற்றியீட்டித் தங்கப் பதக்கம் பெற்றது. இது ஒரு வரலாற்றுச் சாதனையாகும் - என்றார்.

(10-5-185)

## உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் மூன்றாமிடத்துக்கு

இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்ட யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் சோமசுந்தரம் சஞ்சீவன் ஞாபகார்த்தமாக நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் உடுப்பிட்டி அ.மி. கல்லூரி மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இப் போட்டியில் நயினாதீவு மகா வித்தியாலயத்தைத் தோற்கடித்து உடுப்பிட்டி அ.மி.கல்லூரி மூன்றாமிடத்தைத் தட்டிக்கொண்டது.

இச்சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்திற்கு யாழ்.இந்துக் கல்லூரியும் யாழ்.கனகரட்ணம் மத்திய மகா வித்தியாலயமும் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

(10-5)

## ஒருநாள் கிரிக்கெட் தரவரிசையில் இலங்கை அணிக்கு 2 ஆம் இடம்

லண்டன்,நவ.17

சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளின் தரவரிசைப் பட்டியலில் இலங்கை அணி தொடர்ந்தும் இரண்டாம் இடத்தைத் தக்கவைத்துள்ளது.

கடந்த சனிக்கிழமை இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையே இந்தியாவில் நடைபெற்ற இந்திய கிரிக்கெட்டின் பவளவிழாப் போட்டியில் தோல்வியடைந்த இந்திய அணி, தரவரிசைப் பட்டியலில் ஏழாவது இடத்தில் இருந்து எட்டாவது இடத்துக்குப் பின்தள்ளப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலிய அணி தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளது. ஆஸ்திரேலியா (137 புள்ளிகள்), இலங்கை (119 புள்ளிகள்), நியூஸிலாந்து (117 புள்ளிகள்), பாகிஸ்தான் (109 புள்ளிகள்), மேற்கிந்தியத்தீவுகள் (107 புள்ளிகள்), இங்கிலாந்து (107 புள்ளிகள்), தென்னாபிரிக்கா (101 புள்ளிகள்), இந்தியா (100 புள்ளிகள்), சிம்பாப்வே (59 புள்ளிகள்), கென்யா ( 26 புள்ளிகள்).

(10)



இலங்கை கரப்பந்தாட்டச் சங்கம் அகில இலங்கை ரீதியாக நடத்திய கரப்பந்தாட்ட நடுவர்களைத் தெரிவுசெய்வதற்கான பரீட்சையில் சித்தியடைந்த த.கருணாகரனுக்கு, அகில இலங்கை கரப்பந்தாட்டச் சங்கத் தலைவர் நிமால் சின்னம் சூட்டுவதனையும் அருகில் யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கத் தலைவர் கப்டன் டி.ஏ.எம்.குணசிங்கம் நிற்பதையும் படத்தில் காணலாம். (10-5)



யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் யாழ்.மாவட்ட கராத்தே சங்கம் நடத்திய கராத்தே போட்டிகளில் வெற்றியீட்டிய குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழக வீரர்களைப் படத்தில் காணலாம்.

*(படம்: குருநகர்ச் செய்தியாளர்)*

## தலைமைப் பதவி வழங்கியிருந்தால் சிறப்பாக வழிநடத்தியிருப்பேன் -வோர்ன்

ஆஸ்திரேலிய அணியின் தலைவர் பதவியைக் கொடுத்திருந்தால் அணியைச் சிறப்பாக வெற்றி பெறவைத்திருப்பேன் என்று அந்த அணியின் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன் தெரிவித்துள்ளார்.

சில ஒருநாள் போட்டிகளில் இவர் அணித் தலைவராக இருந்திருக்கிறார். அந்தப் போட்டிகளில் நன்றாக தலைமைப் பதவியை வகித்தார். உலகக் கிண்ணப் போட்டிகளில் மார்க்வோ தலைவராகவும் இவர் துணைத் தலைவராகவும் பணியாற்றியுள்ளனர்.

'இன்சைட் கிரிக்கெட்' என்ற பத்திரிகைக்கு ஷேன்வோர்ன் அளித்த பேட்டி வருமாறு -

ஆஸ்திரேலிய அணிக்கு நான் தலைவராக ஆகியிருப்பேன். அப்போது நடந்த மருத்துவச் சோதனையின்போது ஊக்க மருந்து உட்கொண்டதாகக் கூறிவிட்டனர். தலைவர் பதவிக்கு நான் ஆசைப்படவில்லை என்று கூறினால் அது மனதார நான் சொன்ன பொய்யாகத்தான் இருக்கும். நானும் தலைவராக விரும்பினேன். அப்படி எனக்கு வாய்ப்புக் கொடுத்திருந்தால் சிறப்பாக அணியை வழிநடத்தியிருப்பேன்.

ரிக்கிபொண்டிங் நல்ல தலைவர் தான் ஆனால், நானும் நல்ல தலைவர் என்பதை அனைவரும் உணரும் வகையில் செயற்பட்டிருப்பேன். ஒருநாள் போட்டிகளில் நான் தலைவராக இருந்தபோது முடிவுகள் எங்கள் அணிக்குச் சாதகமாகவே இருந்தன. எனது தலைமையும் மெச்சத் தகுந்ததாகவே இருந்தது என்று அந்தப் பேட்டியில் தெரிவித்துள்ளார்.

(10)

## இந்துமத குரு பலியான சம்பவத்துடன் தொடர்புடையோர் மீது நடவடிக்கை எடுக்குக!

### சர்வதேச இந்து மத குருபீடம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,நவ.17

கொடிகாமம் பகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இராணுவ பவுஸர் மோதி இந்து மதகுரு ஒருவர் பலியான சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடமும், பாதுகாப்பு அமைச்சிடமும் சர்வதேச இந்துமத குருபீடம் கோரிக்கை விடுத்துள்ளது.

சமாதானச் சூழ்நிலையில் தமிழ் மக்கள் மத்தியில் இத்தகைய கோரமான, துயரமான சம்பவங்கள் நிகழ்வது மேலும் அச்சத்தையும் ஐயத்தையும் வலுப்படுத்துகின்றன.

குறிப்பாக மரணமான ஹரிஹரசர்மாவின் உடலை அப்புறப்படுத்துவதில் இராணுவம் காட்டிய அவசரமானது தமிழ் மக்கள் தொடர்ந்தும் பெறுமதியிழந்தவர்கள் என்ற கணிப்பே பெரும்பான்மையினர் மத்தியில் உள்ளதோ என்ற ஐயத்தை ஏற்படுத்துகின்றது என இந்து மத குருபீடம் தெரிவித்துள்ளது.

சமாதானச் சூழ்நிலையில் நடைபெற்ற இச்சம்பவம் அதிருப்தியைத் தருவதோடு, வன்மையான கண்டனத்துக்கும் உரியதென்று சர்வதேச இந்துமத குருமார் ஒன்றியம் தெரிவித்துள்ளது.

(10-202-203)

## சிறைச்சாலைத் திணைக்களத்தில் ஆயிரம் பேருக்கு வெற்றிடங்கள்

### நீதியமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு,நவ.17

சிறைச்சாலைத் திணைக்களத்தில் ஆயிரம் ஊழியர்களுக்கு வெற்றிடங்கள் உள்ளன என்று நீதியமைச்சர் டபிள்யூ.டி.ஜே.செனிவிரத்ன தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலை அத்தியட்சகர் முதல் சிறைக் கூட்டப்பணியாளர்கள் வரை இந்த வெற்றிடங்கள் உள்ளன என்றும் -

1987ஆம் ஆண்டிலிருந்து சிறைச்சாலை ஆளணி முறையில் எவ்விதமாற்றமும் செய்யப்படவில்லை என்றும் - அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த 16 வருட காலத்தில் ஐந்து புதிய சிறைச்சாலைகள் திறக்கப்பட்டுள்ளன. ஆனால், எந்த அரசும் ஊழியர்களை உள்ளீர்ப்பதற்கான எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(10-203)







தென்னிலங்கையில் உள்ள சிங்கள மக்களுக்கு இடைக்கால நிர்வாகம் மற்றும் சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக விளக்கம் அளிக்கும் செயற்பாட்டை முன்னெடுப்பது குறித்த சந்திப்பு ஒன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் மக்கள் சமாதான முன்னணிக்கும் இடையில் கொழும்பில் இடம்பெற்றது.

மக்கள் சமாதான முன்னணியின் சமதலைவர் 'சமாசூரி' எம்.எஸ். செல்வேந்திரன் அந்த முன்னணியினால் வெளியிடப்பட்ட சுவரொட்டியை கூட்டமைப்பினருக்குக் காட்டுவதையும் சந்திப்பில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.கே.சிவாஜிலிங்கம், த.கனகசபை, எஸ்.கனகரத்தினம், வினோ நோதராதலிங்கம், சிவநாதன் கிஷோர் ஆகியோரையும் சமசெயலாளர் ரோகண சிறிவர்த்தனா, இணைப்பாளர் நிமல் அபயசிங்க ஆகியோரையும் படங்களில் காணலாம்.




# பிறந்த நாள் வரவேற்பும் வாழ்த்தும்

தமிழீழத் தேசியத் தலைவரின் பிறந்தநாளே வா! வா!
வந்தெம் தேசத்தில் மகிழ்ச்சியைத் தா! தா!
பெரும்எழுச்சியுடனே நீ பொங்கி வா!
ஐம்பதாம் ஆண்டடே நீயும் அவரை வாழ்த்திட வா!

ஓட்டோ சங்கம் [தலைமையகம்]
40, முனீஸ்வரன் வீதி, யாழ்ப்பாணம்.

## 21 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



ஏழாலை வடக்கைச் சேர்ந்த ஜெயதேவன் - சரோயினிதேவி தம்பதிகளின் செல்வப் புதல்வி

**செல்வி ஜெயருபி**

தனது 21 ஆவது பிறந்த நாளை இன்று 17.11.2004 தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.

இவரை ஜேர்மனியில் வசிக்கின்ற அப்பா ஜெயதேவன், தம்பி துஷ்யந்தன், ஏழாலையில் வசிக்கும் அம்மா சரோயினிதேவி, தங்கைமார்களான ஜெயசுதா, ஜெயலதா, ஜேர்மனியில் வசிக்கின்ற சித்தப்பாமார்களான சிறிகரன், ஜெயபாலாசேகரன், சித்திமார்களான சாந்தினிதேவி, சாராதேவி தங்கை, தம்பிமார்கள், மாமா, மூர்த்தி , மாமி ஜெயந்தி, மச்சாள், மச்சான்மார்கள், கனடாவில் வசிக்கும் மாமா கணேசமூர்த்தி, மாமி மாலினி, மச்சான்மார்கள், ஏழாலையில் வசிக்கும் பெரியப்பா குடும்பம், சித்தப்பா குடும்பம், மாமிமார் குடும்பம் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் எல்லாம்வல்ல ஆலங்கட்டை சித்தி விநாயகர் அருள்பெற்று பல்லாண்டு காலம் வாழ்க என வாழ்த்துகின்றார்கள்.

'தேவி வாசம்'
ஏழாலை வடக்கு,
ஏழாலை. (C/39081)(29-43-11-17)

வாழ்த்துவோர்
J.சரோயினிதேவி (அம்மா).

## நிவாரண விநியோகம்

தென்மராட்சி,நவ.4

தென்மராட்சி மேறகு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைக் கடைகளின் நிவாரண உலர் உணவுப் பொருள்கள் நேற்று முன்தினம் முதல் வழங்கப்பட்டு வருகிறன.

சொந்த இருப்பிடங்களுக்கு இன்னமும் மீளக்குடியமராத குடும்பங்களுக்கும் நலன்புரி முகாம்களில் தங்கியிருக்கும் குடும்பங்களுக்கும் மே, ஜூன், ஜூலை ஆகிய மாதங்களுக்குரிய நிவாரணப் பொருள்களும் -

ஏனையோருக்கு மே மாதத்திற்குரிய நிவாரணப் பொருள்களும் வழங்கப்பட்டு வருகின்றன எனச் சங்கப்பொது முகாமையாளர் சி.தேவகுமார் அறிவித்துள்ளார்.

(3-117)

## தென்னிந்தியாவில் இருந்து பரம்பரை ஜோதிடர்

திரு.P.T.R. அவர்கள்

5ஆவது முறையாக யாழ்.புண்ணிய பூமிக்கு வருகின்றார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம் பார்த்து உங்களது எதிர்காலப் பலன் களை அறிந்து கொள்ள இன்றே திரு.P.T.R.ஐச் சந்திக்கவும்.

திரு.P.T.R ஐச் சந்திக்கும் இடம்:
ஜோதிடர் திரு.P.T.R. அவர்கள் பாலாஜி இன் விடுதி,
293, கஸ்தூரியார் வீதி, கன்னாதிட்டிச் சந்தி அருகில்,
யாழ்ப்பாணம்.
(38700)(43)

## கண்ணீர் அஞ்சலி



சிவஸ்ரீ பொ.வரதராஜக் குருக்களின் அன்பு மகன்

**ஹரிஹரசர்மா**

14.11.2004 இல் அகாலமரணமானார். அவர்களின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

பாற்பண்ணை,
திருநெல்வேலி. (C/38694)(22-43-11-17)

சு.பசுபதிராசா (ஆசாரி)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
13
09
1930



மறைவு
29
11
2003

**அமரர் சின்னத்தம்பி திருநாவுக்கரசு**

ஈராறு மாதங்கள் சென்றுவிட்டதையா
எம் விழிகளில் இன்னும் ஈரம் வற்றவில்லை
உந்தன் நினைவுகளால் உள்ளம் வெந்து நொந்து
தவிக்கின்றோம் ஐயா ஒரு முறை வந்து
எங்களைப் பார்க்க மாட்டீரோ?
எந்நாளும் உம்மை எண்ணி எம் நெஞ்சு தவிக்கிறதே
ஐயா! எம்மை ஏங்கவிட்டு எங்கு சென்றீர்?
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-39083) (32-43-11-17)

சொந்த இடம்: பலாலி
தற்காலிக இடம்: சந்நிதி றோட், அச்சுவேலி.
லக்சி தொலைத் தொடர்பகம்.

- அன்பு மனைவி அன்னமுத்து
மகன் லோகநாதன் (கனடா),
மருமகள், பேரன்மார் (கனடா)


## நீங்களும் அமெரிக்காவுக்கு செல்ல முடியும்.



அமெரிக்காவின் லொட்றி விசா

மேலதிக விபரங்களுக்கு

திருமுருகன் கொம்நெற்

259,கே.கே.எஸ் றோட், யாழ்ப்பாணம்.
(Opposite All Ceylon Distributors)
Tel - 021 222 7835
Fax - 021 222 7836

46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி,யாழ்ப்பாணம்
(பலநோக்கு கூ.ச.முன்பாக)
Tel - 021 222 7560
Fax - 021 222 7310


## அரச திணைக்களங்களில் பணியாற்ற ஆயிரத்து 783 பேருக்கு நியமனம்

கொழும்பு,நவ.17

அரசதிணைக்களங்கள் மற்றும் அமைச்சுகளில் கடமையாற்றுவதற்கு ஆயிரத்து 783 பேருக்கு நியமனங்கள் வழங்கப்படவுள்ளன.

நாடு முழுவதுமிருந்து எழுத்துப் பரீட்சைக்குத் தோற்றியோரில் 2 ஆயிரத்து 400 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

அவர்களில் ஆயிரத்து 833 பேர் எழுதுவினைஞர் சேவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர்.

இவர்களின் சான்றிதழ்களின் மூலப் பிரதிகளைச் சமர்ப்பிக்கத்தவறிய 50 பேர் தவிர ஏனையோருக்கு நியமனக்கடிதங்கள் அடுத்த வாரத்தல் அனுப்பிவைக்கப்படவுள்ளதாகப் பொது நிர்வாக அமைச்சுத் தெரிவித்துள்ளது.

(10-202)

## பட்டின அபிவிருத்தித் திட்ட அதிகாரி இன்று வருகை

யாழ்ப்பாணம்,நவ.17

இலங்கை பட்டினத்திட்ட அதிகாரி கலாநிதி பாமி இஸ்மாயில் இன்று புதன்கிழமை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.

இவர் நாளை வியாழக்கிழமை கிளிநொச்சிக்குச் சென்று அங்குள்ள அதிகாரிகளைச் சந்திக்கவுள்ளார். நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் இருந்து யாழ்ப்பாணம் திரும்பும் இவர் காலை 10 மணியளவில் யாழ்.பொது நூலகத்திற்குச் சென்று மாநகர சபை ஆணை யாளரையும், பிரதேச சபை அதிகாரிகளையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார்.

(10-72-3)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை அதிபர் திருமதி வ.சிவபாலன் அவர்களின் மாமியாரும் மேலதிக மாகாணக் கல்வித் திணைக்கள கட்டடப் பொறியியலாளர் கு.சிவபாலன் அவர்களின் அன்புத் தாயாருமாகிய

**திருமதி சரஸ்வதி குணரத்தினம்**

அவர்களின் மறைவையொட்டித் துயருறும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
(C/39080)(22-43-11-17) கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியர் செல்வி புஸ்பராணி சண்முகம் அவர்களின் அன்புத் தாயார்

திருமதி

**தெய்வானைப்பிள்ளை சண்முகம்**

அவர்களின் மறைவையொட்டித் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், நலன்புரிக் கழகம்,
(38697)(43-11-17) யா/நாவற்குழி மகாவித்தியாலயம்.

## வாய்க்கால்கள் திருத்தப்படவில்லை

மானிப்பாய்,நவ.17

பொன்னாலை வீதியில் உள்ள வாய்க் கால்கள் திருத்தப்படாது உள்ளமையினால் வெள்ளம் குடிமனைகளிற்குள் புகும் நிலை ஏற்பட்டுள்ளது.

மானிப்பாய் உச்சியோடைக்கிராமத்தில் பெருகும் வெள்ளம் பொன்னாலை வீதியில் உள்ள வாய்க்கால் வழியாக மானிப்பாய் மருதடி ஆலயக்குளத்திற்குச் செல்லும்.

ஆனால், நீண்டகாலமாக இவ்வாய்க்கால்கள் திருத்தி அமைக்கப்படாது உள்ளமையினால் குடிமனைகளுக்குள் வெள்ளம் புகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் சம்பந்தப்பட்டவர்கள் இப்பிரதேச வாய்க்கால் களைக் திருத்தியமைக்கும் பணியை விரைவில் மேற்கொள்ளுமாறு அவ்வூர் மக்கள் தெரிவித்துள்ளனர்.

(206-8-90)

## மரண அறிவித்தல்

**அப்பாக்குட்டி இராசையா (ஐயாத்துரை)**



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கோண்டாவில் மேற்கை வதிவிடமாகவும் தற்போது தெகிவளையில் வசித்தவருமான ஓய்வு பெற்ற உள்ளூராட்சி லிகிதரும், நந்தாவில் மனோன்மணி அம்மன் வாசிகசாலையின் முன்னாள் தலைவரும், கோண்டாவில் மேற்கு மகாகணபதிப் பிள்ளையார் ஆலயத்தின் முன்னாள் பிரதம தர்மகர்த்தாவுமாகிய அப்பாக்குட்டி இராசையா அவர்கள் 14.11.2004 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அப்பாக்குட்டி - ஆச்சிப்பிள்ளை தம்பதிகளின் புத்திரனும் காலஞ்சென்ற மயில்வாகனம் தம்பதிகளின் மருமகனும் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கந்தையா, கனகம்மா, இரத்தினம்மா, சுபத்திரை, ஜெயபாலசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற பரமேஸ்வரன் மகேஸ்வரி, அம்பிகைபாகன் நாகரத்தினம், சண்முகநாதன், யோகராசா, பூபாலராசா, சிவானந்தன், இரத்தினமலர், குணநேசன், காலஞ்சென்ற நவமலர், கிஸ்ணசாமி, கனகரத்தினம், சின்னத்துரை நேசமலர் ஆகியோரின் மைத்துனரும் தயாநிதி, தயாபரன் (சுவிஸ்), தயானந்தி (கனடா), தயாளினி (சுவிஸ்), தயாளன் (லண்டன்), தயாரூபி ஆகியோரின் அன்புத் தந்தையும் திருநாவுக்கரசு, மலர்வதனா, உதயகுமார், பரமேஸ்வரன், மாலினி, கேதீஸ்ராஜ் ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரசாந், நிரோஜன், நிலானி, பிரியங்கன், சுதர்சன், சுகிர்தன், மயூரி, டிஷ்யன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2004) புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்கிசை மகிந்த மலர்சாலையில் நடைபெற்று, பூதவுடல் கல்கிசை பொதுமயானத்தில பிற்பகல் 3 மணிக்கு தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


மடத்தடி ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.
(சி-39073)(43-17-15)

தகவல்:
குடும்பத்தினர்.
19/1A, ஸ்ரீமகாபோதி வீதி,
தெகிவளை.
T.P.:0112-738852

## கண்ணீர் மலர்களைச் சமர்ப்பிக்கின்றோம்

சிவஸ்ரீ வரதராஜக் குருக்கள்

**ஹரிஹரசர்மா**



நமக்காக மலர் தூவி அர்ச்சனைகள் செய்த அர்ச்சனச் செம்மல் ஹரிஹரசர்மா அவர்கள் 14.11.2004 அன்று அகால மரணமடைந்துவிட்டார் ... மலர்களால் அர்ச்சிக்கின்றோம். யாவர்க்கும் இனியவர். சமஸ்கிருதம், தமிழ் ஆகிய மொழிகளில் சொல்லாதிக்கம்பெற்றவர். அவரது குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்குகொள்கின்றோம். வரதராஜக்குருக்கள் ஹரிஹரசர்மாவின் புகழ் நீடூழி நிலைப்பதாக.

மடம் வீதி, கல்வியங்காடு,
(வேலணை மேற்கு)
(38692)(43-11-17)

அண்ணாதாசன்
(இளைப்பாறிய G.S.சச்சிதானந்தன்)
குடும்பத்தினர்.


## உடன் விற்பனைக்கு

முதிரைப் பலகையினாலான பீற்றிங், அலுமாரிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: கபிலா காலணியகம்,
4,கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(38699)

**A/L 2006**
இணைந்த கணிதம்
எல்லைகள்
வகையீடு
Sat., Sun.
4.30-6 p.m.
Wed.6.15 a.m.
**Mr.T.GEETH**
B.Sc.
**SHAMROCK**
J/ Eachchamoddai Rd.

# கண்ணீர் அஞ்சலி

யாழ்.மாவட்ட மேலதிக மாகாணக் கல்வித் திணைக்கள பிரதம பொறியியலாளர் கு.சிவபாலன் அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி குணரத்தினம் சரஸ்வதி**

அவர்கள் இந்தியாவில் இயற்கை மரணமெய்திய செய்திகேட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

அதிபர் சங்கம்,
கரவெட்டி கல்விக்கோட்டம், கரவெட்டி.

(சி-39095)(32-11-14)

# பணிநிலை வேண்டுகை

முன்பள்ளிக் கல்வி பயிற்சி உதவித் திட்ட முகாமையாளர்

வடக்கு - கிழக்கு மாகாண முன்பள்ளிகளின் அபிவிருத்தி வேலைத்திட்டங்களில் பணியாற்றுவதற்கு மேற்படி பணி நிலைக்குத் தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

## பணியின் தன்மைச் சுருக்கம்

★கிளிநொச்சியைத் தலைமையாகக் கொண்டு, வடக்கு-கிழக்கு மாகாணத்தின் சகல பகுதிகளிலும் முன்பள்ளிப் பயிற்சிகளைக் கண்காணிப்பதும் ஒழுங்குபடுத்துவதும் வளவாளராகக் கலந்து கொள்வதும் பிரதான பணியாகும்.

★ அத்துடன், பயிற்சித் தரவுகள், அறிக்கைகள், வரைபுகளைக் கணனி மயப்படுத்துவதும் இதனோடிணைந்த வேலைத்திட்டங் களை மேற்கொள்வதும் ஆகும்.

முன்பள்ளிக் கல்வித்துறையில் மேற்படி பணிக்கேற்ப ஆற்றலும் தேர்ச்சயும் ஆங்கில அறிவும் கொண்டிருப்பதுடன் உந்துருளி (மோட்டார் சைக்கிள்) சாரதி அனுமதிப்பத்திரமும் கொண்டிருப்பவர்கள் 30.11.2004 ஆம் திகதிக்கு முன் கீழ்க் குறிப்பிடப் பெற்ற முகவரிக்கு கிடைக்கக் கூடியதாக விண்ணப்பிக்கவும்.

**ஆரம்ப பிள்ளைப் பருவ அபிவிருத்திப் பிரிவு**
தமிழர் புனர்வாழ்வுக் கழகம், நடுவப்பணியகம், கிளிநொச்சி.

(38698)(32-11-14)

# கணனி இயக்குநர் தேவை

அச்சகம் ஒன்றிற்கு கணனி இயக்குநர் (இருபாலாரும்), ஓவ்செட் மெசின் மைண்டர் (டேவிஷன்), பைண்டர் உடன் தேவை.

நேரில் தொடர்புகளுக்கு:
**சாந்தி அச்சகம்**
575, கே.கே.எஸ்.றோட்,
நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

(சி-39093)

**THE ROYAL COLLEGE OF JAFFNA**
ஆண்டு 1 இல் இருந்து O/L வரை
முக்கிய பாடங்கள் தனித்தனி கவனம்,
சிறந்த ஆசிரியர்கள்.
426 (302), K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.

**லக்ஷ்மி சினிமா** இணுவில்

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக சிம்பு (இருவேடம்), ஜோதிகா, கவுண்டமணி நடிப்பில்

**மன்மதன்**



தினசரி:
11.00, 3.00,
7.00, 10.00
புதிய நேரம்

பதிவு ஆசனம்: 0776592008

(38480)

**நாதவீஸ் சினிமா** யாழ்ப்பாணம்

குளிரூட்டப்பட்டது. 2 ஆவது வெற்றி வாரம் தனுஷ், பிரியா நடித்த



**ட்ரீம்ஸ்** (ரீலஸ)

காட்சி நேரம்:
10.30, 2.30, 6.30,
9.00 (பு.நே.)

வெகுவிரைவில் இரவு 9.00 (பு.நே) காட்சியாக **RAMBO-3**

**நிரஞ்சனாஸ்** சங்கானை

ராஜ், திவ்வியா நடித்த

**கேம்பஸ்** (ரீலஸ்)

காட்சி நேரம்:
11.00, 2.45, 6.00
(பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு
இரவு 8.45 (பு.நே)

**RAMBO-3**

**ராஜா** யாழ்ப்பாணம்



அஜித் + அஜித், பூஜா நடித்த

**அட்டகாசம்** (ரீலஸ்)

காட்சிகள்:
10.30, 2.30, 6.30, 9.30.
ரிக்கெட் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

**நாகம்ஸ் சினிமா** சுன்னாகம்

இந்தியாவிலும், இலங்கையிலும் ஒரேதின வெளியீடாக சரத்குமார், நிகிதா, வடிவேல் நடித்த

டொல்பி ஒலி அமைப்புடன்

**சத்ரபதி**



தினசரி 11.00, 3.00, 7.00, 10.00 (பு.நே)

# முக்கிய அறிவித்தல்

யாழ், வன்னி மக்களுக்கு,

ஏசியன் கம்பியூட்டர் சிஸ்டம், மற்றும் ஏசியன் பிசினஸ் கொலிஜ் ஆகிய நாம் கணினி மற்றும் கணக்கியல் கல்விச்சேவையை ஆற்றிவருவது நீங்கள் அறிந்ததே. எமது நிறுவன பெயரை பயன்படுத்தி இங்கிலாந்தில் உள்ள தனியார் ஒருவர் குடாநாட்டு நபர் ஒருவர்மூலம் வியாபாரம் ஒன்றை நடத்தி வருவதாக நாம் பொது மக்களிடமிருந்து அறியப்பெற்றோம்.

மேற்குறிபிடப்பட்ட நபருக்கும் அவர்களால் நடத்தப்படும் வியாபாரத்திற்கும் ஏசியன் நிறுவனத்திற்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்பதை அறியத்தருகின்றோம்.

இயக்குனர்,
ஏசியன் கம்பியூட்டர் சிஸ்டம்,
ஏசியன் பிசினஸ் கொலிஜ்,
கொழும்பு.

200, ஜோர்ஜ் ஆர். டி சில்வா மாவத்தை
கொழும்பு-13

# மாவீரர் தினத்தை முன்னிட்டு இணுவில் கலாஜோதி ச.ச. நிலையம் நடத்தும் நாடகப்போட்டி

**காலம்: 21.11.2004 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி**

**இடம்: இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப்பிரிவு மண்டபம்**

மேற்படி போட்டிக்கு விண்ணப்பித்தவர்கள் போட்டிக்கான சகல ஏற்பாடுகளுடனும் குறித்த நேரத்துக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

~ ஏற்பாட்டாளர்கள்.

(சி-39084)(32-11-14)

# ஒருவருட நினைவுகளுடன்...



**செல்வி விஜயராஜா கமலாஜினி (றதி)**

**தோற்றம்** 13.02.1963 — **மறைவு** 30.11.2003

ஆண்டொன்று ஆயிற்றோ ~ எம்
ஆருயிர் செல்வமே றதி
உனைப்பிரிந்து ?
அன்பினால் அரவணைத்து
அனைவர்க்கும்
அருமருந்தாய்
நின்னினிய வார்த்தைகளால்
எங்களைக் கவர்ந்து நின்ற
செல்வமே கமலாஜினி !
எம்முயிர் இருக்குமட்டும்
ஏந்துவோம் உம் நினைவை !

**என்றும் நினைவோடு.....**
**தாய், தந்தை, சகோதரர்கள்.**

*மா. விஜயராஜா*
*வீளாத்தியடி றோட்,*
*உரும்பிராய் வடக்கு.*

(சி-39092)
(32-11-14)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நாகலிங்கம் பொன்னம்மா

கைதடி மேற்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி நாகலிங்கம் பொன்னம்மா அவர்கள் 14.11.2004 ஞாயிற்றுக்கிழமை இரவு சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லப்பா நாகலிங்கத்தின் அன்பு துணைவியும் காலஞ்சென்ற செல்வி நாகமுத்துவின் (ஆசிரியை) அன்புச் சகோதரியும் திருச்செந்திநாதன், சத்தியநாதன், ஸ்ரீரங்கநாதன், ஸ்ரீரங்க மல்லிகா, தெய்வயோகநாதன், ஸ்ரீநாதன், குகபதி ஆகியோரின் அன்புத் தாயாரும் அழகம்மா, மனோகரி, லோகபாலினி, நவரத்தினம், கமலேஸ்வரி, ரதி, சுந்தரலிங்கம் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15.11.2004 திங்கட்கிழமை கைதடியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா.சத்தியநாதன்
(கோட்டக்கல்வி அலுவலர்,
சாவகச்சேரி)

*கைதடி மேற்கு,*
*கைதடி.*
(சி-39094)(32-11-14)

## குருசாமி செல்வநாயகம்



புன்னாலைக்கட்டுவன் வடக்கைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட குருசாமி செல்வநாயகம் நேற்று (16.11.2004) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் குருசாமி - காலஞ்சென்ற நாகம்மா தம்பதிகளின் மூத்த புதல்வரும் காலஞ்சென்ற கனகரத்தினம் - லட்சுமியின் மூத்த மருமகனும் நவரட்ணம் (ராசுக்குட்டி), சிவமணி, அரிச்சந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுபாகரன், வசீகரன், காலஞ்சென்ற சசிகரன் மற்றும் செல்வறஜனி, ஜீவகரன் (லண்டன்), ராஜ்கரன், ராஜ்மலர் ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஜெகதா, துளசிமலர், லலிதா, (லலி - லண்டன்) ஆகியோரின மாமனாரும் டிலக்ஷன், தனுசன், யதுர்ஷன், யாதுளன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2004) புதன்கிழமை நண்பகல் 12 மணியளவில் கலைவாணி மில் வீதி, கொக்குவில் கிழக்கில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கட்டை ஆலடி, கோண்டாவில் கிழக்கு இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ.சுபாகரன், செ.வசீகரன்.

*கலைவாணி மில் வீதி,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*
(38701)(32-11-14)

## திருமதி சரஸ்வதி குணரத்தினம்



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் தற்சமயம் இங்கிலாந்தை வசிப்பிடமாகக் கொண்டவருமாகிய திருமதி சரஸ்வதி குணரத்தினம் அவர்கள் திங்கள் இரவு (15.11.2004) இந்தியாவின் மைசூர் நகரில் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கார்த்திகேசு குணரத்தினத்தின் அன்பு மனைவியும் தேவதாசன் (பொறியியலாளர், U.K.) Dr.ரவிகுலதிலகம் (பெங்களூர்), ரவீந்திரன் (கனடா), பரமேஸ்வரி (கனடா), சரோஜினி (U.K.), ராதாகிருஷ்ணன் (பொறியியலாளர், U.K.), சிவபாலன் (பொறியியலாளர், மேலதிக மாகாணக்கல்விப் பணிமனை - யாழ்ப்பாணம்), யீரன்சனி (ஜேர்மனி), இளங்கோ (மலேசியா) ஆகியோரது அன்புத் தாயாரும் Dr.தேவிசிராணி, Dr.அர்ஜுன், கோனன்கல்லி, ஈஸ்வரி, ராசிக், Dr.வசந்தமாலா, வசந்திமாலா (அதிபர் யா/கொழும்புத்துறை இ.ம.வி), ஷேர்னி ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (16.11.2004) செவ்வாய்க்கிழமை மைசூரில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்காகவும் அறியத்தருகின்றேன்.

தகவல்:
கு.சிவபாலன்
(பொறியியலாளர், மேலதிக
மாகாணக்கல்விப் பணிமனை,
யாழ்ப்பாணம்).

*34,சப்பல் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
(36704)(38-11-14-32)

## திருமதி சண்முகம் தெய்வானைப்பிள்ளை



மறவன்புலோ, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் நாகேஸ்வரி வித்தியாசாலை வீதி, சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் தெய்வானைப்பிள்ளை நேற்று (16.11.2004) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கோபாலு சண்முகம் (முன்னாள் அதிபர், சகலகலாவல்லி வித்தியாசாலை) அவர்களின் அன்பு மனைவியும் விநாயகமூர்த்தி, இராசரட்ணம், மோகனாம்பிகை, கிருஷ்ணவேணி, புஸ்பராணி (நாவற்குழி மகாவித்தியாலய ஆசிரியை) காலஞ்சென்ற குணநங்கை மற்றும் கோபாலகிஸ்ணமூர்த்தி ஆகியோரின் பாசமிகு தாயாரும் செல்வமணி, பாக்கியம், இரத்தினசிங்கம், செல்வராசா, சுதாமதி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.11.2004) புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் கொத்தியாலடி இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ச.கோபாலகிஸ்ணமூர்த்தி
(மகன்),
க.இரத்தினசிங்கம்(மருமகன்),
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

*க.இரத்தினசிங்கம்,*
*யா/நாகேஸ்வரி*
*வித்தியாசாலை வீதி,*
*சுன்னாகம்.*
(38706)(38-11-14-32)

# பேச்சுக்கு விடுதலைப் புலிகள் தயார் என்பதை சர்வதேசத்திடம் கூட்டமைப்பு வலியுறுத்தும்

## தமிழ் எம்.பிக்களுடனான சந்திப்பின் பின்னர் தமிழ்ச்செல்வன் தகவல்

கிளிநொச்சி,நவ.17

இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைபின் அடிப்படையில் பேச்சு மேசைக்குப் போகப் புலிகள் தயாராக இருக்கிறார்கள் என்பதைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சர்வதேச நாடுகளுக்குத் தெளிவுபடுத்தவுள்ளனர்.

கிளிநொச்சியில் நேற்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுக்கும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம.பிக்களுக்கும் இடையிலான சந்திப்பில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோர் தவிர்ந்த ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் துணை அரசியல்துறைப் பொறுப்பாளர் சோ.தங்கன், மகளிர் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் தமிழினி மற்றும் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர்கள் இதில் பங்கேற்றனர்.

அபிவிருத்திக்கான செயலகத்தில் முற்பகல் 10.30மணிக்கு ஆரம்பமான சந்திப்பு 1.30 மணி வரை இடம்பெற்றது.

சந்திப்பின் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தமிழ்ச்செல்வன் கூறியதாவது:-

★ *கேள்வி:* இன்றைய பேச்சுக்களில் முக்கியமாக என்ன விடயங்கள் ஆராயப்பட்டன.

● *பதில்:* இன்றைய அரசியல் நிலைப்பாடு, நோர்வேத் தரப்புடன் எமது தலைவர் நடத்திய பேச்சுக்களின் விவரங்கள் பற்றிய விவகாரங்கள், எமது ஐரோப்பிய விஜயம், ஜப்பான் விசேட தூதருடன் நடத்திய பேச்சுக்கள் ஆகியன தொடர்பாகக் கலந்துரையாடினோம்.

பல முக்கிய தீர்மானங்களை எடுத்துள்ளோம். ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எதிர்காலத்தில் முன்னெடுப்பதற்கான முடிவுகளை எடுத்தோம்.

★ *கேள்வி:* என்ன தீர்மானங்கள் எடுக்கப்பட்டன?

● *பதில்:* தற்சமயம் சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக அரசும் ஜனாதிபதியும் எடுத்துள்ள நிலைப்பாடு சம்பந்தமாக விடுதலைப் புலிகளும் தமிழ்க் கூட்டமைப்பும் உறுதியான நிலைப்பாட்டை எடுத்துள்ளோம்.

தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பிரதிபலிக்கக் கூடிய, மக்கள் ஆணையின் அடிப்படையில், எம்மால் முன்வைக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைவு அடிப்படையில், பேச்சு மேசைக்குப் போகப் புலிகள் தயாராக இருக்கிறார்கள் என்பதைத் தொடர்ந்து சர்வதேச சமூகத்துக்கு வலியுறுத்தும் தீவிர செயற்பாட்டில் இறங்கவிருக்கின்றோம்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் சர்வதேச சமூகத்துக்கு இந்த நிலைப்பாட்டை வெளிப்படுத்தவிருக்கிறார்கள். இது ஒரு முக்கிய முடிவாகும்.

★ *கேள்வி:* அடுத்தகட்ட நடவடிக்கைகள் என்னவாக இருக்கும்?

● *பதில்:* தொடர்ச்சியாக எமது நிலைப்பாட்டைச் சர்வதேச சமூகத்துக்கு விளக்கவிருக்கிறோம். விடுதலைப் புலிகள்தான் பேச்சு மேசைக்கு வரத்தடையாக இருக்கிறார்கள் எனவும், பேச்சு இழுபட்டுச் செல்வதற்குக் காரணமாக இருக்கின்றனர் எனவும் அரசு சர்வதேச ரீதியில் பிரசாரம் செய்கின்றது. இதில் உண்மையில்லை என்று சர்வதேச சமூகத்துக்குத் தெளிவாக்கும் நடவடிக்கையைத் தொடரவிருக்கின்றோம். இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தீவிரமாக இருக்கும்.

★ *கேள்வி:* நோர்வே மூலம் இலங்கை அரசுக்கு நீங்கள் அனுப்பிய யோசனை என்ன?

● *பதில்:* எந்த நிபந்தனையும் இல்லாமல், இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை வரைவை அடிப்படையாகக் கொண்டு பேசத் தயாராக இருக்கின்றோம் என்பதையும் -

இலங்கை அரசு தனது கூட்டுக் கட்சிகளையும் சமாதான முன்னெடுப்புக்களுக்கு முழு ஆதரவைத் தெரிவிக்கும் வகையில் ஏனைய கட்சிகளையும் ஒன்றிணைத்து, ஒருமுகப்படுத்திய தீர்மானத்தையும் எடுத்து, அந்த நிலைப்பாட்டை அறிவிக்கவேண்டும் என்பதையும் -

நோர்வே மூலம் எமது தலைவர் கோரியுள்ளார்.

ஜனாதிபதி, பேச்சில் ஈடுபாடுள்ளவர் போன்ற ஒரு தோற்றப்பாட்டைக் காட்டினாலும், ஆளும் கூட்டமைப்பில் பங்கெடுக்கும் கூட்டுக்கட்சிகள் என்ற வகையில் ஜே.வி.பியும் ஏனைய கட்சிகளும் பகிரங்கமாகச் சமாதான முன்னெடுப்புக்களை எதிர்த்து வருகின்றன.

இந்தச் சூழ்நிலையில், சமாதான முன்னெடுபுகளில் ஜனாதிபதியை மட்டும் நம்பிக்கொண்டு செல்லமுடியாது. அரசில் உள்ள ஏனைய கட்சிகளை வைத்து ஒருமனதான முடிவை எடுத்து வெளிப்படுத்த வேண்டும் என்ற செய்தியையும் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவருமாறு நோர்வேயிடம் தெரிவித்துள்ளோம்.

★ *கேள்வி:* இந்த யோசனை குறித்து அரசிடம் இருந்து ஏதாவது பதில் வந்ததா?

● *பதில்:* அரசிடம் இருந்து இதுவரை அனுசரணையாளர்கள் ஊடாக எந்தச் சாதகமான பதிலும் கிடைக்கவில்லை. அனுசரணையாளர் மூலமாகப் பதிலை எதிர்பார்க்கின்றோம. பதில் கிடைக்காத பட்சத்தில் எதிர்காலத்தில் தலைமைப்பீடம் உரிய முடிவுகளை எடுக்கும்- என்றார் தமிழ்ச்செல்வன். (ஐ-க-3-6)

---

# தமிழ்த் தேசியக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தகவல்களைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினரான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் அரசியல்துறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேசிய பின்னர் அவர் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையில் இப்படிக் கூறினார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழரசுக்கட்சி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ். ஆகிய கட்சிகள் அங்கம் வகிக்கின்றன.

கடந்த பொதுத் தேர்தலின்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் இக் கட்சிகள் இணைந்து இயங்கின. எனினும், தமிழரசுக்கட்சியின் சின்னத்திலேயே அவை போட்டியிட்டன.

தற்போது முதற்றடவையாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கெனத் தனியான அலுவலகம் அமைக்கப்படவுள்ளது.

தலைநகர் கொழும்பிலும் ஓர் அலுவலகம் திறக்கப்படவுள்ளது. சர்வதேச தொடர்புகளைக் கையாள்வதற்காக அமைக்கப்படவிருக்கும் இந்த அலுவலகத்துக்கு கஜேந்திரகுமார் பொனனம்பலம் பொறுப்பாக இருப்பார்.

இதேவேளை, தமிழ்ச்செல்வனுடனான சந்திப்புக் குறித்து இரா.சம்பந்தன் எம்.பி. மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலைப் போராட்டத்துடன் சம்பந்தப்பட்ட சகல விடயங்களும் இன்றைய (செவ்வாய்க்கிழமை) சந்திப்பில் ஆராயப்பட்டன.

சமாதானப் பேச்சு மூலம் தமிழர் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரமான - நியாயமான- தீர்வு காணப்படவேண்டும் என்பதில் நாங்கள் எல்லோரும் உறுதியாக இருக்கின்றோம். இதில் விடுதலைப் புலிகளும் உறுதியாக இருக்கிறார்கள்.

சமாதானப் பேச்சை முன்னெடுக்க முடியாமல் இருப்பதற்கு அடிப்படைக் காரணம், வெற்றிடத்தில் இருக்கின்றது. அரசுத் தரப்பில்தான் அது இருக்கின்றது.

இந்த விடயத்தில் அனுசரணையாளர்களும், சர்வதேசத் தரப்பினரும், நாட்டில் வாழும் மக்களும் கூடுதலான அக்கறை செலுத்தி அரசு பேச்சை ஆரம்பிக்கும் நிலையை உருவாக்க வேண்டும். இதுதான் எங்களது கூட்டான கருத்து.

மாவட்ட ரீதியாகக் கூட்டமைப்பின் அலுவலகங்களைத் திறக்க முடிவு செய்துள்ளோம. முதற்கட்டமாகத் திருகோணமலையில் தலைமை அலுவலகம் திறக்கப்படும். அதன்பின் ஏனைய மாவட்டங்களில் உப அலுவலகங்கள் திறக்கப்படும்.

திருகோணமலை மாவட்டத்தில் தலைமையகத்தை அமைக்கக் குழுவொன்று தெரிவு செய்யப்பட்டுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களும், புலிகளின் பிரதிநிதியும் அதில் இடம்பெறுவர்.

★ *கேள்வி:* இலங்கை - இந்திய பாதுகாபபு ஒப்பந்தம் குறித்து உங்கள் கருத்து என்ன?

● *பதில்:* அதுபற்றி இன்றும் கருத்துப் பரிமாறியுள்ளோம். நிச்சயமாக தமிழர்களுக்கும், இந்தியாவுக்கும் இடையில் ஒரு சந்தேகத்தை - முரண்பட்ட நிலைப்பாட்டை - ஏற்படுத்தக்கூடிய வகையில் சிலகாலமாக இலங்கை அரசு செயற்பட்டு வந்திருக்கின்றது.

இந்தியா ஒருபோதும் தமிழர்களுக்கு மாறாகச் செயற்பட முடியாது; செயற்படக் கூடாது என்பது எங்களது கருத்து. எமது கருத்து மட்டுமல்ல, எமது மக்களும் அதனையே விரும்புகிறார்கள்.

இந்தியாவுடன் இணக்கப்பாடான நிலையில் இருக்கவே தமிழ் மக்கள் விரும்புகிறார்கள். தமிழ் நாட்டில் வாழும் தமிழ் மக்கள் மட்டுமல்ல இந்தியாவில் வாழும் சகல மக்களும் இதனையே விரும்புவார்கள் என நாங்கள் கருதுகிறோம்.

சில நாள்களில் நடைபெறவுள்ள எமது நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் இது விடயமாக ஆழமாக ஆராய்ந்து, எடுக்கவேண்டிய நடவடிக்கை குறித்து முடிவு செய்யவிருக்கிறோம்.

★ *கேள்வி:* பேச்சை ஆரம்பிக்கும்படி அரசுக்கு அழுத்தம் கொடுக்கக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான நீங்கள் என்ன செய்யப்போகின்றீர்கள்?

● *பதில்:* எமது உறுப்பினர்கள் சர்வதேச சமூகத்துக்கு நிலைமையைத் தெளிவுபடுத்தி வருகின்றனர். பேச்சை ஆரம்பிக்காததில் தமிழர் தரப்பில் தவறு இல்லை. இதற்குப் பொறுப்பாளி அரசுதான், அரசுத்தரப்பில்தான் தவறு இருக்கின்றது.

-ஜே.வி.பி. பேச்சை ஆரம்பிப்பதை எதிர்க்கின்றது. பலவீனம், இயலாத்தன்மை என்பன அரசின் மத்தியில்தான் தங்கியுள்ளன. இதுவே எமது தெளிவான கருத்து. இதைச் சர்வதேச சமூகமும், மக்களும் புரிந்துகொள்ளவேண்டும் என்பதற்காக எமது முயற்சிகள் தொடரும்.

இந்தவிடயத்தில் நாமும், விடுதலைப் புலிகளும் உறுதியாக இருக்கின்றோம். எம்மிடையே பலவீனம் இல்லை. தொடர்ந்து பேச்சை ஆரம்பிக்க அழுத்தங்களைக் கொடுப்போம் - என்றார். (ஐ)




# பேச்சுக்குப் புலிகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசு இப்போதும் பேச்சுக்குத் தயார். ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி அடிப்படையிலேயே இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டும். இப்படித்தான் இலங்கை அரசும், விடுதலைப் புலிகளும் ஒஸ்லோவில் உடன்பட்டுள்ளனர்.

பேச்சுக்குப் புலிகள் வந்தால், அவர்களின் முன்மொழிவுகளைப் பற்றிப்பேசலாம். அரசின் முன்மொழிவுகளையும் கலந்தாலோசிக்கலாம். பேச்சை ஆரம்பிப்பதில் புலிகளுக்கு விருப்பமா? இல்லையா? என்பதை அவர்கள் முதலில் தெரிவிக்கவேண்டும்.

சந்திரிகா குமாரதுங்க இன்று 'ரெடி' என்றால் நாளை புலிக[illegible] பேச்சுக்குத் தயார் என்று சொல்கிறார்கள்.

அரசு எப்போதும் பேச்சுக்குத் தயார். புலிகள்தான் நேரத்துக்கு ஒரு காரணம் சொல்லி விலகிக்கொள்கிறார்கள்.

- இவ்வாறு தெரிவித்தார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. (ஐ-7)

# யாழ். வந்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பந்தப்பட்ட மணியம் என்ற நபர் ஜேர்மன் நாட்டில் இருந்து வந்த தமது உறவினர்களுடன் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிச் சென்றுகொண்டிருந்தசமயம் மேற்படி வாகனத்தைப் பொலீஸார் மோதரை, புத்தளம், நொச்சியாகம, அநுராதபுரம் ஆகிய பகுதிகளில் மறித்து சோதனை செய்துள்ளனர்.

அதன் பின்னர் நேற்று அதிகாலை 3 மணியளவில் அநுராதபுரம் - யாழ்ப்பாணச் சந்திப் பகுதியில் உள்ள சோதனைச் சாவடியை அது தாண்டிய பின்னர், பொலீஸார் எனத் தமமை அடையாளம் காட்டிக்கொள்ளாத நிலையில் சிலர் வாகனத்தை மறிக்க முற்பட்டனர் எனக்கூறப்படுகிறது. சந்தேகம் கொண்ட சாரதி வாகனத்தை நிறுத்தாமல் சென்றபோது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது. 'ஹைஏஸ்' வானின் முன் ஆசனத்தில் அமர்ந்து பயணம் செய்த வயோதிபரே உயிரிழந்திருக்கிறார். இவரது முதுகுப் புறத்தில் குண்டு துளைத்துச் சென்றுள்ளது. அவர் உயிரிழந்திருப்பது சுமார் இரண்டு மணித்தியாலங்களுக்குப் பின்னரே வானில் இருந்த ஏனையோருக்குத் தெரியவந்திருக்கிறது.

இறந்தவர் தனது பேரக்குழந்தையை மடியில் வைத்திருந்தபடி தூக்கத்தில் இருந்தார் என்றும் கூறப்படுகின்றது. இச்சம்பவம் தொடர்பாக வவுனியா பொலீஸார் விசாரணைகளை நடத்தியுள்ளனர். சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டிருக்கிறது. (ஐ-180)

# நீதிமன்றுக்கு கொண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மீண்டும் யாழ்.சிறைச்சாலைக்கு அழைத்துவருவதற்காகப் பொலீஸார் இவர்களைச் சிறைச்சாலை வாகனத்தில் ஏற்றியபோது, திடீரென வாகனத்தில் இருந்து பாய்ந்த இருவரும் தப்பி ஓடினர் என்று கூறப்படுகின்றது.

கரவெட்டி, துன்னாலையைச் சேர்ந்த சீக்கியன் எனப்படும் யோகன் மற்றும் பழனி அமன் ஆகிய இரு கைதிகளுமே தப்பி ஓடியிருக்கின்றனர். கைதிகளைப் பிடிப்பதற்காகப் பொலீஸார் தீவிர தேடுதல் வேட்டையை மேற்கொண்டுள்ளனர்.

நெல்லியடி பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.தர்மதாஸ தலைமையில் வல்வெட்டித்துறை, பருத்தித்துறை பொலீஸார் தேடுதலை நடத்திவருகின்றனர். (ஐ-70)

# கொரியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையர்களைக் கொரியாவில் வேலைக்கு அமர்த்துவது தொடர்பாக இந்த வருடம் ஜூன் மாதம் முதலாம் திகதி கொரியாவின் தொழிலாளர் மற்றும் மனிதவள அமைச்சுக்கும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் தற்பொழுது வெற்றிகரமாகச் செயற்படடுக்கொண்டிருக்கிறது. இச்சமயம் சட்ட விரோதமான முறையில் இலங்கையர்கள் கொரியாவில் தங்கி வேலைபார்ப்பது இந்த ஒப்பந்தத்தைப் பாதிக்கக்கூடும் என அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# பேச்சு முயற்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இரு தலைவர்களுக்கிடையில் பேச்சுக்கள் நடைபெறும் அதேவேளை, அரசுக்குள் அங்கம் வகிக்கும் ஜே.வி.பியினர் இது விடயத்தில் முரண்டுபிடிக்கும பிரச்சினையைக் களைய வேண்டும் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு மட்டுமே ஐ.தே.கட்சி தனது பூரண ஆதரவை வழங்கும்.

அரசு உத்தேசித்திருக்கும் - அரசமைப்பை மாற்றுவதற்கான - திட்டத்துக்கு ஐ.தே.க. ஒரு போதும் ஆதரவு நல்காது. அத்திட்டத்தை முழுமையாக எதிர்ப்போம். அது போன்று சபாநாயகரை அப்பதவியில் இருந்து நீக்குவதற்கு எடுக்கும் சதித்திட்டங்களுக்கும் இடமளிக்க மாட்டோம் என்பதையும் தெளிவாகக் கூறிக்கொள்ள விரும்புகிறோம்-என்றார் அவர். (ஐ-க)

**வெளிநாடுகளுக்கு பொருள்களை அனுப்பத் துரித சேவை**

வெளிநாடுகளில் உள்ள உங்கள் அன்பு உறவுகளுக்கு அனுப்பவேண்டிய கடிதங்கள், ஆவணங்கள், வீடியோ கசற்றுக்கள், சீடிக்கள், விருப்பமான உணவுப்பொருளகள், உடுப்பு வகைகள், அன்றாட பாவனைப் பொருளகள் ஆகியவற்றை உங்கள் வீடுகளிலேயே வந்து பொறுப்பேற்று விமான மூலம் வெளிநாடுகளின் எந்த மூலையிலேயும் வாழுகின்ற உங்கள் உறவுகளின் வீடுகளில் ஒப்படைக்க நாங்கள் ரெடி.

எங்களிடம் பொருள்களை ஒப்படைக்க நீங்கள் ரெடியா?

உடனடியாகத் தொடர்புகொள்ளுங்கள்:

M.நிஷாந்தன்: 077 3115873

E.Y. பற்றிக் : 077 113073

இஷா. ரெக்

(C-39074)(33-11-14) பஸ்நிலையம் முன்பாக, நெல்லியடி.




இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.11.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.